கிராம நலம்



- MAR 1962





"சுத்தம் சோறு போடும்"

தேசமெங்கும், சமூக மெங்கும் சுகாதாரம் நன்றாய் நிலவ வேண்டுமென்ற நல்லுணர்ச்சி, நம்மிடையே அமையவில்லை. எப்படியாயினும், தினம் குளிக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால் குளிப்பதற்கும், கைகால் அலம்புவது முதலிய பிற வேலைகளுக்கும் நாம் உபயோகிக்கும் கிணற்றையோ, குளத்தையோ, வாய்க்காலையோ அசுத்தமாக்கத் தயங்குவதில்லை. இந்தக் குறைபாட்டை, பெரும் பாவமென்றே நான் கருதுகிறேன். நம் கிராமங்களும், எவ்வளவோ புனிதமான நம் நதிகளின் புனிதமான கரைகளும் மிகவும் இழிந்த நிலையில் இருப்பதற்கும், ஆரோக்கிய மின்மையால் வரும் பல வகை நோய்களுக்கும், இந்தக் குறைபாடே காரணமாகிறது."

மகாத்மாவின் மணிமொழி

உலகத்திலேயே மிகப்பெரிய தேர்தல்

தேர்தல் என்பது மிகவும் பழகிப் போனவார்த்தையாக இருக்கலாம்; ஆனால் ஜனநாயகத்தின் தன்மையை வேறு வார்த்தைகளால் துல்லியமாக விளக்க முடியாது; மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்படுகிற மக்கள் சர்க்கார்தானே ஜனநாயகத்தின் அடிப்படை.

மக்களின் மாபெரும் சக்தி, அவர்கள் விரும்புகிறவர்களைக் கொண்டே ஆட்சி நடத்தும் உரிமை, வருகிற பிப்ரவரி மாதம் 17-ந் தேதி முதல் 24-ந் தேதி வரையில் நடைபெறும் பொதுத்தேர்தல்களின் போது, மீண்டும் ஊர்ஜிதப் படுத்தப்படும்.

இதற்கு முன் இரண்டு தடவைகள், 1952-லும், 1957-லும் இந்த ஜனநாயக உரிமை பயன்படுத்தப்பட்டிருக்கிறது; சீதோஷ்ண நிலை, கல்வியின்மை, அல்லது தூரத்தில் இருப்பதினாலுள்ள சிரமம் போன்ற எதுவும் இந்த சுதந்திர உரிமையைப் பயன்படுத்துவதற்குத் தடையாக இல்லையென்பதைத் தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன. மக்களின் அசிரத்தையான போக்கு ஒரு வேளை தடையாக இருக்கக்கூடும்.

முதலாவது தேர்தலில், மொத்தம் 17 கோடி 30 லட்சம் பேரில், 8 கோடி 86 லட்சம் பேர் (51.15 சத விகிதம்) தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். இரண்டாவது தேர்தலில், 19 கோடி 30 லட்சம் பேரில், 9 கோடி 20 லட்சம் பேர் (47.57 சத விகிதம்) வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர்; சதவிகித அளவு குறைந்திருந்தாலும், பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் திருப்திகரமானதுதான்.

இப்போது 21 கோடி வாக்காளர்கள் இருக்கின்றனர்; அதாவது பிரிட்டன் ஜனத்தொகையைவிட நான்கு மடங்கு வாககாளர்கள். தேர்தல் தொகுதிகளும், இரட்டை அங்கத்தினர் தொகுதிகளாகவும் (91 லோக் சபை 584 சட்ட சபை—பொதுத் தொகுதிகள், ஒதுக்கப்பட்ட தொகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருப்பதால்) பெருகியிருக்கின்றன.

சென்ற தடவை 19 நாட்களாகத் தேர்தல்கள் நடைபெற்றன. இப்போது ஒரு வாரத்துக்கும் குறைந்த காலத்தில் தேர்தல் முடிந்துவிடும்.

இப்படியெல்லாமிருந்தும், வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்வதில் எந்தவிதச் சிரமுமிருக்காது. வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை சுமார் 2½ லட்சமாக அதிகரித்திருக்கிறது. சுமார் 900 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி வீதம் இருப்பதால், வாக்குகளைப் பயன்படுத்துவதற்காக ஒரு மைல் தூரத்துக்கு அதிகமாக நடந்து செல்ல வேண்டியிருக்காது. தேர்தல் அதிகாரிகளின் எண்ணிக்கையும், லோக் சபைத் தொகுதிக்கு, அல்லது இரண்டு மூன்று சட்ட சபைத் தொகுதிகளுக்கு ஒருவர் வீதம், இருக்கும்படி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

வாக்குப் பதிவு மிகவும் ரகசியமாக நடைபெறும்படிப் பார்த்துக்கொள்ளப்படும்; இவ்வுரிமை, அரசியல் சட்டத்தின்படி உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது. இப்போதைய தேர்தல் முறைப்படி, வாக்குச் சீட்டுகளிலேயே அடையாளமிட்டு வாக்காளர் விருப்பத்தைப் பதிவு செய்துகொள்ளலாம்.

வாக்குச் சீட்டிலேயே, குறிப்பிட்ட தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர்களும், அவர்களுடைய கட்சியின் சின்னமும் அச்சடிக்கப்பட்டிருக்கும்; சென்ற இரண்டு தேர்தல்களிலும் இருந்ததுபோல் ஒவ்வொரு அபேட்சகருக்கும் தனித்தனியாக வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்காது. சின்னங்களும் அவற்றில் ஒட்டப்பட்டிருக்கமாட்டா. வாக்காளர், வாக்குச் சீட்டிலேயே, அவர் விரும்பும் அபேட்சகரின் பெயருக்கு எதிராக சின்னத்தின் மீது இதற்கெனகுறித்த அடையாளமிடவேண்டும்; இந்த அடையாளம் தாங்கிய முத்திரை, வாக்குச் சாவடிகளில் கொடுக்கப்படும்.

இந்தப் புதிய முறை கையாளப்படுவதால் 20 லட்சம் வாக்குப்பெட்டிகள் மிச்சப்படும்; சென்ற தேர்தலில் 26 லட்சம் வாக்குப் பெட்டிகள் தேவைப்பட்டன; இப்போது 2½ லட்சம் பெட்டிகள் போதும்.

சட்டசபை வாக்குச் சீட்டுகளுக்கும், லோக்சபை வாக்குச் சீட்டுகளுக்குமுள்ள வேறுபாடு தெளிவாகத் தெரிவதற்காக, அவையிரண்டும் வெவ்வேறு நிறங்களில் (சட்ட சபைக்கு இளம் சிவப்புச் சீட்டு; லோக் சபைக்கு வெள்ளைச் சீட்டு) இருக்கும். வாக்குச் சாவடியில் முதலில் சட்ட சபைக்கான வாக்குச் சீட்டு தரப்படும்; சட்ட சபைக்கான வாக்கைப் பதிவு செய்த பிறகு, லோக் சபை வாக்குச் சீட்டு தரப்படும். லோக் சபை வாக்குப் பதிவும் சட்ட சபைப் பதிவு மாதிரித்தான். வாக்குச் சீட்டை எடுத்துக்கொண்டு, அதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் மறைவான இடத்தில் சென்று, தாம் விரும்பும் அபேட்சகருக்கு எதிரில் சின்னத்தில் முத்திரையிடவேண்டும். பிறகு சீட்டை மடித்து வாக்குப் பெட்டியில் போடவேண்டும்.

லோக் சபை வாக்குச் சீட்டுகளையும் சட்ட சபை வாக்குச் சீட்டுக்களையும் ஒரே பெட்டியிலேயே போடவேண்டும்; இதனால் பதிவான வாக்குகளைச் சுலபமாக எண்ண முடியும்; வாக்குப் பதிவும் துரிதமாக நடைபெறும்.

இந்தியா முழுவதும் வாக்குப் பதிவு முடிவதற்கு முன், முடிவுகள் அறிவிக்கப்படமாட்டாது; இதனால் ஒரு தொகுதியில் ஏற்படும் வெற்றி தோல்வி, இன்னொரு தொகுதியைப் பாதிக்காது. எல்லா முடிவுகளும் பிப்ரவரி 25-ந் தேதி முதல் 28-ந் தேதிக்குள்ளாக, நான்கு நாட்களில் தெரிந்துவிடும்.

வாக்காளர்கள்தான் இந்நாட்டு மன்னர்கள்; அவர்களுடைய முடிவு சுதந்திரமானதாகவும், இறுதியானதாகவும் இருக்கவேண்டும்.

Regd. No. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1962

" ஒன்றுபட்ட தேசிய இன உணர்ச்சி . . . "

" இதற்கு முன்னால் நாம் ஒன்றுபட்ட ஒரே தேசிய இனமாக இருந்ததில்லை; அப்படி ஒரே தேசிய இனமாவதற்கு இன்னும் பல நூற்றாண்டுகள் ஆகும்' என்று ஆங்கிலேயர் நமக்குப் போதித்திருக்கிறார்கள். இது முற்றிலும் ஆதாரமற்றது. அவர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால், நாம் ஒரே தேசிய சமுதாயமாகவே இருந்தோம். ஒருமை எண்ணம் நமக்கு உத்வேகம் அளித்து வந்தது. நமது வாழ்க்கையின் தன்மை ஒரே மாதிரியானதாக இருந்தது. நாம் ஒரே தேசிய சமுதாயமாக இருந்ததினாலேயே, ஒரே ஆட்சியை அவர்களால் அமைக்க முடிந்தது. பின்னால் நம்மைப் பிளவுபடுத்தி விட்டார்கள் ".

" நாம் ஒரே தேசியச் சமுதாயமாக இருந்ததினால், நமக்குள் வேறுபாடுகள் இருந்ததில்லை என்று சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால், நம் பெரியவர்கள் கால்நடையாகவோ, அல்லது மாட்டு வண்டிகளிலோ இந்தியா முழுவதிலும் பயணம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருவர் மொழியை இன்னொருவர் கற்றுக்கொண்டார்கள். அவர்களுக்குள் வேறுபாடு என்பது இல்லை. தெற்கில் சேதுபந்தமும் (இராமேசுவரம்), கிழக்கில் ஜகந்நாதமும், வடக்கில் அரித்துவாரமும் யாத்திரைத் தலங்களாக அமைவதற்கு, முன் யோசனையோடு கூடிய நமது மூதாதைகளின் நோக்கம் எதுவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர்கள் முட்டாள்கள் அல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். கடவுள் வழிபாட்டை வீட்டில் இருந்தபடியே செய்துகொள்ளலாம் என்பதையும் அவர்கள் அறிவார்கள். நேர்மையின் ஒளி யாருடைய உள்ளத்தில் பிரகாசிக்கிறதோ அவர்களுடைய வீட்டிலேயே கங்கையும் இருக்கும் என்பதையும், அவர்கள் நமக்குப் போதிக்கிறார்கள். இந்தியாவைப் பிரிக்க முடியாத ஒரே நிலப்பரப்பாக இயற்கை அமைத்திருக்கிறது என்பதையும் கண்டார்கள். இவ்வாறு கூறி, இந்தியாவின் பல பகுதிகளிலும் புண்ணிய தலங்களை அமைத்தார்கள். இதன் மூலம் உலகத்தின் வேறு எந்தப் பகுதியும் கண்டறியாத வகையில் ஒன்றுபட்ட தேசிய இன உணர்ச்சியை மக்கள் உள்ளங்களில் எழுப்பினார்கள்".

—மகாத்மா காந்தி.

கிராம நலம்

மார்ச் '62 13 ந.பை



பிரார்த்தனையின் சக்தி

என் வாழ்வைக் காப்பாற்றி வருவது பிரார்த்தனை. அது இல்லாவிட்டால் நான் என்றோ பைத்தியக்காரனாயிருப்பேன். பொது வாழ்விலும் தனி வாழ்விலும் எனக்கு மிகக் கடுமையான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. அவை என்னை துயரத்தில் ஆழ்த்தின. ஆனால் அதனின்றும் நான் மீள முடிந்ததென்றால் அதற்குப் பிரார்த்தனையே காரணம். கடவுள் நம்பிக்கை, என்னிடம் அதிகம் ஆகஆகப் பிரார்த்தனையின்பால் எனக்கு அடங்காத ஆவல் உண்டாயிற்று. உடம்புக்கு உணவு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வாறு ஆன்மாவுக்குப் பிரார்த்தனை இன்றியமையாதது என்று உணரலானேன். உண்மையைச் சொன்னால், ஆன்மாவுக்குப் பிரார்த்தனை தேவையாய் இருப்பது போல், உடம்புக்கு உணவு அவ்வளவு தேவையில்லை. இத்தகைய வழிபாடு, அல்லது பிரார்த்தனை வெறும் அலங்காரம் அல்ல ; அது உதட்டினின்றும் வருவதல்ல ; உள்ளத்தின் ஆழத்தினின்றும் பிறப்பதாகும்.

—மகாத்மாவின் மணிமொழி.

கிராம நலம்

“ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?”

—பாரதியார்.

மாடி 7 | மார்ச் 1962 | படி 6

மாதர் முன்னேற்றம்

மாதர் முன்னேற்றம், சமுதாய முன்னேற்றத்திற்கு, மிகவும் அடிப்படையானதாகும். மாதர்களைப் பிற்பட்ட நிலையில் வைத்துவிட்டு, ஆக்கப்பணிகள் எவ்வளவு புரிந்தாலும், முழுப்பயனை நாம் பெறமுடியாது. பரம்பரை பரம்பரையாக, நம் சமுதாயத்திலே நிலவி வந்துள்ள பழக்க வழக்கங்கள் காரணமாக, மாதர் சமுதாயம் கணிசமான அளவுக்கு முன்னேற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

இந்த அவல நிலையை மாற்றியமைக்கவே புதிய பஞ்சாயத்து ஆட்சியில், மாதர் முன்னேற்றத்தை மையமாகக்கொண்டு, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக பிரசவ சம்பந்தமான பணிகளுக்கு உதவி செய்வது குறித்து தமிழ்நாடு அரசாங்கம், ஜனவரி மாதத்தில் ஒரு முக்கிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (விவரம் XV-ம் பக்கம் பார்க்க). பிரசவ வசதிகள் செய்து தருவதோடு குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கான சூழ் நிலையை உருவாக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக மூன்று குழந்தைகளைப் பெற்றுவிட்ட தாய்மார்களுக்கும் தந்தைமார்களுக்கும் கிராமப்பகுதிகளில் குடும்பக்கட்டுப்பாடு விஷயமாக எல்லா தகவல்களையும் எடுத்துச் சொல்லி, தக்க ஆலோசனை கூறுவதற்கான வசதியை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

புதிய பஞ்சாயத்து ஆட்சியின் முக்கிய நோக்கங்கள், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் ஆகும். உணவு உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை கிராமப்புறங்களில் உள்ள மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அதைப் பற்றி அதிகமாக வலியுறுத்தத் தேவையில்லை. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொள்கின்ற வகையில் பணியாற்றப்படவேண்டும். கடந்த நூற்றாண்டில், அதாவது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்பு, நம் சமுதாயத்தில் தொத்து நோய்களைத் தடுக்க அம்மை குத்துதல் என்ற வழக்கத்தை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்த பொழுது ஆட்சேபனைகள் பல எழுப்பப் பட்டன. விஞ்ஞான அடிப்படையில் கண்டு பிடிக்கப்பட்ட அம்மை குத்துதல் என்ற ஏற்பாட்டினால் விளைந்த நற்பயனை இப்போது நாம் அனுபவரீதியாக உணருகிறோம். பல நூற்றாண்டுகளாக சமுதாயத்தை வாட்டி வதக்கி வந்த தொத்து நோய்களைத் தடை செய்ய இந்த ஏற்பாடு மிகவும் உதவி புரிந்தது என்பதை நம் நாட்டுச் சுகாதார வரலாறும், புள்ளி விவரங்களும் விளக்கும். அதே போல் குடும்பக் கட்டுப்பாடு முறையும் கால ஓட்டத்தில் பயன் அளிக்கத் தக்க விஞ்ஞான முறையாகும். எனவே குடும்பக் கட்டுப்பாடு முறையின் அவசியத்தை கிராமப்புறங்களில் உள்ள மாதர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு விட்டால் நாட்டின் நல்வாழ்வு பன்மடங்கு உயரும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆசிரியர்.

அட்டைப்படம் : சென்னையில் மிகப் பிரமாண்டமான அளவில் நடைபெற்ற இரண்டாவது தேசிய விவசாயப் பொருட்காட்சி எல்லோருடைய கருத்தையும் கவர்ந்து நின்றது. பொருட்காட்சியில் சொல்லொணா எழிலுடன் திகழ்ந்த தமிழ்நாடு அரசாங்க அரங்கின் முகப்பினை அட்டைப் படத்தில் காணலாம். (தமிழ்நாடு அரசாங்க அரங்கின் சிறப்பான அம்சங்கள் பற்றிய விவரங்களுக்கு [illegible]-ம் பக்கம் பார்க்கவும்.)

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

"வடமலைக் குறிச்சி"யில் ஆக்க வேலைகள்

—:o:—

நான் ராஜ்யத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்குட்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் போய் பார்வையிடும்போது ஆங்காங்குள்ள கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் என் மீது அன்புகொண்டு வரவேற்று உபசரிக்கிறார்கள். சில பஞ்சாயத்துக்களில் வரவேற்பதுடன் மட்டுமல்லாமல், தங்களுடைய பஞ்சாயத்தின் மூலம் ஊருக்குச் செய்துள்ள நல்ல வேலைகளைப் பற்றிய அறிக்கையையும் வாசித்துக் காட்டுகிறார்கள். நான் செல்லும் இடங்களில் காணும் நல்ல வேலைகளை அவ்வப்போது "கிராம நல"த்தின் மூலம் வெளியிடுவது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.

சென்ற மாதம் இராமநாதபுரம் ஜில்லாவுக்குச் சென்றிருந்தேன். அந்த ஜில்லாவில் பஞ்சாயத்துக்களுக்கு உதவியாக சில கிராமங்களில் கிராம சபைகள் ஏற்படுத்தி வேலை செய்ய ஆரம்பித்திருக்கிற விவரத்தை, கலெக்டர் அவர்கள் என்னிடம் சொல்லியதுடன், சில கிராமங்களுக்குச் சென்று பார்வையிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அங்ஙனமே, நானும், கலெக்டர் அவர்களும் சில கிராமங்களுக்குச் சென்றிருந்தோம். விருதுநகர் வட்டாரத்திலுள்ள வடமலைக்குறிச்சி என்ற ஒரு கிராமத்திற்குச் சென்றபோது அங்கு நடைபெற்றுவரும் வேலைகளையும், அந்தக் கிராமத்திலுள்ள இளைஞர்கள் ஊர் வளர்ச்சிக்காகக் கொண்டுள்ள ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கண்டபோது, என் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. இவற்றையெல்லாம் பார்த்தபோது, காந்தியடிகள் காண விரும்பிய 'கிராம சுயராஜ்யங்கள்' ஏற்படும் நாள் சீக்கிரத்தில் வந்துகொண்டிருப்பதாகவே எனக்குப் புலனாகியது.

வடமலைக்குறிச்சி பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ சு. தனஞ்செயன் அவர்கள், தன்னை மறந்து ஊர்ப் பணியில் ஈடுபட்டுள்ள நல்ல மனம் படைத்த ஓர் இளைஞர். அந்தக் கிராமத்திற்கு நாங்கள் சென்றிருந்த போது, அவர் வாசித்த அறிக்கையின் பிரதி ஒன்றை வாங்கி வந்தேன். அந்த அறிக்கையை மிகவும் மகிழ்ச்சியுடன் "கிராம நல"த்தில் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். எல்லாத் துறைகளிலும் நல்ல முறையில் வளர்ந்து வரும் வடமலைக் குறிச்சியின் நிர்மாணப் பணியைப் படிக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுடைய மனத்தில் தங்களுடைய ஊரிலும் இது போன்ற நல்ல வேலைகளைச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும் என்றே நம்புகிறேன்.

கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

"எங்கள் கிராமத்தின் பெயர் வடமலைக்குறிச்சி. இது விருதுநகர் பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த கிராமம். இக்கிராமம், விருதுநகருக்கு வடமேற்கே 4 மைல் தொலைவில் அமைந்திருக்கிறது. இக்கிராமத்தின் ஜனத்தொகை 1,500 ஆகும்.

எங்கள் கிராம சபை—

எங்கள் கிராமத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக கிராமச் சபை இயங்கி வருகிறது. இக்கிராமச் சபையின் மொத்த அங்கத்தினர்கள் 30. இவர்கள் ஆண்டுதோறும் தை மாதம் எங்கள் கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒவ்வொரு தமிழ் மாதம் 5-ந்தேதி கூடுவர். அப்பொழுது கிராமத்தின் பொது விவகாரங்களைப் பற்றிப் பேசி முடிவு கட்டுவர். அம்முடிவே இக்கிராமத்தின் முடிவாகும். இக்கிராமக் கூட்டத்திற்கு மாதம் ஒரு அங்கத்தனர் தலைமை வகித்து கூட்டத்தை நடத்துவர். அவ்வாறு 12 மாதங்களுக்கு யார் யார் ஒவ்வொரு மாதமும் தலைமை வகிக்க வேண்டுமென்ற விஷயத்தையும் தை மாதம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதி நிதிகள் அன்றே கூட்டத்தைக் கூட்டி நிர்ணயித்துவிடுவது வழக்கம். மாதாமாதம் நடக்கும் இக்கூட்டத்திற்கு எல்லா அங்கத்தினர்களும் வருவது கட்டாயமாகும். காரணம் காட்டாமல் கூட்டத்திற்கு வராமல் நின்றுவிட்ட அங்கத்தினருக்கு அபராதம் போட்டு வசூலிப்பது வழக்கம். இவ்வாறு 40 ஆண்டுகளாக தலைமைப் பண்புகளை வளர்த்து வருவதுடன் ஒப்படைக்கப்பட்ட வேலைகளைத்

திறமையுடனும், பொறுப்புடனும் ஏற்றுநடத்த கிராமத் தலைவர்கள் பலர் இக்கிராமத்திலிருக்கின்றனர். என்று பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் கூறிக்கொள்ளுகிறோம்.

எங்கள் கிராமத்திற்கு வேண்டிய சகல சௌகரியங்களையும், தனிப்பட்டவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் இந்தக் கிராமச் சபை கவனித்துக் கொடுத்து கொண்டுவருகிறது. இனியும் கவனித்து வரும். பஞ்சாயத்து நிர்வாகம் ஏற்படுவதற்கு முன்பே பல வேலைகளை எங்கள் கிராமச் சபையின் மூலமே நிறைவேற்றி வந்துள்ளோம்.

கிராமச் சபையின் முக்கிய வேலைகள் :

(1) கிராமப் பொது வேலைகளுக்கு வேண்டிய நிதி வசதிகளைத் தேடுதல், (2) ஊர்க் காவலுக்கு ஏற்பாடு செய்தல், (3) தனிப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளை கிராமத்தின் மூலமாகவும், சர்க்கார் இலாகாக்களின் மூலமாகவும் பெற்றுத் தருதல், (4) எங்கள் கிராம குடும்பங்களுக்குள் வேற்றுமைகள் ஏற்படாமல் தடுத்தல், (5) இக்கிராம வாசிகளுக்கும் எங்களைச் சுற்றியுள்ள கிராம வாசிகளுக்கும் சுமுகமான உறவு முறையை வைத்துக் கொள்ளுதல், (6) கிராமத்திற்குள் ஏற்படும் தகராறுகளை பெரும்பான்மையாக நீதிமன்றத்திற்குச் செல்லாமல் கிராமச் சபையின் மூலமாகத் தீர்த்து வைத்தல், (7) கிராம மக்களிடையே முக்கியமாக இளைஞர்களிடையே ஒழுக்கத்தையும் நன் நடத்தையையும் கடைப்பிடிக்கச் செய்தல், (8) கிராமத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் கட்டாயமகாப் பள்ளிக்கு அனுப்பி வைத்தல், (9) கிராம மக்களின் வருவாயை உயர்த்த கிணறு வெட்டுதல் நூதனவிவசாயத் தொழில் கருவிகளைப் பெற தூண்டுதல் முதலியவைகளாகும்.

பொருள் வருவாய்—

இக்கிராம நலனுக்கு வேண்டிய பல பொதுக் காரியங்களுக்கு "மகிமை" வசூலித்தல், பிரத்தியேக நிலவரி போடுதல் மூலமாக சென்ற நாற்பது ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையிலும் வசூலித்து பல நற்பணிகள் இக்கிராம மறுமலர்ச்சிக்காகச் செய்துள்ளோம்.

எங்கள் கிராமத்தின் வருவாயைக்கொண்டே, எங்கள் கிராமத்தில் செய்துள்ள வேலைகள் :

	மதிப்பு ரூபாய்
1 ஊர் பொதுச் சாவடி	10,000
2 ஹரிஜனங்களுக்குச் சாவடி	8,000
3 ஊர் மக்கள் வழிபடக் கட்டப்பட்ட கோவில்கள்—	
(i) முத்தாலம்மன் கோவில் ..	5,000
(ii) பெருமாள் கோவில்	5,000
(iii) அம்மன் கோவில்	500
(iv) கோவில் கிணறு	1,000
4 கிராம மக்களின் குடிதண்ணீர்க் கிணறு	5,000

	மதிப்பு ரூபாய்.
5 ஊருணிகள் இரண்டு	3,000
6 சாந்தி பவனம் (ஆசிரியர்கள் குடியிருப்பு) 6 வீடுகள்.	20,000
7 ஆசிரியர்களுக்கென கட்டிக்கொண்டு இருக்கும் வீடுகள் 4.	8,000
8 பள்ளிக்கூடத்திற்கு இடம் வாங்கிக் கொடுத்தது.	1,500
9 உயர்நிலைப் பள்ளிக் கட்டிட மனைவாங்கிக் கொடுத்தது.	2,700
10 உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த முன் பணம் கட்டியது.	4,400
11 விவசாய கூட்டுறவுக் கிடங்குக்கு மனை வாங்க.	1,000
12 பஞ்சாயத்து போர்டு கட்டிடம்	1,000
13 ஆரம்ப சுகாதாரக் கிளை நிலையம் கட்ட அ. இராமனுதன் அவர்கள் நில நன்கொடை.	1,000
மொத்தம்..	76,100

இவைகளைத் தவிர்த்து ஊர்க் காடுகளை காவல் புரிவதற்காக ஊர்க் காவலர்கள் நால்வரை நியமித்து அவர்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு 1,200 ரூபாய் செலவு செய்து கொண்டு வருகிறோம். இக்காவலர்களுடைய பொறுப்பு கிராமக் காடுகளுக்கு அழிவு ஏற்படாமல் கண்காணித்துக் கொள்ளுதலாகும். கண்காணிப்பின் தவறுதல் காரணமாக பிறரால் ஏதேனும் நஷ்டம் ஏற்படுமேயானல் காவற்காரர்கள் அதற்கு முழுப் பொறுப்பாளிகள். காவற்காரர்கள் நஷ்டத்திற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டு பிடித்துவிட்டால் குற்றவாளிகளை ஊர்ச்சபை கூடி விசாரித்து அபராதம் விதிப்பார்கள். போடும் அபராதத்தில் நஷ்ட ஈடு கொடுத்தது போக, மீதியுள்ள தொகையில் ஊர்க்காவலர்களுக்குப் பாதியும் மீதி பாதி பாகம் மகிமை நிதியில் சேர்க்கப்படும். கிராம மகிமையை வசூலிக்க ஒரு கணக்குப்பிள்ளை ஊர் பொதுவிலேயே நியமிக்கப் பட்டிருக்கிறார். இவருக்கு மாத ஊதியம் கிராம சபை பொதுநல நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

பஞ்சாயத்துத் தோற்றம்—

எங்கள் கிராமத்தில் ஊர்ச் சபை திறமையாக வேலை செய்துகொண்டிருந்தபோதிலும் சட்டபூர்வமான ஒரு ஸ்தாபனம் இருத்தல் அவசியமென உணர்ந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாயத்து தோற்றுவிக்கப்பட்டது. இப் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் யாவரும் தலைவர் உட்பட கிராம சபை உறுப்பினர்களாவர். சட்டபூர்வமான பஞ்சாயத்து ஸ்தாபனம் எங்கள் கிராமத்தில் ஆரம்பமானதிலிருந்தே **எங்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களும் தலைவர்களும் போட்டியின்றி ஏகமனதாகவே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.** பஞ்சாயத்து ஸ்தாபனம் சட்டபூர்வமான ஸ்தாபனமாக இருந்தபோதிலும் பஞ்சாயத்து

செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் கிராமச் சபையின் முன் அனுமதி பெற்றே செய்வது வழக்கம். சுருங்கக் கூறின் கிராமச் சபையின் முடிவே பஞ்சாயத்துத் தீர்மான மாக உரு எடுத்து; அவை எங்கள் கிராமத்தில்செயல் படுகிறது.

சமூக நலத் திட்டமும் பஞ்சாயத்தும்—

எங்கள் கிராமத்தில் சர்க்கார் உதவியின்றி செய்த பணிகள் போக சமுதாய நலத் திட்டத்தின் கீழும், பஞ்சாயத்து யூனியன் அமைப்பு முறையின் கீழும், மொத்தம் ரூபாய் 88,796 செலவிட்டு பல வேலைகளை மேற்கொண்டு செய்துள்ளோம். இதில் சர்க்கார் உதவித் தொகை பங்கு ரூ. 55,878–ம், பஞ்சாயத்து நிதியின் பங்கு ரூ. 10,895–ம் மக்கள் பங்குத் தொகை ரூ. 22,023–ம் ஆகும். மேற்கொள்ள இருக்கும் வேலைகள் பல உள்ளன. 36,000 ரூபாய் செலவில் இவ்வேலைகள் செய்து முடிக்கப்படும்.

விவசாயம்—

எங்கள் கிராமம் பெரும்பான்மை விவசாயிகளையுடையது. எங்கள் ஊரைச் சார்ந்த நிலங்களுள் 350 ஏக்கர். நஞ்சை நிள். 1,150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நீர்ப்பாசனத்திற்காக ஒரு கண்மாய் உள்ளது. இக்கண்மாயின் தண்ணீர் 45 நாட்களுக்கே பாசனம் தருவதால் அதிக நாட்கள் பாசன வசதி தருவதன் பொருட்டு சுமார் 45,000 ரூபாய் செலவில் மணல்வாரி கட்ட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மேலும் அதிக நிலங்களை நீர்ப்பாசன வசதிகளுக்குள் கொண்டுவர தனிப்பட்ட நில உரிமைக்காரர்களை அடிக்கடி கிராமச் சபைகள் தூண்டியதின் காரணமாக இன்று 60 பாசன கிணறுகள் இக்கிராமத்திலிருக்கின்றன. இவற்றில் 30 கிணறுகளுக்குப் பம்பு செட்டுகள் அமைத்தும் அமைக்கப்படுகின்ற நிலையிலும் இருக்கின்றன. இக்கிராம நிலங்களுக்குத் தேவையான உர வகைகளில் சுய நிறைவு பெற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கியமாக ஒவ்வொரு விவசாயியும் கம்போஸ்ட் உரம், தொழு உரம் தயாரிக்க இரண்டு குழிகளுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளோம். குறைந்தது ஒவ்வொரு விவசாயியும் ஒரு எருக்குழி அமைத்தே தீரவேண்டுமென தீர்மானித்துள்ளோம். இத்திட்டம் இன்னும் ஆறு மாதத்திற்குள் பூரணமாக செயல்பட்டுவிடும் என நம்புகிறோம். எல்லா விவசாயிகளுக்கும் நவீன விவசாயக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் நவீன விவசாயக் கருவி இல்லாத விவசாயியே இல்லையென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கிராம மக்களின் முதுகெலும்பு விவசாயம். விவசாயத்திற்கு முதுகெலும்பு கால்நடை என்பதை எங்கள் கிராம மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். எங்கள் கிராமதிற்காக ஒரு பொலி காளை வைத்திருக்கிறோம். 16 பொலி ஆட்டுக் கிடாக்களையும் வைத்திருக்கிறோம். நல்ல பசுமாடுகளையும் வைத்திருக்கிறோம். எங்கள் ஊரில் பால் பண்ணை ஒன்றும் நடைபெற்று வருகிறது. கிராமத்தில் கோழிகளின் தரத்தை உயர்த்தி கிராமத்திற்கு வேண்டிய முட்டைகளைக் கணிசமான அளவில் பெற எல்லாக் கோழிகளையும், ஜாதி வெள்ளைக் கோழி மயமாக்க உத்தேசித்து முதல் திட்டமாக நூற்றைம்பது வெள்ளைச் சேவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு கோழிப் பண்ணைகள் இக்கிராமத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு பண்ணையிலும் ஐம்பது கோழிகள் இருக்கின்றன.

கூட்டுறவு—

இக்கிராமத்திலுள்ள எல்லாக் குடும்பங்களையும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம். பலநோக்குக் கூட்டுறவு சங்கமும், கூட்டுறவுப் பால் பண்ணையும்,இக்கிராமத்தில் இயங்கி வருகின்றன. கூடிய விரைவில் தானிய சேமிப்புக் கிடங்கு ஒன்றும் கட்டப்படும். கூட்டுறவு விவசாயப் பண்ணை அமைப்பதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுகிறது.

இவைகளைத் தவிர்த்து எங்கள் ஊரைச் சார்ந்த பஞ்சாயத்து யூனியன் ரோடின் இரு புறங்களிலும் பலன் தரும் மரங்களை வைக்க எங்கள் கிராம சபையில் தீர்மானித்துள்ளோம். பஞ்சாயத்தில் தீர்மானம் செய்து, விருதுநகர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்களுக்கு அனுப்ப உத்தேசித்துள்ளோம்.

கைத்தொழில்—

இக்கிராமத்தில் 75 இராட்டைகள் வேலை செய்கின்றன. மேலும் 25 பெண்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்காக காகிதப் பைகள், உறைகள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனம் ஒன்று 30,000 ரூபாய் செலவில் அமைக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. சிறு சேமிப்பில் ரூ. 3,000 முதலீடு செய்திருக்கிறோம்."

இரண்டாவது தேசிய விவசாயப் பொருட்காட்சி

தமிழ்நாட்டு அரங்கம்

சென்னையில் நடைபெற்ற தேசிய விவசாயப் பொருட்காட்சியில்த மிழ்நாடு காட்சி அரங்கம்தான் மிகவும் பெரியது. 63,000 சதுர அடி பரப்புள்ள இடத்தில் இது மிகவும் கம்பீரமாக அமைந்திருந்தது. விவசாயப் பிரிவு இப்பரப்பின் பாதிக்கு மேலான இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. செய்தித்துறை, கால்நடை, மீனளம், வனத் துறை, கதர்-கிராமக் கைத்தொழில்கள், மாதர் நலம், பொதுச் சுகாதாரம், கூட்டுறவு, கைத்தொழில்—வாணிபம், நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரிவுகளும் இப்பகுதியில் அடங்கியிருந்தன. தமிழ்நாடு அலங்கார அரங்கத்தில் போதுமான இடம் இல்லாத காரணத்தால், 63,000 சதுர அடி பரப்பில் மின்சாரத்துறையினர் ஒரு தனி அலங்காரப் பகுதியை அமைத்திருந்தனர்.

தமிழ்நாடு அரங்கத்தின் நுழை வாசல் மிகவும் உயர்ந்தது. தூரத்தில் இருப்பவர்களும் காணும் வண்ணம் காட்சி அளித்தது. உயர்ந்து கம்பீரமாகத் தோன்றும் இந்தக் காட்சி மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இந்த நுழைவு வாசலின் உச்சியில் யானைகளைக் கட்டிப் போரடித்தல், தமிழ் மறத்தி புலியை விரட்டுதல், ஆலோலம்பாடி ஒரு பெண் பறவைகளை விரட்டுதல் ஆகிய அழகிய காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

" மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை "

என்னும் "அல்லி அரசாணிமாலை"க்கு விளக்கமாக அமைந்திருப்பதே யானைகள் போரடிக்கும் காட்சியாகும். இப்பகுதியின் நேர் எதிர் கோடியில் இரண்டு செய்குன்றுகளுக்கிடையில் பிரமாண்டமான ஒரு மாதிரி அணைகட்டு கட்டப்பட்டிருந்தது. ஒரு குன்றில் மண்வளப்பாதுகாப்பு முறைகளும் மற்றொன்றில் காட்டுத்துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் சித்தரிக்கப்பட்டிருந்தன.

செய்தித்துறைப் பிரிவு

தமிழ் நாட்டு அரங்கத்தில் நுழைந்ததும் இடது புறம் திரும்பினால் என்றும் இளமை குன்றா தமிழ்த்தாயின் உருவச் சிலை நம் கண்ணையும், கருத்தையும் கவரும். செய்தித்துறை அமைத்த சிலை அது. அதையொட்டி அமைந்திருந்ததே செய்தித்துறைப் பிரிவு. தமிழ்நாட்டின் புராதனச் சிறப்பை விளக்கும் ஓவியங்களோடு தத்ரூபமாகத் தெரியும் பெரிய பெரிய புகைப்படங்களும், கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழ்நாடு அரசாங்கம் சாதித்த சாதனைகளை விளக்கும் விளக்கச் சித்திரங்களும், இப்பிரிவில் உள்ளன. திட்டமிட்டு நாட்டை வளப்படுத்திய பகீரதன், கரிகாற்பெருவளத்தான் ஆகியோரது உருவச் சிலைகள் ஆயிரக்கணக்கான மக்களை ஈர்த்தன.

விவசாயப் பிரிவு

இப்பிரிவின் முகப்பில் தஞ்சாவூரில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீவிர விவசாய சாகுபடி முறை விளக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தை விளக்கும் முறையில், ஓர் இந்தியர் மற்றோர் அமெரிக்கருடன் கைகுலுக்கும் காட்சியைக் காணலாம். இத்திட்டம் அமுலாகி இப்பொழுது இரண்டாவது ஆண்டு நடைபெறுகிறது. ஐந்தாண்டு முடிவில் தஞ்சைமாவட்டத்தில் நெல் விளைச்சல் 38 சதவீதம் அதிகரிக்கும்.

எண்ணெய், மண்விதைகளை இலவசமாகப் பரிசோதிக்கும் பகுதி ஒன்று தனியாக அமைந்திருந்தது. பழவர்க்கங்களிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் பற்றி நேரடி விளக்கமும் காட்டப்பட்டது. இருபுறங்களிலும் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டுள்ள பெரிய பெரிய புகைப்படங்கள் வேளாண்மை அபிவிருத்தியை விளக்கின. சிறு தானிய விதைகளால் எழுப்பப்பட்டுள்ள "தானிய கோபுரம்", பழங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள "பழவகைக் குன்று" ஆகியவை அருமையான காட்சிப் பொருள்களாகும். வாசலில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் வரைவுப்படம் வேளாண்மைத் துறையினரின் பல்வேறு திட்டங்களை விளக்கின.

புள்ளி விவரங்கள்

ராஜ்ய மழை அளவு, நிலத்தின் தன்மை, விநியோகம் முதலியவற்றை விளக்கும் புள்ளி விவரத்துடன் இப்பிரிவின் காட்சி தொடங்கியது. கடந்த பத்தாண்டுகளில் விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் பற்றி படங்கள் விளக்கின. திட்டக் காலத்தில் ஏற்பட்ட செலவை குறிக்க, பெரிய அளவாக்கப்பட்ட ரூபாய் நோட்டுகள், காட்சியைக் காண வருபவர்களின் கவனத்தை ஈர்த்தது. உணவு, கரும்பு, எண்ணெய் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள உயர்வு பற்றிய விவரமும் கொடுக்கப்பட்டிருந்தன.

நல்ல தரமான விதைகளை விவசாயிகள் மத்தியில் பரப்ப இத்துறையினர் கவனம் செலுத்தி வருகின்றனர். இரண்டு திட்டக் காலத்தில் 146.1 லட்சம் டன் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. நெல், சிறுதானியம், எண்ணெய்வித்து, பருத்தி ஆகியவற்றில் முறையே 16, 12, 9, 2 ரக விதைகள் இப்போது இருக்கின்றன. 132 விதைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவை மூலம் கிராம விதைப் பண்ணைக்குத் தரமான விதை விநியோகம் செய்ய முடியும்.

பருத்தி—

தமிழ் நாட்டில் பருத்தி விளைவும் அபிவிருத்தி அடைந்துள்ளது. நஞ்சை கம்போடியப் பருத்திப் பஞ்சின் நீளம் $\frac{7}{8}$ அங்குலத்திலிருந்து 1-5/16 அங்குலம் வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரியே புஞ்சைப்

பருத்திப் பஞ்சின் நீளமும் 1-1/16 அங்குலம் வரை அபி விருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இந்த அளவுதான் அதிகம் என்று கூறப்படுகிறது. பருத்தி விளையும் பரப்பில், 90 சதவீதம் அபிவிருத்தி செய்யப்பட்ட தரமான பருத்தி விதைகள் உபயோகிக்கப்படுகின்றன. கம்பு வகையும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

கரும்பு

658, 740, 785, 419, 449-ம் எண் வகைக் கரும்புகள், கரும்பு சாகுபடியாகும் பகுதிகளில் பயிராகின்றன. ஆண்டு முழுவதும் சாக்கரை ஆலைகளுக்குத் தேவையான கரும்பு வழங்கும் பொருட்டு பல தர கரும்பு வகைகள் அபி விருத்தி செய்யப்பட்டுள்ளன. இப்போது தமிழ்நாட்டில் கரும்பு பிழியும் ஆலைகள் எட்டு இருக்கின்றன. வருடத்தில் எட்டு மாதங்கள் கரும்பு ஆட்டப்படுகிறது. வட இந்தியாவில் 4 மாதங்கள்தான் இவ்வேலை நடைபெறுகிறது. "தமிழ் நாடு அதிக சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும்" என்ற விளக்கக் காட்சியை அதிகமான மக்கள் கண்டுகளித்தனர்.

பழங்கள்

பழ அபிவிருத்தி பற்றிய விளக்கங்களும் தரப்பட்டிருந் தன. மா, திராட்சை வளர்ச்சி பற்றியும் இப்பிரிவில் அறிய முடிந்தது. திராட்சை ஆராய்ச்சிப் பணியில் திராட் சையின் அளவும், இனிப்பும் அபிவிருத்தி செய்யப்பட்டி ருந்தன. நமது மாநிலத்தில் இப்போது 8 பழத் தோட்டப் பண்ணைகளும், நர்சரிகளும் உள்ளன. இன்னும் 4 பண்ணைகள் நிறுவப்படும். 2 லட்சம் பழச் செடிகள் பொது மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தப்படும். எண் ணெய் வித்துச் செடிகளும், அவற்றைப் பாதிக்கும் பூச்சி களும் உள்ள படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பசுந்தழை உரம் தயாரித்தலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. இப்போது 65 நகராட் சிகளும், 285 நகரப் பஞ்சாயத்துக்களும் கலப்பு உரம் தயாரிக்கின்றன. விதைகளுடன் மருந்து கலக்கும் முறை யால் உற்பத்தி பெருகிறது.

தென்னை

தென்னை வளர்ப்பில் அதிகக் கவனம் செலுத்தப்படு கிறது. 14 தென்னை வளர்ப்பு நர்சரிகள் ஆண்டு ஒன்றுக்கு 3.5 லட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் கடலோரப் பகுதியில் தென்னை வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது. இலங்கை யிலிருந்து வெளியேற்றப்பட்டு, தமிழ்நாடு வருபவர்களுக் கும், நிலமற்ற ஏழைகளுக்கும் தென்னை வளர்க்க 2,850 ரூபாய் கடனுக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 52 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.

விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய, விற்பனைக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இப்போது 6 மார்க்கெட் கமிட்டிகள் இருக்கின்றன. எல்லா விவசாயப் பொருள் களையும் வணிகப் பயிர் மார்க்கெட் சட்டத்தின்கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய், எண்ணெய் பரி சோதனை நிலையங்கள் இப்போது 7 இருக்கின்றன.

அபிவிருத்தி செய்யப்பட்ட விவசாயக் கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. விவசாயிகளுக்கு இங்குள்ள பொருள்கள் யாவும் அறிவு புகட்டுவதாக அமைந் திருந்தன.

கால்நடை

நல்ல ஜாதியைச் சேர்ந்த மாடுகள், கோழிகள், ஆடுகள் கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு கால் நடைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தன. காங்கயம், சிந்தி ஹ், முர்ரா, உம்பளாச்சேரி, கல்லிகார், ஆலம்பாடி, புலிக் குளம் ஆகிய ஜாதி மாடுகள் இருந்தன. கோழி வளர்ப்பு மாதிரிக் குடிலும் அமைந்திருந்தது.

பெர்க்ஷயர், யார்க்ஷெயர் ஆகிய இனப் பன்றிகளும், குட்டிகளும் இப்பிரிவில் இருந்தன. சிறுவர்களும், பெரிய வர்களும் இதை ஆவலுடன் பார்த்து ரசித்தனர். பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு கால்நடைக் காட்சி, ஜாதிக் கால்நடைகள் ஆகியவற்றை விளக்கும் படங்கள் அமைந் திருந்தன. மூன்ருவது திட்டத்தின்கீழ் கால்நடை அபி விருத்திக்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் விளக்கப் பட்டன.

மீன்வளம்

முத்து, சங்கு கிடைக்கும் கடற்கரைப் பகுதிகள், முத்துக் குளிப்பு முதலியன இப்பகுதியில் விளக்கப்பட்டிருந்தன. மீன்பிடிக்கும் கருவிகள், முறைகள் பற்றி விளக்கும் காட்சி களும் இருந்தன. நமது மாநிலத்தில் கிடைக்கும் கடல் மீன்,குளம் குட்டைகளிலுள்ள மீன்வகை ஆகியவை காட்டப் பட்டிருந்தன. மீனை உப்பிட்டு, உலர்த்தி, பதனப்படுத் தும் முறைகளை, அதற்கான சாதனங்களுடன் விளக்கிக் காட்டப்பட்டன. மீனளத் துறையில் ஏற்பட்டுள்ள முன் னேற்றத்தை வரைப் படங்கள் விளக்கின. இராமேசுவரம், மன்னர் வளைகுடா கடற் பகுதியில் பிடிக்கப்பட்ட உயிருள்ள கடற் பசு இங்கு தண்ணீரில் வைக்கப்பட்டிருந் தது. நவீன யந்திரப் படகும் இங்கு வைக்கப்பட்டிருந்தது.

வனத்துறை

வனத் துறையினர் அமைத்துள்ள அலங்காரப் பகுதி யின் உள்ளே செல்லும்போது, வனத்திற்குள் நாம் நுழைவது போன்ற தோற்றம்தான் தெரிந்தது. ரப்பர் தொழிற்சாலை, ரப்பர் பயிரிடுதல், ரப்பர் பால் எடுத்தல் முதலியன விளக்கப்பட்டிருந்தன.

மூங்கில் பயிரிடுதல், வெட்டுதல், கட்டி தொழிற்சாலைக்கு அனுப்புதல், தொழிற்சாலை ஆகிய யாவற்றையும் விளக் கும் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரம்புதூரில் விவசாயத்திற்கும், இதர தொழிலுக்கும் உள்ள நில அமைப்பை விளக்கும் மாதிரிப் படம் ஒன்றும் இருந்தது. குந்தா நீர் மின்சாரத் திட்டத்தைச் சேர்ந்த நீர்த்தேக்க மும், வன அபிவிருத்தியும் அழகாக விளக்கப்பட்டிருந்தன.

கதர்-கிராமத் தொழில்கள்

கதர் மஸ்லின், புரகேடு, கதர் சில்க், காக்கி முதலான பல்வேறு கதர்த் துணி ரகங்கள் இங்கு பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. நார் உரிக்கும் தொழில், கையால் செய்த காகிதத் தொழில் ஆகிய இரண்டும் செய்து காட்டப்பட்டன. பழைய காகிதம், வாழைப்பழத் தோல், வேம்பு, புன்னை விதைகள் முதலான பல கழிவுப் பொருள்

களைக் கொண்டு நார் பொருள்களும், கையால் காகிதமும் செய்யும் முறை காட்டப்பட்டது. ராட்டை நூற்பு, நெசவு, தேன் வளர்த்தல், பனை வெல்லம், பனை ஓலைப் பொருள்கள் யாவும் விளக்கப்பட்டிருந்தன.

மாதர் நலம்

மாதர் நலத் துறையின் நிர்வாக அமைப்பு, மத்திய, மாநில சமூக நலப் போர்டாரின் உதவி பெற்று நடைபெறும் வேலைகள் ஆகிய யாவும் விளக்கப்பட்டிருந்தன. மாதர் சங்கங்களைச் சேர்ந்த பெண்களும், பல மாவட்டங்களிலுள்ள மாதர் தொழில் நிலையங்களும் தயாரித்த பொருள்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன.

பொதுச் சுகாதாரம்

கருவுற்றிருக்கும் காலத்தில் பெண்களுக்குத் தேவைப்படும் சத்தான உணவு பற்றிய விவரம் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. தாயின் கருப்பையில் சிறு புள்ளி போன்று தோற்றமளித்து, அதன் பின்னர் அழகான குழந்தையாக, வயிற்றில் வளரும் பல நிலைகளும், அப்பொழுது தாய்க்குத் தேவைப்படும் உணவால் ஏற்படும் நன்மையும் சித்தரிக்கப்பட்டிருந்தது. கைக்குத்தலரிசி, சம நிறை உள்ள உணவு இவற்றின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டிருந்தது. சமைக்கும்போது உணவின் சத்தை பாதுகாக்கும் முறை பெண்களுக்கு ஆர்வம் ஊட்டுவதாக அமைந்திருந்தது.

தொழில்-வாணிபம்

திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசாங்க விவசாயக் கருவி உற்பத்தி நிலையத்தில் உருவான பலவித உழவுக் கருவிகள், பரம்படிக்கும் கருவி, விதை கலக்கும் கருவி, ஊடு சென்று களை எடுக்கும் கருவி, பர்மா சட்டர்ன் ஆகிய யந்திரக் கருவிகள் இப்பகுதியில் இருந்தன. கும்பகோணத்தில் அரசாங்கப் பித்தளை சாமான்கள் உற்பத்தியாகும் பிரிவில் மருந்து தெளிக்கும் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன.

தென் இந்தியாவுக்கு உரித்தான புராதன கைத்திறன் பொருள்களும், திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தயாராகும் நெட்டியால் ஆன கைவினைப் பொருள்களும் காட்சிக்கு இனியதாக இருந்தன. கோயில் பறவைகள், மிருகங்கள் ஆகிய யாவும் நெட்டியால் அமைக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் நெய்யப்படும் வர்ண பாய்களும், தரை விரிப்புகளும், படுக்கை விரிப்புகளும் இங்கு வைக்கப்பட்டிருந்தன.

கூட்டுறவு

கூட்டுறவுப் பண்ணை, கூட்டுறவு பால் பண்ணை, கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பணிகள் பற்றிய மாதிரிகளை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கம் இப்பிரிவில் வைத்திருந்தது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றி வரைவுப் படங்கள் தெளிவாக விளக்கின.

நெடுஞ்சாலைகள்—

விவசாயப் பொருள்கள் போக்குவரத்துக்கான சாலை நீளம் முதலியவை விளக்கப்பட்டிருந்தன. கிராமங்களில் போக்குவரத்துக்காக அன்று நிலவிய கிராமப்போக்குவரத்து வசதிகளும், இன்று உள்ள நிலையும் சித்தரிக்கப்பட்டிருந்தது. 3,432 அடி உயரத்தில் (ஏழை மக்களின் ஊட்டி) ஏலகிரி மலைக்குச் செல்லும் சாலையின் விவரம் தரப்பட்டிருந்தது. சிறு பாலங்கள், மதகுகள், முதலியவற்றுடன் 18 அடி அகலத்தில் இச்சாலை அமைக்கப்படும். இதற்கு ரூபாய் 16.4 லட்சம் செலவாகும் கிராமங்கள் "அன்றும்" "இன்றும்" என்ற நிலையை விளக்கும் காட்சியை இங்கு கண்டோம். மாதிரிக் கிராமம் இன்று பெற்றுவரும் வசதிகள் பற்றிய விவரத்தையும் கண்டோம். சிமெண்டு சாலை, சரளை பரப்பிய சாலை, சாலைப் பரப்பு அபிவிருத்தி முதலியவற்றை விளக்கும் வரைப் படங்கள் இங்கு இருந்தன.

பொதுப்பணிகள்

நவீன முறையில் தண்ணீரைத் தேக்கி, கால்வாய் மூலம் விநியோகிப்பதை விளக்கும் 6 மாதிரிகள் இப் பிரிவில் உண்டு. இவற்றைக் காணும்போது நேரடியாக அணைகளைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. இங்குள்ள ஜுக் பெட்டி பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சி யூட்டியது. பித்தானை அமுக்கினால் தான் விரும்பும் அணைக்கட்டு மாதிரியில் மின்விளக்குகள் தோன்றி அலங்கரிக்கும்.

குளங்களில் தூரெடுத்து அவற்றை அபிவிருத்தி செய்யும் நிலையும் விளக்கப்பட்டிருந்தது. காவேரியின் சிற்றாறுகள், கிளைகள் ஆகியவற்றின் நீர் 90 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராயபுரம் மீன்பிடிப்புத துறைமுக மாதிரியும் இங்கு அமைந்திருந்தது.

மின்சார போர்டு

டில்லியிலுள்ள மக்கள் சபைக் கட்டிட அமைப்பைப் போன்று, மின்சார போர்டாரின் அரங்கு வட்ட வடிவமாக அமைக்கப்பட்டு, மிக அழகாகத் தோற்றமளித்தது. மின்சார நிலையங்கள், துணை நிலையங்கள், மின்சாரத் தொடர்கள் முதலியவற்றை விளக்கும் பெரிய படம் ஒன்று இருந்தது. இதில் இனிமேல் அமைக்கப்படவிருக்கும் மின்சாரத் திட்டங்கள் பற்றியும் விளக்கப்படிருந்தது.

மின்சார ஒளிபெற்றுத் திகழும் கிராமத்தினர் உணர்வும், அங்கு நடைபெறும் தொழில் வேகமும் பற்றி விளக்கப்பட்டுள்ள மாதிரி ஒன்று இங்கு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. 12,000 கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் 1.32 லட்சம் விவசாய பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிற்குப் பெருமை தரும் சாதனையாகும்.

பரம்பிக்குளம் நீர் மின்சாரத் திட்டம், ஹொகனக்கல் நீர்மின்சாரத் திட்டம், கோடையாறு நீர் மின்சாரத்திட்டம் ஆகியவற்றின் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு சக்கரத்தின் வழியாக நீர் செலுத்தப்படும்போது, மின்சாரம் எவ்வாறு உற்பத்தியாகிறது என்பதை நேரில் காணும்பொழுது பொதுமக்கள் மிகுந்த ஆர்வம் காட்டி மகிழ்ந்தனர்.

—o—

வளமாக்கும் திட்டங்கள்

(திரு. K. V. ஏகாம்பரம் B.E., I.S.E., பிரதம நீர்ப்பாசன எஞ்சினியர்)

கிராமங்களே நம் நாட்டின் உயிர்நாடி. நாட்டின் பல பாகங்களுக்கும் பரந்த அளவில் பாசன வசதி அளிப்பதற்கு நமது முன்னோர்கள் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள். பொது மக்களுக்குப் பெரும் அளவில் பயன்படும் பொருட்டு ஆங்காங்கு தண்ணீரைக் கட்டுப் படுத்தினார்கள். ஒவ்வொரு கிராமப் பகுதிக்கும் மேலும் மேலும் இவ்வசதிகள் பெருகுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இந்த வகையில் நாம் போற்றவேண்டிய மாபெரும் மன்னன் கரிகால் சோழன். கல்லணை கட்டிய சீரிய பெருமை இந்தக் கரிகாலனுக்கே உரியது. மேலணையிலிருந்து கடற்கரை வரையிலும் அநேக காத தூரம் காவேரிக்கும் கொள்ளிடத்திற்கும் கரை கட்டிய தனிப் பெரும் சிறப்பும் கரிகால் வளவனையே சேரும். "சோழ வள நாடு சோறுடைத்து" என்பது ஔவையாரின் பொன் மொழி. உண்மையில் சோழ நாட்டுப் பகுதிகளில் எந்த நாளும் பயிர் வளம் நிலைக்கச் செய்த முதல் வள்ளல் கரிகால் சோழனே.

2. நீர்ப்பாசனத்திற்கு மிகவும் பயன்படக் கூடிய சிறிய பெரிய ஏரிகள் பலவற்றையும் நமது முன்னோர்கள் நமக்குத் தந்துள்ளனர். வீராணம், மாமந்தூர், காவேரிப் பாக்கம், தூசி, விஜயநாராயணம் ஆகிய பெரிய ஏரிகள் குறிப்பிடத்தக்கவை. ஏரி, குளங்களுக்குத் தேவையான கால்வாய்கள் பலவும் வெட்டப்பட்டுள்ளன. பெருகிவரும் தண்ணீரைத் தேக்கி, அவ்வப்போது வேண்டுமளவில் பயன்படுத்துவதற்கு இந்த நீர் நிலைகள் துணை புரிகின்றன. சிறந்த முன் யோசனையுடன் ஏற்படுத்தப் பட்டுள்ள இத்தகைய பூர்வீக நீர்நிலைகள் இன்றும், என்றும் நமக்குப் பயன்படும் வகையில் நல்ல நிலையில் உள்ளன.

பண்டைக் காலத்தில் இருந்த நிலை

3. நம் முன்னோர் காலத்தில் பாசன வசதி ஏற்பாட்டிற்கு வேண்டிய உபகரணங்கள் கிடைக்கவில்லை. ஆகவே தாமிரபரணி போன்ற சிறிய ஆறுகளில் சிறிய-சிறிய அணைக்கட்டுகளை மட்டுமே நிரந்தரமாக அவர்களால் அமைக்க முடிந்தது. காவேரி, கொள்ளிடம் போன்ற பெரிய நதிகளில் அம்மாதிரி அணைக்கட்டுகள் அமைக்க முடியவில்லை; இருந்தாலும் பெரிய நதிகளின் குறுக்கே "கொறம்புகள்" அமைப்பது வழக்கமாயிருந்தது. கொள்ளிடத்தின் குறுக்கே அமைக்கப்பட்ட கொறம்புகள் தேவையானபோது தண்ணீரைக் காவேரி முதலிய நதிகளில் திருப்பிவிட உதவியாக இருந்தன. அணை இல்லா இடங்களில் கொறம்புகள் மிகவும் பயனுள்ள சாதனமாக இருந்தபோதிலும் அவைகளை வருஷந்தோறும் அமைக்க வேண்டிய ஒரு பெருந்தொல்லை இருந்தது. உதாரணமாக, ஒவ்வொரு வருஷமும் தஞ்சாவூர் கலெக்டர் ஒரு பெரிய படையோடு சென்று கொள்ளிடத்தில் கொறம்பு சரியாக அமைக்கப்படுவதைக் கண்காணிக்க வேண்டும். வீராணம் ஏரியை நிரப்புவதற்காக வடவாறு பிரிகின்ற கீழணையிலும் இதே தொல்லை தான். வைகை, வெள்ளாறு,பொன்னியாறு, பாலாறு முதலானவற்றிலும் இவ்வகையான கொறம்புகள் மூலமாகத் தான் நீராணிக்கம் செய்யவேண்டும்.

4. வருஷந்தோறும் தொழிலாளர்களைத் தேடவேண்டி நிர்ப்பந்தத்துடன், கொறம்புகளில் மற்றொரு குறையும் உண்டு. ஒவ்வொரு சமயம், வழக்கத்துக்கு மாறாகப் பருவந் தவறி, பலத்த மழை பெய்வதுண்டு. அப்போதெல்லாம் இக் கொறம்புகள் வெள்ளத்தால் அழிந்து விடும். வெள்ளம் தணிந்து மறுபடியும் கொறம்பு அமைப்பதற்குள் ஏராளமான தண்ணீர் வீணாகப் போய் விடும். ஆகையினால் கொறம்புக்குப் பதிலாக நிரந்தரமான அணைக்கட்டுகள் அமைக்கும் முயற்சிகள் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டன. 1836 -ல் சர் ஆர்தர் காட்டன் என்னும் பொறி இயல் நிபுணர் கொள்ளிடத்தில் குறுக்கே மேலணையையும் கீழணையையும் கட்டினார். பின்னர் கல்லணையில் காவேரி வெண்ணாறு தலை மதகுகள் அமைக்கப்பட்டன. நாளடைவில் வெள்ளாற்றின் குறுக்கே பிலாந்துறை, சேத்தியாத் தோப்பு அணைக்கட்டுகள், பொன்னியாற்றில் திருக்கோவிலூர் அணைக்கட்டு, பாலாற்றில் பாலாறு அணைக்கட்டு, முதலான அணைக்கட்டுகளும் கட்டப்பட்டன. இந்த அணைக் கட்டுகளில் பெரும்பாலானவை படிப்படியாக நவீன வசதிகளைப் பெற்று இப்போது மிகச் சிறந்த சாதனங்களாகி விட்டன.

5. பல நூற்றாண்டுகளாக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளில் பயனாக, நமது நாட்டில் சென்ற நூற்றாண்டின் இறுதிக்குள் எங்கும் நீர்ப்பாசன வசதி பெருகி விட்டது. வெள்ளப்பெருக்கில் ஒரு பகுதி தவிர பெரும்பாலும் ஆற்று நீர் முழுவதும் தற்போது நன்கு பயன்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் போதுமான மழையில்லாப் பகுதிகளும் ஜனத்தொகை அதிகமான பகுதிகளும் மிகவும் சிரமப்படத்தான் செய்கின்றன. இவ்வாறு சிரமப்படும் நிலக்கோட்டை மேலூர் தாலூகாப் பகுதிகளுக்கு உதவி செய்வதற்காகத் தான், மேற்கு மூலமாகப் பாய்ந்த பெரியாற்றுத் தண்ணீர் சென்ற நூற்றாண்டின் கடைசியில் வைகை நதிக்குள் திருப்பி விடப்பட்டது. அடர்ந்த காட்டில் உயர்ந்த அணை கட்டியும் ஒரு சுரங்கம் அமைத்தும் இந்தப் பெரியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேலை நடைபெற்ற இடத்தில் சுகாதார வசதியும் கிடையாது. மனிதர்கள் சாதாரணமாக விரும்பி வசிக்கும்

இடமும் அல்ல. மிகவும் பயங்கரமான காட்டுப் பிரதேசம்; ஆயினும் இந்தப் பிரதேசத்திலும் தைரியமாகத் திட்டத்தை நிறைவேற்றிய சிறப்பைப் பாராட்ட வேண்டும். இதனல் உண்மையாகவே கணிசமான பலன் கிடைத்தது. எந்த விதமான வசதியும் இல்லாத சுமார் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் எக்கரா பரப்புள்ள பெரியாறு பிரதேசம், பெரியாறு அணையினுல் சுபிட்சமாக இருக்கிறது.

மேட்டூர், பெரியாறு அணைகள்

6. ஒரு வகையில் பெரியாறு அணை அதனைப் போன்ற அணைகளுக்கு வழிகாட்டியாக இருந்தது. ஊக்கம் அளித்தது. அதனைத் தொடர்ந்து மேட்டூர் அணை உருவாகியது. தெற்கில் உள்ள மிகப் பெரிய அணை இது தான். மிகவும் வளம் பெற்ற நஞ்செய் நிலங்களைக் கொண்ட காவேரியில் குறுக்கே அமைத்துள்ளது மேட்டூர் அணை. ஆகையினுல் இந்த அணையை அமைக்கும்போது பொறி இயல் நுணுக்கமான பிரச்சினைகள் மட்டுமின்றி மாகாண ரீதியான அரசியல் பிரச்சினைகள் எழுந்தன. இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் மகிழ்ச்சிகரமாகத் தீர்வு காணப்பட்டது. 1934-ல் மேட்டூர் அணை பூர்த்தி ஆயிற்று. கல்லணையிலிருந்து புதிய கால்வாயும் வெட்டப்பட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்தின் பரப்பு சுமார் 60 சதுர மைல். சுற்றிலும் பல மைல்களுக்கு "நன்னீர் மீன்" உற்பத்திக்குரிய சாதனமாகவும் இந்தத் தேக்கம் விளங்குகிறது. முழுவதும் காரைக்கட்டு அணையாக அமைந்துள்ள இந்த மேட்டூர் அணையின் நீளம் ஒரு மைல். இதன் உயரம் 176 அடி; ஆகையினுல் மின்சார உற்பத்திக்கும் வசதி அளிக்கிறது. மேட்டூரில் உள்ள மின்சார சக்தி நிலையத்தின் உற்பத்தி இப்போது சுமார் நாற்பதாயிரம் கிலோ வாட். தாராளமான தண்ணீர் வசதியாலும், மின்சார வசதியாலும் மேட்டூர்த் தேக்கத்தின் மூலம், தஞ்சை, சேலம் மற்றும் சுற்றுப்புற மாவட்டங்கள் மகத்தான புத்துயிர் பெற்று விட்டன.

கீழ் பவானி அணை

7. பெரியாறு, மேட்டூர் அணைகளைப் பின்பற்றி மற்ற இடங்களிலும் இவைகளைப் போன்ற அணைகளை அமைக்க வேண்டுமென்று ஊக்கம் இயல்பாகவே எழுந்தது. இதன் பயன் தான் கீழ் பவானி அணை. இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் கீழ் பவானி அணை வேலை 1949-ல் தொடங்கி 1955-ல் பூர்த்தி ஆயிற்று. மற்ற அணைகளைப் போல் அல்லாமல் இந்தக் கீழ் பவானி அணையில் பெரும்பகுதி மண் அணையாகவே அமைக்கப்பட்டது. ஆற்றுப் பகுதி மட்டுமே கல் அணை. இம் முறையினுல் அணைகட்டும் செலவு கணிசமாகக் குறைந்தது. இவ்வகையில், கீழ் பவானித் திட்டம் நமது ராஜ்யத்தில் இதுவரை மேற்கொள்ளப்படாத புதிய முறையைக் கையாள்வதற்குப் பயிற்சி தந்தது. பவானி அணை நடுத்தர உயரமுடையது தான். ஆகையினுல் லாபகரமான மின்சார உற்பத்திக்கு ஏற்ற வாய்ப்பு இல்லை. ஆயினும் சமுதாய நல வளர்ச்சி, மீன் வளர்ப்பு, விவசாய ஆராய்ச்சி போன்றவைகளுக்கு, பவானிசாகர் ஒரு ஒப்பற்ற லட்சிய கேந்திரமாக விளங்குகிறது. வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், கிராம சேவகர்கள் முதலானேர்க்குரிய ஓர் பயிற்சி நிலையமும் இங்கு உருவாகியுள்ளது. அப்போது கீழ்ப்பவானிப் பிரதேசம் நவீன பாசன வசதிக்குரிய குறிக்கோள்களின் சின்னமாக விளங்குகிறது.

பிறந்த பொன்னுடு விடுதலை பெற்றபின் . . . .

8. சுதந்திரத்திற்குப் பின் நம் நீர்ப்பாசன முயற்சி இன்னும் வேகமடைந்தது; குறிப்பாக இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் வளம் கொடுக்கும் இன்னும் பல திட்டங்களையும் தொடர்ந்து நிறைவேற்றியுள்ளோம். இப்போது, அமராவதி, வைகை, மணிமுத்தாறு, சாத்தனுர், கிருஷ்ணகிரி, வீடூர் முதலான அணைகள் நம்மிடையே உள்ளன. சமீபத்தில் நம் ராஜ்யத்தோடு இணைக்கப்பட்ட கன்யாகுமரி மாவட்டத்துடன், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய இரண்டும் அணைகளும் நமக்குக் கிடைத்துள்ளன. தென் கோடியில் உள்ள குமரி மாவட்டத்திற்கு இந்த அணைகள் பாசனக் கருவூலங்களாக விளங்குகின்றன. சமீபத்தில் பரம்பிக்குளம்—அளியாறு திட்டம் தொடங்கப்பட்டுத் தீவிரமாக வேலை நடந்து வருகிறது. சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் மூலம் சுமார் 27 கோடி ரூபாய்க்குமேல் நாம் புதிய சாதனங்களுக்காகச் செலவழித்துள்ளோம். நாம்பெற்ற சுதந்திரத்தின் பயனுகவே இவ்வளவு பெரிய முதலீடு செய்ய முடிந்தது. இந்தத் திட்டங்களின் மூலம் அதிகப்படியாக ஆறரை லட்சம் எக்கரா நிலங்கள் முதன் முதலாகப் பாசனத்துக்கு வருகின்றது. புதிய அணைகள் எல்லாம் புத்தம் புதிய அம்சங்களுடன் உறுதியாகப் பயனளிக்கும் வகையில் நன்முகக் கட்டப்பட்டுள்ளன. செலவைக் குறைக்கும் பொருட்டுப் பெரும்பாலும் மண் அணையையும் கல் அணையையும் இணைத்தே இவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயன்ற மட்டும் ஒவ்வொரு அணைக்கு அருகிலும் அருமையான பூங்காவும் அமைத்துள்ளோம். ஆகையினுல் இப்போது பல இடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் கவர்ச்சிகரமான உல்லாச இடங்களை நாடி வருகின்றனர்.

9. எதிர்பாராத அனுபவம் ஒன்றையும் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. தேவையான வயற் கண்ணிகள் சம்பந்தப்பட்ட மக்களைக் கொண்டே அமைக்கப்பட வேண்டும் என்பது ஒரு நிபந்தனை. வயற்கண்ணிகளை அமைப்பதில் பிரமாதமான செலவு ஒன்றுமில்லை. ஆயினும் தேவையான நிலங்களை விட்டுக் கொடுப்பதற்கு விவசாயிகளுக்கு மனம் வருவதில்லை. ஆகவே கட்டாயமாக நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. விதிகளைத் தளர்த்தி, வயற்கண்ணிகளையும் அரசாங்கமே அமைக்க வேண்டிய அவசியம் நேருகிறது. இதன் செலவுகளை முதலில் அரசாங்கம் ஏற்றுப் பின்னர், பயன் பெறுபவர்களிடம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. பாசன வசதிகளை இழந்து விடாமல் இருப்பதற்காக, இத்தகைய நடவடிக்கை அவசியமாகிறது. இதுபோன்ற காரியங்களில் விவசாயிகளிடமிருந்து போதிய ஒத்துழைப்பு எதிர்காலத்திலாவது கிடைக்க வேண்டும்.

10. புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுதான் புதிய நீர்த் தேக்கங்களின் அடிப்படைத் தத்துவம். ஆயினும் மிகவும் பரந்த நோக்கத்தோடு புதிய நீர்த் தேக்கங்கள் உபயோகிக்கப்படுகின்றன. நெருக்கடியான காலங்களில், ஏற்கனவே உள்ள பாசன நிலங்களில் வளரும் பயிர்களையும் காய்ந்துவிடாமல் காப்பாற்றுவதற்காகத் தேவையான அளவு தண்ணீரைப் புதிய தேக்கங்கள் அவ்வப்போது உதவி வருகின்றன. தேக்கங்களில் தண்ணீர் அதிகம் இருந்தால் பாசன நிலங்களில் இரண்டாவது போகம் கூட அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறு நதியில் வரும் தண்ணீர் கட்டுப்பட்டு 90 சதவிகிதம் ஆயக் கட்டுகளுக்குப் பயன்படுகின்றது. ஆகையினால் பஞ்சமும், வெள்ளச் சேதமும் இப்போது வெகுவாக நிவர்த்திக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் காவேரியில் வந்த பெரு வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்டசேதங்களையும், சங்கடங்களையும் நேயர்கள் அறிவார்கள். காவேரியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அணைகளும் நீர்த்தேக்கங்களும் இல்லாவிட்டால் வெள்ளச் சேதம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஓரளவு வெள்ளத்தைச் சமாளிக்கும் சக்தியை நமக்கு நீர்த் தேக்கங்கள் தந்துள்ளன.

இதுவரை நாம் நிறைவேற்றியுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் காரணமாக 20 லட்சம் ஏக்கரா நிலங்களுக்கு மேல் உறுதியான பாசன வசதி பெற்று விளங்குகின்றன.

ஏரிப் பாசனம்

11. நமது நீர்ப்பாசனத்தின் கணிசமான பகுதி இன்னமும் தனிப்பட்ட சிறிய குளங்கள், ஏரிகளின் உதவியினாலேயே நடைபெறுகின்றது. முப்பத்து ஏழாயிரம் ஏரிகளின் மூலம் 22 லட்சம் ஏக்கரா நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. எனவே ஏரிகளும் நதிகளைப் போலவே முக்கியமானவைகளே. ஆகையினால் நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக ஏரிகளுக்கு நவீன வசதி அளிக்கவும் முயற்சி செய்து வருகிறோம். சிறிய நீர்ப்பாசன விசேஷத் திட்டம் (எஸ். ம். ஐ.பி.) (தூர்-வாரல்-நிலமீட்புத் திட்டம்—(டி. சி. ஆர்.) ஆகிய இருவகைகளாக ஏரிச் சீர்திருத்தம் நடந்து வருகிறது. அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், பழைய ஏரிகள் இவைகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்து இவைகளின் ஆயக் கட்டுகளைப் பூரணமாக உறுதிப்படுத்துவது சிறிய நீர்ப் பாசன விசேடத் திட்டமாகும். ஏரிகளைத் தூரெடுத்து கரைகளை உயர்த்துவது தூர்வாரல் நிலமீட்புத் திட்டமாகும். இத் திட்டங்களுக்காகச் சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் சுமார் ஐந்து கோடியே எண்பது லட்சம் ரூபாய் செலவழித்திருக்கின்றோம். இவைகளினால் சுமார் நால்ரை லட்சம் ஏக்கரா நிலங்கள் பயனடைந்துள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை போன்ற முக்கியமான ஏரிச் சீரமைப்பு வேலைகளுக்காக, சுமார் எட்டுக் கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவைகளினால் ஏரிப்பாசனத்தையே முழுதும் நம்பும் விவசாயிகள் அதிகப் பயனை அடைவார்கள் என்று நம்புகிறோம்.

தனிப்பட்டவரின் முயற்சியால் . . . .

12. அரசாங்கத்தின் திட்டங்களைத் தவிரத் தனிப்பட்டவர்களின் முயற்சிகளினாலும் நீர்ப்பாசனம் அபிவிருத்தியடைகிறது என்பதையும் இவ்வமயம் குறிப்பிட வேண்டும். பெரும்பாலும் கிணறுகளினாலும், ஊற்றுக்களினாலும் இந்தப் பாசன முறை நடைபெறுகிறது. இதன் மூலம் சுமார் 15 லட்சம் ஏக்கரா நிலங்கள் பயன் பெறுகின்றன. இந்த நிலங்களுக்கு ஏரிகளினாலோ நதிக் கால்வாய்களினாலோ பயன் கிடைப்பது அரிது. பலனே இல்லை என்று கூடச் சொல்லலாம். எனவே இந்த நிலங்களுக்குக் கிணறுகளும் ஊற்றுக் கால்களுமே மிகவும் முக்கியமான உதவியாகும் இந்தச் சிறிய சாதனங்களுக்கும் தகுந்த முறையில் ஆதரவளிக்க அரசாங்கத்தின் ரெவினியூ இலாகாவினர் முயன்று வருகின்றனர். கிணறு மானியத் திட்டங்கள், குழாய்க் கிணறுகள், வடிகால் கிணறுகள், ஆற்று நீரேற்று முறைகள் (River pumping) முதலிய வகைகளில் ரெவினியூ இலாகாவினர் உதவி செய்து வருகின்றனர். இவைகளுக்கான செலவுகள் பல தவணைகளில் கொஞ்சம் கொஞ்சமாக வசூலித்துக் கொள்ளப்படுகின்றன. கிராமப் புறங்களில் இப்போது மின்சார வசதி தாராளமாகக் கிடைக்கிறது. இதனால் மோட்டார் இயந்திரங்களின் மூலம் கிணற்று நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தும் சிறந்த நவீன வசதி ஏற்பட்டுள்ளது. எனவே கிராமப் புறங்களில் உள்ள சிறிய நீர் நிலைகளும் இத்தகைய நவீன வசதிகளுடன் புத்துயிர் பெற நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. களர் நிலங்களை மீட்பதிலும், நீர் தேங்கிய நிலங்களுக்கு வடிகால் வசதி அளிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

முன்னேயுள்ள பிரச்சினைகள்

13. கடந்த காலச் சாதனைகளின் காரணமாகப் புதிய பிரச்சனையும் தோன்றியுள்ளது. சிறிய நீர் நிலைகள் உட்பட எல்லாவற்றிலும் கிடைக்கக் கூடிய தண்ணீரை எல்லாம் கட்டுப்படுத்தி விட்டோம். எனவே இனி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு இடமில்லை. நடுத்தரத் திட்டங்களின் மூலமே பாசன வசதியைப் பெருக்க முடியும். இந்த நடுத்தரத் திட்டங்களில் சில நல்ல அம்சங்கள் உண்டு. இவைகளைக் குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியும். இவைகளுக்காகப் பெரிய அளவில் தளவாடங்களும், இயந்திரங்களும் தேவையில்லை. அந்தந்த வட்டாரத்தில் உள்ள தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் இவை சந்தர்ப்பம் கொடுக்கின்றன. இந்த நடுத்தரத் திட்டங்களுக்காகக் கூடுமான அளவு பொது மக்களின் கூட்டுறவையும் நாம் எதிர் பார்க்க முடியும். இத்தகைய நடுத்தரத் திட்டங்கள் இப்போது ஆராயப்பட்டு வருகின்றன. பாலாறு அணைக்கட்டையும் அதன் கால்வாய்களையும் சீர்படுத்தும் வேலை நடுத்தரத் திட்டங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுத் தொடங்கப்படுகின்றது. "சாத்தனூர் அணை—இரண்டாவது கட்டம்"

(22-ம் பக்கம் பார்க்க)

கிராமியக் குளங்களில் மீன் உற்பத்தி

[திரு ஏ. டி. வெங்கடசாமி. மீன் அளத்துறை]

[தமிழ் நாடு மீன் வளம் கொழிக்கும் நாடு. நல்லதொரு நிதி ஆதாரமாக விளங்குவது மீன். புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி கிராமங்களிலுள்ள எல்லா நீர் நிலைகளில் உள்ள மச்ச வருவாய் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. இந்தத் துறையில் பஞ்சாயத்துக்கள் எப்படி தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதைக் கூறுகிறது இக் கட்டுரை. ஆசிரியர்.]

மீன் ஒரு சத்துள்ள உணவு. நமது தினசரி ஆகாரத்தில் மீன் உணவு ஒரு முக்கிய இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டில் பல மைல் நீளமுள்ள கடற்கரையும், கணக்கற்ற உள்நாட்டு நீர் நிலையங்களும் உள்ளன. அவைகளில் உள்ள மீன் வளத்தை நல்ல முறையில் அதிகரித்தால் நமது உணவுப் பற்றாக்குறையை ஒருவாறு சமாளிக்க முடியும். முக்கியமாக உள்நாட்டு நீர் நிலையங்களில் நம் கவனத்தை அதிகம் செலுத்த வேண்டும். ஒரு விவசாயி எப்படி நிலத்தை உழுது, உரமிட்டு, பயிர் செய்து நல்ல பயனடைகிறானோ அதுபோல் ஒரு குளத்தையும் சீர்திருத்தம் செய்து, பொறுக்கு மீன் விதை விட்டுக வளர்த்து நல்ல பலன் அடைய முடியும். மழைக் காலம் வருமுன் குளத்தைத் தயார் செய்ய வேண்டும். குளத்திலுள்ள அதிக பாசிகளையும், மற்ற மிஞ்சியுள்ள நீர் தாவரங்களையும் அகற்ற வேண்டும். முக்கியமாக மீன் எதிரிகளான தவளை, நீர்பாம்பு, ஆமை முதலியவைகளை அப்புறப்படுத்த வேண்டும். சீர்திருத்தப்பட்ட குளங்களில், ஒவ்வொரு வருடமும் நல்ல பொறுக்கு விதை மீன்களை விட்டு வளர்க்கலாம். நல்ல ரக மீன் குஞ்சுகள் தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிக அளவில் சேகரிக்கப்பட்டு, உள்நாட்டு நீர் நிலையங்களில் விடப்படுகிறது.

நமது கிராமங்களில் கணக்கற்ற நீர்ப்பாசனக் கிணறுகள் உள்ளன. இந்த நீர்ப்பாசனக் கிணறுகளில் விரால், திலாபியா போன்ற மீன்களை விட்டு வளர்க்கலாம்.

சமீப காலத்தில் ஆராய்ச்சியின் பயனாக செயற்கை முறையில் மீன் சினையை வெளியிடச் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வேறு மீன்களிலிருந்து எடுக்கப்பட்ட "பிட்யுட்டரி" என்னும் சுரப்பியின் சுரப்பையை ஊசி மூலம் ஆண், பெண் சினை மீன்களினுள் செலுத்தினால் மீன் முட்டைகள் அதிக அளவில், குறிப்பிட்ட நேரத்துக்குள் வெளிப்படும். இந்த முட்டைகளின் மேல் ஆண் மீனின் பாலை எடுத்து கலந்து முட்டைகளைக் கருவடையச் செய்யலாம். இந்த கருவுற்ற முட்டைகளை, நன்றாக பாதுகாத்து குஞ்சு பொறிக்கச் செய்யலாம். இம்முறையில் நமக்குத் தேவையான ஜாதி மீன்களின் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியும். தமிழ் நாடு மீன் அளத்துறையினால் நல்ல பலனுடன் இந்த ஆராய்ச்சி கையாளப்பட்டு வருகிறது.

மீன் குஞ்சுகள்

தேசிய வளர்ச்சி திட்டப் பிரதேசங்களில் உள்ள எல்லா உள்நாட்டு நீர் நிலையங்களும் மீனளத்துறை பார்வையாளர்கள் மூலம் மீன் வளர்ச்சிக்காக அளவிடப்பட்டுள்ளது. அந்த நீர் நிலையங்களில் விட்டு வளர்ப்பதற்கு வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மூலம் பொறுக்கு மீன் விதைக் குஞ்சுகள் கொடுக்கப்பட்டு வருகிறது. விசேஷமாக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருத்துறைப் பூண்டி, பாபநாசம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடானை, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சேரன் மகாதேவி முதலிய வட்டாரப் பிரதேசங்களில் விசேஷ மீனளத்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்து வருகிறார்கள். மீன் வளர்ப்போருக்கு மீன் விதைகள் பாதி விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

புதிய பஞ்சாயத்து ஆட்சியில் . . . .

தற்பொழுது தமிழ் நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆட்சியின் கீழ் ஒவ்வொரு கிராமமும் ஒரு பஞ்சாயத்துக்கு உட்பட்டிருக்கும். பல பஞ்சாயத்துக்கள் சேர்ந்து ஒரு பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படும். கிராமங்களிலுள்ள எல்லா சிறிய நீர்ப்பாசன ஏரிகளும், குளம், குட்டைகளும் பஞ்சாயத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும். பஞ்சாயத்துச் சட்டத்தின்படி இந்த நீர் நிலையங்களில் உள்ள மீன் மகசூல் பஞ்சாயத்தைச் சேர்ந்ததாக இருக்கும். ஆகையால் இந்நீர் நிலையங்களில் நல்ல முறையில் மீன்களை விட்டு உற்பத்தி செய்தால் பஞ்சாயத்தின் வருவாயை அதிகரிப்பதுடன் மக்களுக்குக் குறைந்த விலையில் அதிக அளவில் மீன் வழங்க முடியும்.

பஞ்சாயத்து ஆட்சித் திட்டத்தில் பஞ்சாயத்துக்களில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் மீன் உற்பத்தியை அதிகரிப்பது ஒரு பகுதியாகும். இந்த திட்டத்தின் கீழ் 100 வட்டார வளர்ச்சிப் பிரதேசங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூபாய் 54,000 செலவில் 10 மீன் வளர்ப்புக் குளங்கள் நிறுவப்படும். ஒவ்வொரு வளர்ப்புக் குளமும் நான்கு சிறு குளங்களாக நிறுவப்படும். ஏற்கெனவே கிராமங்களில் உள்ள குளத்திலாவது. அருகில் உள்ள அரசாங்க மீன் பண்ணைகளிலாவது சினை மீன்களைகள் விட்டு வைக்கப்படும். இந்த சினை மீன்கள் செயற்கை முறையில் பிட்யுட்டரி சுரப்பி நீரின் உதவியால் முட்டை பெருக்கமடையச் செய்யப்படும். இவ்விதம் பெருவாரியான முட்டைகள் சேகரிக்கப்பட்டு வளர்ப்புக் குளங்களில் விட்டு பாதுகாக்கப்படும்.

இந்த மீன் குஞ்சுகள் இரண்டு அல்லது மூன்று அங்குலம் வளரும் வரை வளர்ப்புக் குளங்களில் வளர்க்கப்பட்டு பிறகு பெரிய குளங்களுக்கு மாற்றப்பட்டு வளரவிடப்படும். முட்டைகள் குஞ்சு பொறித்து கைவிரல் அளவு பெரிதாகும் வரை பாதுகாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவைகள் பல விதத்தில் அழிந்து விடக்கூடும். இந்த நிலையில் மீன் குஞ்சுகள் பெரிய வளர்ப்புக் குளங்களுக்கு மாற்றிவிட வேண்டும். ஒரு வருடத்தில் நல்ல ரக மீன்கள் பருத்து, பிடித்து உண்ணுவதற்குத் தகுதியாகிவிடும். இந்தத் திட்டம் தமிழ் நாட்டிலுள்ள எல்லா வட்டார வளர்ச்சிப் பிர



[மீன் வளர்ப்புக் குளங்கள்]

தேசங்களில் அமுலாக்கப்பட்டால்மீன் செல்வத்தை அதிக அளவில் பெருக்கி மக்களுக்கு நல்ல ரக மீனை அதிக அளவிலும் கொடுக்க சாத்தியமாகும்.

கிராமங்களில் மீன் வளத்தைப் பெருக்க . . . .

ஒவ்வொரு கிராமக்குளங்களிலும் 300 சினை மீன்கள் விடப்படும். இந்தச் சினை மீன்களில் ஒரு வருடத்தில் சுமார் 50 ஜதை சினை மீனிலிருந்து 10 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு வட்டார வளர்ச்சி பிரதேசத்திலும் சுமார் 20 லட்சம் மீன் குஞ்சுகள் கிடைக்கும். பஞ்சாயத்து யூனியன்கள் மீன் குஞ்சுகளை பெரிய குளங்களில் விட்டது போக மீன் உற்பத்தியை அதிகரிக்கத் தனிப்பட்டோருக்கும் விற்பனை செய்யலாம். வருவாய் இலாகாவைச் சேர்ந்த நீர்நிலையங்களில் மட்டும் வருடத்தில் சுமார் 5 லட்சம் ராத்தல் மீன் உற்பத்தி எதிர்ப்பார்க்கலாம். இந்த நீர்நிலையங்களின் மீன் குத்தகை பஞ்சாயத்தைச் சேரும்.

இந்த மீன் வளர்ப்புத் திட்டம் தஞ்சாவூர், திருநெல்வேலி, செங்கற்பட்டு, தென்-வட ஆர்க்காடுகள், மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள வட்டார வளர்ச்சிப் பிரதேசங்களில் 1961-ம் வருடம் நவம்பர் மாதம் 2-ம் தேதியிலிருந்து அமுலாக்கப்பட்டிருக்கிறது.

1961-62-ல் சிறு வளர்ப்புக் குளங்கள் நிறுவப்படும். சினை மீன்கள் கொடுக்கப்படும்.

1962-63-ல் அதிக அளவில் சினை மீன் கொடுக்கப்படும். 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் ரோகு, கண்ணாடிக் கெண்டை, முதலிய மீன்கள் செயற்கை தூண்டுதல் முறையில் முட்டையிடச் செய்ய துவக்கப்படும் ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பிரதேசத்திலும் 20 லட்சம் மீன் முட்டைகள் உற்பத்தி செய்யப்படும்.

மீன் விதைகள் பெருக்கத்தை இரட்டிக்க புதிய வளர்ப்புக் குளங்கள் நிறுவப்படும்.

1963-64-ம் ஆண்டில் மொத்தம் 40 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். மேலும் புதிய வளர்ப்புக் குளங்கள் நிறுவப்படும்.

1964–65-ம் ஆண்டில் 60 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும்.

1965–66-ம் ஆண்டில் 80 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும்.

ஐந்து வருட முடிவில் ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பிரதேசமும் வேண்டிய அளவுக்கு நல்ல ரக மீன் குஞ்சுகள் இந்த வளர்ப்புக் குளங்கள் மூலம் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகத்திலேயே மாபெரும் தேர்தல் ஒன்று, அமைதியாக, உலகமே கண்டு வியக்கத்தக்க முறையில், ஜனநாயக அடிப்படையில், கடந்த மாதம் பாரத நாட்டில் நடைபெற்றது. பழம் பெரும் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழும் இந்தப் புண்ணிய பூமியில், பண்டைக் காலத்தில் கிராமப் புறங்களில் தேர்தல் எவ்வாறு நடைபெற்றது என்பதை இக் கட்டுரை அழகாக விளக்குகிறது

—ஆசிரியர்.

தேர்தல்

முற்காலத்தமிழகத்தில், பிரதியொரு கிராமத்திலும், அந்தக் கிராமத்தில் வசிக்கும் இளைஞர் முதியோர் உள்பட ஆண் மக்கள் அனைவரையும் கொண்ட ஒரு சபை இருந்தது. அதாவது, கிராமத்திலுள்ள பெண் மக்களைத் தவிர்த்து, ஆண் மக்கள் அனைவரும் இந்தச் சபையின் அங்கத்தினர்கள். அங்கத்தினர்கள் என்றால், பிறருடைய தயவு தாட்சண்யத்திற்காகவோ, நிர்ப்பந்தத்திற்காகவோ சேர்ந்த அங்கத்தினர்களென்றோ, அல்லது ஏதோ ஒரு தொகையைக் கட்டணமாகச் செலுத்திச் சேர்ந்து கொண்ட அங்கத்தினர்களென்றோ கருதிவிடக் கூடாது. கிராமத்தில் நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு தகுதியே, கிராம சபையில் அங்கத்தினராயிருப்பதற்குப் போதுமானதாயிருந்தது. இங்ஙனம் கிராம மக்கள் அனைவரையும் கொண்ட சபை, **மகாஜன சபை** யென்று பொதுவாக அழைக்கப்பட்டது.

மகாஜன சபையின் பொறுப்புக்கள்

இந்த மகாஜன சபையின் மேற்பார்வையிலேயே, இந்த பையினால் பொதுவாக விதிக்கப்பட்ட கட்டளைகளின் படியே கிராம நிருவாகம் நடைபெற்று வந்தது. நிருவாகம் எப்படி நடைபெற வேண்டும் என்பதைப்பற்றித் தீர்மானிக்க இந்த மகாஜன சபைக்குப் பூரண உரிமை இருந்தது. மத்திய அரசாங்கம் இதில் தலையிடவில்லை.

ஆனால் இந்த மகாஜன சபை, நேரடியாக நிருவாகத்தை நடத்தவில்லை. கிராம மக்கள் அனைவரும் அடிக்கடி ஒன்று கூடுவதோ, காரியங்களைச் சேர்ந்து நடத்துவதோ சாத்தியமில்லையல்லவா ? இதற்காக, நிருவாகத்தை நடத்தவும், கிராம காரியங்கள் அனைத்தையும் கவனிக்கவும் பல் வேறு சிறு சபைகளை ஏற்படுத்தியது. இந்தச் சிறிய சபைகளை, உட் சபைகள் என்றோ, குழுக்கள் என்றோ, தற்கால பாஷையில் கமிட்டிகள் என்றோ, எப்படி வேண்டுமானாலும் நாம் அழைத்துக் கொள்ளலாம். கிராம நடைமுறைகளைப்பற்றி விவரிக்கும் கல்வெட்டுகள், இந்தக் குழுக்களை **வாரியம்** என்ற பெயராலும், இக்குழுக்களின் அங்கத்தினர்களை **வாரியர்** என்றும் வாரியப் பெருமக்கள் என்றும் ஒவ்வொரு விதமாக அழைக்கின்றன.

கிராம சபையே நிருவாக சபை

இந்தப் பல்வேறு குழுக்களையும் சேர்த்து, பிற்காலத்தில் **கிராம சபை** என்று பொதுவாக அழைப்பது ஒரு மரபாகிவிட்டது. இதை இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமானால், கிராமத்து ஆண் மக்கள் அனைவரையும் கொண்டது மகாஜன சபை. இதன் கண்காணிப்பில் நிருவாகத்தை நடத்திவந்த பல்வேறு குழுக்களடங்கியது கிராம சபை. இந்த கிராம சபையே நிருவாகத்தை நேரடியாக நடத்தி வந்ததனால், இதன் பெயரே பிரபல மடைந்து நிலைத்து விட்டது. இதனைக் கிராமப் பொதுச் சபை யென்றும், கிராம நிருவாக சபை யென்றும் சொல்வதுண்டு.

குழுக்கள் மூலம் ஆட்சி

ஒரு கிராமத்தின் விஸ்தீரணம், ஜனத்தொகை, ஒழுங்கான நிருவாகம் நடைபெற வேண்டியதன் அவசியம்,இப்படிப்பலவற்றையும் அனுசரித்து எத்தனை குழுக்கள் தேவையோ அத்தனை குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவிலும் எத்தனை அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமோ அத்தனை அங்கத்தினர்கள் இருந்தார்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கும், அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கும் வரம்பு ஏற்படுத்தப்படவில்லை. ஏற்படுத்தவும் முடியாதுதானே ?

ஆனால் ஒரு கிராமம், விஸ்தீரணம், ஜனத் தொகை முதலியவற்றில் சிறிதாயிருந்தால், அந்தக் கிராமத்து ஜனங்கள், ஒரே ஒரு குழுவை மட்டும் நியமித்து அதன் மூலம் கிராம நிருவாகம் நடைபெறும்படி பார்த்துக் கொண்டார்கள். இந்த ஒரு குழுவில், குறைந்த பட்சம் ஐந்து அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்ற ஒரு பொது நியதி இருந்து வந்தது. இதற்குக் குறைவாக இருக்கக் கூடாதென்ற கண்டிப்பும் இருந்தது. இந்த

ஐவரும் பஞ்சவர் என்று அழைக்கப்பட்டனர். பஞ்சவர் என்ற இந்தச் சொல்லே அடிப்படையாகக் கொண்டே பஞ்சாயத்து என்ற சொல் வழக்கு பிற்காலத்தில் ஏற் பட்டது போலும். பிறகு, ஐவருக்கு மேற்பட்ட அங்கத் தினர்களைக் கொண்ட குழுக்களும் பஞ்சாயத்து என்ற பெயராலேயே அழைக்கப்படுவது ஒரு மரபாகிவிட்டது. அது மட்டுமன்று; அங்கத்தினர் ஐவருக்கு மேற்பட்ட வராயிருந்தாலும் அவர்கள் பஞ்சவர் என்றே அழைக்கப் பட்டனர். அதாவது வழங்கும் சொல் ஒன்றாயிருந்த போதிலும் அது குறிக்கும் பொருள் காலக்கிரமத்தில் விரிவடைந்தது. இந்த முறையை யொட்டியே இப்பொ ழுது கிராம சபைகள் பஞ்சாயத்துக்கள் என்று அழைக்கப் படுகின்றன.

கிராம சபை—தேர்தல்

பல் வேறு குழுக்களடங்கிய கிராம சபைக்கு—கிராம நிருவாக சபைக்கு— பஞ்சாயத்துக்கு—அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க ஒழுங்கான தேர்தல் நடைபெற்றது. கிரா மத்தில் வசிக்கும் சிறியவர் பெரியவர் அனைவரும் இந்தத் தேர்தலில் உற்சாகத்துடன் பங்கு கொண்டார்கள். இந்தக் குழுக்கள், சரியான பிரதிநிதிகளைக் கொண்டவையாயி ருக்க வேண்டுமென்பதிலும், திறம்படச் செயலாற்றிவர வேண்டுமென்பதிலும் எல்லோருக்கும் அக்கரையிருந்தது. எந்தக் குழுவில் யார் அங்கத்தினராக இருந்தாலென்ன இராவிட்டால் என்ன என்று எவரும் அலட்சியமாயிருக் கவில்லை. அப்படி யிருந்தால், தங்களுடைய அன்றாட வாழ்க்கை சீராக நடை பெறாதென்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர்.

இந்தக் குழுக்களுக்கு இன்னின்னத் தகுதிகள் படைத் தவர்களையே அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்க வேண்டு மென்றும், அதே பிரகாரம் இன்னின்னாரைத் தெரிந் தெடுக்கக் கூடாதென்றும் சில விதி முறைகள் ஏற்படுத்தப் பெற்றிருந்தன. தவிர, தற்காலத்து முறையில், அபேட்சா பத்திரம் தாக்கல் செய்தல், தேர்தல் பிரசாரம், கட்சி பிரதி கட்சிகள் முதலியன இல்லாமலேயே தேர்தல் நடைபெற்றது.

உறுப்பினரின் தகுதிகள்

அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகளில் முக்கியமானவை வருமாறு:—

1. முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் எழுபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

சில கிராமங்களில் முப்பது வயதுக்கு மேற்பட்ட வர்களாகவும் அறுபது வயதுக்கு குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்ற விதி இருந்தது.

2. ஒழுங்காகத் தீர்வை செலுத்தப்பட்டு வருகிற கால் வேலி நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயிருக்க வேண்டும். (ஒரு வேலி என்பது 6⅔ ஏகர்).

3. சொந்த மனையில், சொந்த வீடு கட்டிக் கொண்டு அதில் வாசம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

4. கால் வேலிக்குக் குறைவான நிலம் படைத்த வர்களாயிருக்கும் பட்சத்தில் ஓரளவு கல்விப்பயிற்சி உடையவர்களாயிருக்க வேண்டும்.

5. நிலம் புலம் எதுவுமே இல்லாதவர்களாயிருக்கும் பட்சத்தில், சிறந்த முறையில் கல்வி பயின்றவர்களாகவும், அதே சமயத்தில் பயின்ற கல்வியைப் பிறர்க்கு கற்பிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

6. விவகாரம் தெரிந்தவர்களாகவும், காரியங்களை ஒழுங்காகச் செய்யக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

7. நியாயமான முறையில் பணம் சம்பாதித்தவர் களாயிருக்க வேண்டும்.

8. தூய மனம் படைத்தவர்களாயிருக்க வேண்டும்.

ய யார் தெரிந் தெடுக்கப்படுவதற்குத் தகுதி யற்றவர்கள் ?

1. ஏற்கனவே ஏதோ ஓர் உட் குழுவில் அங்கத்தி னராயிருந்து சரியாகக் கணக்கு ஒப்புவிக்காதவர்கள்.

2. மேற்படியாருடைய உறவினர்கள்.

3. பஞ்சமாபாதகங்கள் என்று சொல்லப்படுபவை களுள் கொலே, களவு, பொய், மதுபானம் ஆகிய குற் றங்களைச் செய்தவர்கள்.

4. மேற்படியாருடைய உறவினர்கள்.

5. மேற்படியாருடன் நெருங்கிய நட்பு கொண்ட வர்கள்.

6. அக்கிரமமான காரியங்களைச் செய்ததற்காக ஜாதிக் கட்டு செய்யப்பட்டவர்கள்.

தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் பதவிக் காலம் ஒரு வருஷந்தான் இந்த ஒரு வருஷ காலத்திற்குள் தவறு கள் செய்து விட்டால் அங்கத்தினர் பதவியினின்று விலக் கப்படுவர். விலக்கும் அதிகாரம் கிராம மகாஜன சபைக்கு இருந்தது. பதவி வகிப்பதற்காக ஊதியம் ஏதும் பெறுதல் கூடாது.

தேர்தல் நடைபெற்ற முறை

இனி, தேர்தல் எப்படி நடை பெற்றதென்பதைப் பார்ப்போம். இது பற்றிய செய்திகளை, பற்பல இடங் களிலுள்ள கல்வெட்டுக்கள் லேசாகத் தெரிவிக்கின்றன வென்றாலும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்திரமல்லூர் (உத்திரமேரூர்) கிராமத்திலுள்ள வைகுண்டப்பெருமாள் கோயிலில் காணக்கிடக்கும் கல் வெட்டுக்கள் விவரமாகத் தெரிவிக்கின்றன.

இந்த உத்திரமல்லூர் கல் வெட்டுக்கள் கி.பி. பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்தவை. அதாவது ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியவை.

இந்தக் கல்வெட்டுக்களில், உத்திரமல்லூர் என்பது உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டி ருக்கிறது. இதில் எல்லா வளங்களும் எல்லா வசதி களும் நிரம்பியிருந்தன. இது முப்பது தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு தொகுதியிலுமுள்ளவர்கள், தேர்தல் நடைபெறுவதற்காகக் குறிப்பிடப்பெற்ற ஒரு நாளில் அந்தத் தொகுதியின் மையமான ஒரு பொது இடத்தில் கூடுவர். அந்த இடத்தில் வாய்ப்பக்கம் குறுகிய துவார முடைய ஒரு மட்குடம் வைக்கப்பட்டிருக்கும் கூடியிருக்கிற ஒவ்வொருவருக்கும் ஒரு பனை ஓலைத் துண்டு (நறுக்கு) வழங்கப்படும். இதற்குக் குட வோலை என்று பெயர். தற்காலப் பாஷையில் ஓட்டுச் சீட்டு என்று சொல்லலாம். அதில் அவரவரும் அங் கத்தினராயிருப்பதற்குத் தகுதி படைத்தவர் ... என்று

தங்களை மனத்திற்குத் தோன்றுகிற ஒருவரின் பெயரை எழுதி மேற்படி குடத்திலிடுவர். இதற்குக் குடவோலை யிடுதல் என்று பெயர். இப்படி எல்லோரும் வாக்குப் பதிவு செய்து குடத்திலிட்டபின்பு, அந்தக் குடம் நன்ருக மூடப்படும். அதனோடு தேர்தல் தொகுதியின் பெயர், வாக்குப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்களடங்கிய ஒரு நறுக்கு இணைக்கப் படும்.

ஒவ்வொரு தொகுதியிலும் இந்த வாக்குப் பதிவை நடத்தி வைத்தது யார் என்பது தெரியவில்லை. அந் தந்தத் தொகுதியிலுள்ள ஒரு முக்கியஸ்தர் கையில் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதென்று நாம் கருதலாம்.

முப்பது தேர்தல் தொகுதிகளிலும் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடை பெற்று முடியும். பிறகு அன்றைய தினமோ மறு நாளோ, கிரா மாக ஜனங்கள் அனைவரும் வயதில் சிறியவர் பெரியவர் அனைவரும் ஓரிடத்தில் கூடுவர். இந்த இடம் பெரும்பாலும் கோயில் மண்டபமாக இருக்கும், அல்லது எல்லோருக்கும் பொது வான ஓ இடமாக இருக்கும். இந்தக் கூட்டத்திற்கு, கிராமத்துக்கோயில்களில் பூசை செய்வோரில் (நம்பி மார்களில் யாரார் அன்றையதினம் கிராமத்தில் இருக் கிருர்களோ) அவர்கள் அனைவரும் ஆஜராயிருப்பர். ஆஜ ராயிருக்க வேண்டியது கட்டாயம். இவர்கள் கூட்டத் தின் மத்தியில் அமர்ந்திருக்கும்படி செய்யப்படுவர்.

கூட்டத்திற்கு எல்லோரும் வந்துவிட்டார்களென்று தெரிந்ததும், முப்பது தேர்தல் தொகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட ஓலைகளுக்குள் (ஓட்டுச் சீட்டுகள்) அடங்கிய முப்பது குடங்களும் கூட்டத்தின் மத்தியில் வைக்கப்படும். பிறகு ஆஜராயிருக்கும் நம்பிமாரில் மூத்தவரான ஒருவர் எழுந்து நின்று, ஒவ்வொரு குட மாக எடுத்து அனைவருக்கும் தெரியும் வண்ணம் உயரத் தூக்கி காட்டிவிட்டுக் கீழே வைப்பார். இந்தக் குடங்களுக்குப் பக்கத்தில் மற்ருெரு மட்குடம் காலியாக வாய் திறந்தபடி வைக்கப்பட்டிருக்கும். இது காலியா யுள்ளது. இதில் ஒன்று மில்லை யென்பதைக் கூட்டத் திலுள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற் காக மேற்படி மூத்த நம்பியாரோ, வேருெரு நம்பி யாரோ இதனை உயரத் தூக்கி தலை கீழாகக் கவிழ்த் துக் காட்டி விட்டுக் கீழே வைப்பார்.

அப்புறம் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கும் விவரம் தெரியாத ஒரு சிறு பையனைக் கூப்பிட்டு, முப்பது குடங் களில் ஒன்றை வாய் திறக்கச் செய்து அதிலுள்ள நறுக்குகளை, காலியாக வைக்கப்பட்டிருக்கும் குடத்திலிடச் செய்வார். செய்ததும், குடத்தை நன்ருகக் குலுக்கு வார். மேற்படி சிறு பையனைக் கொண்டு அதிலிருந்து ஓர் ஓலை நறுக்கை எடுக்கச் செய்வார். அவன் அப் படியே எடுத்து மத்தியஸ்தன் கையில் கொடுப்பான். மத்தியஸ்தன் என்பவன், கிராம உத்தியோகஸ்தர்களில் முக்கியமான ஒருவன்.

இந்த மத்தியஸ்தன் மேற்படி நறுக்கை (ஓட்டுச் சீட்டை) ஐந்து விரல்களையும் அகல வைத்து உள்ளங்கையிலே வாங்கிக் கொள்வான். வாங்கி நறுக்கிலுள்ள பெயரை உரக்கப்படிப்பான். பிறகு அதை, கூடியுள்ள நம்பி மார் ஒவ்வொருவரும் வாங்கிப்படிப்பார் இதற்குப்பி றகே, நறுக்கில் பொறிக்கப் பட்டிருக்கும் பெயருள்ள நபர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்ட தாக எல்லோராலும் அங்கீகரிக்கப்படுவார். இதே முறை யில், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வோர் அங்கத்தினர் வீதம் முப்பது தொகுதிகளுக்கும் முப்பது அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மூன்று குழு வினராகப் பிரிந்து பணியாற்றினர். இந்த மூன்று குழு க்களைத் தவிர வேறு சில குழுக்களும் அவ்வப்பொழுது நியமிக்கப்பட்டனவென்றும், அவைகளுக்கும் மேற் சொன்ன விதமாகத் தேர்தல் நடைபெற்று அங்கத்தி னர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்களென்றும் தெரிகின் றன.

இந்தத் தேர்தல் முறையே ஏறக்குறைய எல்லாப் பெரிய கிராமங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. தெரிந்தெடுக் கப்பெற்ற அங்கத்தினர்கள் பல் வேறு குழுவினராகப் பிரிந்து கிராம நிருவாகத்தை நடத்தி வந்தனர்.

இந்தப் பல்வேறு குழுவினரை அடுத்த கட்டுரையில் அறிமுகப் படுத்திக் கொள்வோம்.

அறிவிப்பு

1960, நவம்பர் 'கிராமநல' இதழில் 'எங்கள் நேரு' என்ற கவிதையை எழுதியுள்ள காரைப்பாக்கம் திரு சோம சுப்பையன் அவர்களின் முழு முகவரி கிடைக்கவில்லை. அவர் தன்னுடைய முழு முகவரியை உடனே தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர். இந்த மாதத்திற்குள் சரியான தகவல் வரவில்லையென்ருல், அவருக்கு அளிக்கப்பட இருக்கும் சன்மானத் தொகை அனுப்பப் படமாட்டாது.

ஆசிரியர்,
கிராமநலம்.

கால்நடைச் செல்வம்

[திரு கோ. ராமசாமி, தலைவர், பஞ்சாயத்து யூனியன், சிவகாசி.]

[கால்நடைச் செல்வம் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய ஒன்று. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியில் பெரிய அளவில் அமைக்கப்படவிருக்கும் 'கால்நடை மருத்துவ நிலையத்தைப்பற்றி இக்கட்டுரை கூறுகிறது. தாராள சிந்தை படைத்த நல்லோர்கள் தங்கள் ஊர்களிலும் 'சிவகாசி'யின் வழியைப் பின்பற்றி நடந்தால் விளையும் பயன் பிரம்மாண்டமானதாக இருக்கும்.
—ஆசிரியர்.]

நமது நாட்டுப் பொருளாதார நிலையில் கால்நடைச் செல்வம் ஒரு முக்கிய இடம் பெறுகின்றது. உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட நமது நாட்டில் நூற்றுக்கு 80 பேருக்கு மேல் உழவையே நம்பி வாழ்கின்றனர். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற உயரிய மதிப்பைப் பெற்றது உழவுத் தொழில். இத்தகைய உயர்ந்த தொழிலுக்கு முதுகெலும்பாக அமைவது கால்நடைச் செல்வமே. உலகிலேயே நமது நாட்டில் தான் மிகுதியான கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் நாம் அவற்றால் அடையும் பயன் மிகவும் குறைவே. எனவே மற்றை நாட்டுக் கால்நடைகளைப் போன்று நம்முடைய நாட்டுக் கால்நடைகளையும் உயர்த்த வேண்டும்.

எனவே கால்நடைப் பராமரிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதை நம் அரசாங்கம் அறிந்து பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதற்காகப் பல லட்சம் ரூபாய்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். கால்நடைப் பராமரிப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டிய நிலைகளை நான்காகப் பிரிக்கலாம். அவையாவன : (1) கால்நடைகளை நல்ல முறையில் வளர்த்தல். (2) கால் நடைகளுக்கு ஏற்படும் இயற்கை நோய்களையும், செயற்கை நோய்களையும் வரும்முன் தடுத்தும், வந்தபின் சிகிச்சை செய்து குணப்படுத்தியும் பராமரித்தல். (3) கால்நடை மருத்துவக் கல்வியும், ஆராய்ச்சியும். (4) கால் நடைகளால் அடையக்கூடிய உழைப்புத்திறன், பால், உரம் முதலியவற்றைப் பெருக்கிப் பயன் படுத்துதல். இந்த நான்கு நிலைகளில் கால் நடைகளைப் பராமரிப்பதில் மருத்துவமே சிறந்த இடத்தைப் பெறுகின்றது. எனவே ஒட்டுவாரொட்டி நோய்கள் பரவாமல் தடுத்தலும், வந்த நோயைக் குணப்படுத்துதலும் கால்நடை அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் அனைவரின் கடமைகளாகும்.

கால்நடை மருத்துவ நிலையங்களின் அவசியம்

நம் தமிழ் நாட்டில் கால்நடைகளை நன்கு பராமரிக்க ஆங்காங்கே கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்க வேண்டியது அவசியமே. சிவகாசியில் கால்நடை மருத்துவ நிலையம் மிகச் சிறிய அளவில் 1953-ல் தொடங்கப்பட்டது. அதை அமைப்பதற்குத் தகுந்த இடம் கிடைக்காமல் பழனியாண்டவர் காலனியில் மாதம் 60 ரூபாய் வாடகைக் கட்டடத்தில் அமைக்கப்பட்டது. அவ்விடம் மிகவும் ஒதுங்கி விட்டபடியால் கிராமத்தார் அனைவருக்கும் போய்ப் பயன் படுத்த முடியாமல் போய் விட்டது. மேலும் அது மிகவும் சிறிய மருத்துவ நிலையமாக (Minor Veterinary Despensary) இருப்பதால் போதிய அளவு மருந்தும், உபகரணங்களும் இல்லை. கால்நடைகளில் முக்கிய சிகிச்சையாகிய "ரணசிகிச்சை" செய்ய அங்கு யாதொரு கருவியும் இல்லை. எனவே பல உயர்ந்த காளைகட்கு ரண சிகிச்சைசெய்ய முடியாததால் அநேக உழவர்கள் தங்களின் கால்நடைச் செல்வங்களை இழக்க நேரிடுகின்றது. எங்கள் சிவகாசி வட்டாரம் பல கிராமங்களையும், ஆயிரக் கணக்கான கால்நடைச் செல்வங்களையும் கொண்டது. எனவே எங்கள் வட்டாரத்திற்கு எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு பெரிய "கால்நடை மருத்துவ நிலையத்தை" ரூபாய் 26,250-ல் கட்டத் தீர்மானித்தோம். இவ்வளவு பெரிய தொகையை அரசாங்கமோ, யூனியனோ ஈடு செய்ய இயலாதாகையால், ஒரு கொடை வள்ளலை நாடினோம்.

சிவகாசி காட்டும் வழி

இந்நிலையில் சிவகாசியின் கொடை வள்ளல் குடும்பத்தில் தோன்றி அதே பண்பைத் தானும் பெற்றுப் பல அறநிலையங்கட்கு வரையாது அளித்து வரும் திருவாளர் N. R. K. R. இரவீந்திரன் அவர்கள் ரூபாய் 15,000-மும், 2 ஏக்கர் நிலமும் கொடுத்துள்ளார்கள். இந்தக் கால்நடை மருத்துவ நிலையம் சிவகாசியிலிருந்து செங்கமல நாச்சியார்புரம் போகும் சாலையில் அமைய இருக்கின்றது. இந்த இடம் கால்நடை மருத்துவ நிலையம் அமைப்பதற்கு மிகவும் தகுதியான இடமாகும். இது சிவகாசி, ஆனையூர், செங்கமலநாச்சியார்புரம், வெள்ளையாபுரம், வடமலைபுரம், திருத்தங்கல், ஆலமரத்துப்பட்டி, K. புதுப் பட்டி, பூவநாதபுரம் ஆகிய ஊர்களிலிருந்து வந்து சிகிச்சை பெறுவதற்கும், சிவகாசியின் தெற்கும், கிழக்குமுள்ள ஊர்களுக்கும் வர வசதியாகவும் அமைந்திருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரியதே.

எனவே இந்த மருத்துவ நிலையத்தின் மூலம் கால் நடைகளுக்கு எல்லாவித மருத்துவ வசதிகளும் அளிப்பதோடு, தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டிய கால் நடைகளை அங்கேயே நிறுத்தி வைத்துப் பார்க்க வேண்டிய வசதிகள் செய்யப்பெறும். 1961-ம் ஆண்டு டிசம்பர் மீ 23உ அன்று தமிழ் நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்கள் பலர் முன்னிலையில் மேற்படி மருத்துவ நிலையத்திற்கு அடிக்கல் நட்டார்கள். நம் யூனியனின் பெரும் முயற்சியால் கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்றும் நிலையம் மிக விரைவில் ஏற்படப் போகின்றது என்ற மகிழ்ச்சிச் செய்தியைப் பொது மக்களுக்கும், மற்ற யூனியன்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வக்காவலர்

(திரு. மீ. லி. சபரிராஜன்)

[மகாத்மாவின் செல்வக்காவல் (Trusteeship) தத்துவம் உயர்ந்த ஒன்றாகும். அந்தத் தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை, திரு சபரிராஜன் அவர்கள், எளிய நடையில் அழகாக இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். —ஆசிரியர்.]

திருவாங்கூர் மகாராஜாவின் முழுப்பெயர் உங்களுக்குத் தெரியுமா? பெருமுயற்சி செய்து, நான் அதைத் தெரிந்து வைத்திருக்கிறேன். இதோ இருக்கிறது அது: மேன்மை தங்கிய சித்திரைத் திருநாள் ஸ்ரீ பத்மநாப தாச வஞ்சிபால குலசேகர கிரீடபதி மன்னே சுல்தான் மகா ராஜ ராஜ ராம ராஜ பகதூர் ஷாம் ஷர் ஜங்.

இந்த நீண்ட பெயரைச் சொல்வதற்குள் மூச்சை முட்டி விடும்போல் இருக்கிறது அல்லவா? மகாராஜாக்கள் விஷயமே அப்படித்தான். அவர்களுடைய பெயர்கள் மட்டுமல்லாமல் அவர்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுமே மூச்சுத் திணற வைக்கக் கூடியனவாகத்தான் இருக்கும்.

இப்பெயரில் உள்ள பத்மநாப தாசன் என்னும் சொல் முக்கியமானது. திருவனந்தபுரத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் பத்மநாப சுவாமியாகும். திருவாங்கூர் மகாராஜாக்களுடைய குல தெய்வம் அவர். சென்ற நூற்றாண்டில் திருவாங்கூரை ஆண்ட மார்த்தாண்ட வர்மா என்னும் மன்னர்தான் தற்போதைய திருவாங்கூர் ராஜ்யத்தின் தந்தை என்று கூறலாம். அந்த நாளில் போரும், கலகமும், குழப்பமும் அதிகமாயிருந்தன. அப்போது திரு மார்த்தாண்டவர்மா பத்மநாப சுவாமியின் ஆலயம் சென்று, "ஆண்டவனே, இந்தக் குழப்பங்களையெல்லாம் ஒழித்து எனக்கு வெற்றி கிடைக்குமானால் நாடு முழுவதையும் தேவரீருக்கு அர்ப்பணம் செய்கிறேன்" என்று வேண்டிக் கொண்டாராம்.

அவர் விருப்பப்படியே எல்லாம் நடந்தது. இதற்கு பத்மநாபசுவாமி காரணமாக இருந்தாரோ, என்னவோ தெரியாது. ஆனால், மன்னர், தாம் வாக்களித்ததைப் போலவே நாட்டைச் சுவாமிக்கு அர்ப்பணம் செய்தார். இறைவன் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு உடனே சிங்காதனத்தில் அமருவாரா? நாம் கோவிலில் பழம் முதலியவற்றை வைத்து சுவாமிக்கு அர்ச்சனை செய்யும்போது இறைவன் அவற்றை எடுத்துக்கொள்வதில்லை. அவ்விதம் செய்வதாயிருந்தால், இன்று யாரும் சுவாமிக்கு அர்ச்சனை செய்யக்கூடமாட்டார்கள். நாமேதான் எடுத்துக் கொள்கிறோம். அதைப்போல் ஆண்டவனுக்குக் காணிக்கையாக ராஜ்யத்தை, அவருடைய பேரால், தம்மை ஓர் அடிமையாக நினைத்துத் திரு மார்த்தாண்ட வர்மா ஆண்டுவந்தார். பத்மநாபதாசன் என்னும் சொல்லில் அடங்கியுள்ள கதை இது. திரு. மார்த்தாண்ட வர்மாவுக்கு பின் திருவாங்கூரை ஆண்ட மன்னர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெயர்களுக்கு முன்னால் பத்மநாப தாசன் என்னும் அடைமொழியைச் சேர்த்துக்கொள்வது வழக்கமாகிவிட்டது.

திரு. மார்த்தாண்டவர்மாவுக்கு ஏற்பட்டிருந்ததைவிட, கஷ்டமும், ஆபத்தும் நிறைந்த ஒரு நிலைமை இன்று நம் நாட்டில் உலகெங்கிலுமுள்ள செல்வர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஏழைகள் பணக்காரர்களைத் தங்கள் பகையவர்களாகக் கருதுகிறார்கள். இதற்குத் தக்க காரணம் இருக்கிறது. ஒரு புறம் செல்வம் குவிந்து கிடக்கிறது. மற்றொரு புறம் வறுமை பிடுங்கித் தின்கிறது.

ஆண்டவன் இந்த உலகத்தைப் படைத்தபோது ஒரு சிலரை அழைத்து "இதை நீங்கள் பங்கு போட்டுக்கொள்ளுங்கள். மற்றவர்கள் உங்களுக் குக்குற்றேவல் செய்து பிழைக்கட்டும்" என்று சொல்லியிருக்க மாட்டார்' எல்லோரும் உழைத்துப் பாடுபட்டு ஆனந்தமாய் வாழ வேண்டும் என்பதுதான் அவருடைய திருவுள்ளமாயிருக்க வேண்டும். உழைப்பின் பெருமையை, காந்தி விளக்கப் புகுந்தபோது, "உழைத்துச் சாப்பிடுவதற்காகவே கடவுள் மனிதனைப் படைத்தார். உழைக்காமல் சாப்பிடுபவர்கள் திருடர்கள்" என்று கூறினார். ஆனால் காலப் போக்கில் நிலைமை மாறி, உலகம் ஒரு சிலர் கையில் அகப்பட்டுக்கொண்டது. இதனால் இன்று சமூகத்தில் நாம் காணும் ஏற்றத்தாழ்வு பெருகிவிட்டது.

இதை ஒழிப்பதற்கு காந்தி ஒரு புது வழி சொல்லுகிறார். அதுவே அவருடைய புகழ்பெற்ற செல்வக் காவல் (Trusteeship) தத்துவமாகும்.

புதிய தத்துவத்தின் சிறப்பியல்பு

இதில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன: (1) செல்வர்களிடமுள்ள பணம் அவர்களிடமே இருக்கும் யாரும் அதைப் பலவந்தமாய் அடித்துப் பிடுங்க மாட்டார்கள். (2) ஆனால் அதை அவர்கள் வீண்செலவு செய்யக் கூடாது. ஒரு புனிதப் பொருளாய்ப் போற்றிப் பாதுகாத்து வரவேண்டும். (3) ஏழைகளின் நன்மைக்கு அதை அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

இதை இன்னும் சற்றுத் தெளிவாகக் கூறலாம். திரு மார்த்தாண்டவர்மா தம்முடைய ராஜ்யத்தை பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, தம்மை அவருடைய அடிமையாய் நினைத்து, அவருடைய பெயரால் ஆண்டு வந்தார். அதைப்போல, செல்வர்கள் தங்களிடமுள்ள செல்வத்தை பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று காந்தி கூறவில்லை:— இறைவனின்

பிரதிநிதிகளான ஏழைகளுக்கு ஏழைகளின் தொண்டுக்கு அர்ப்பணம் செய்யும்படி கூறுகிறார்.

இதனால் நிச்சயமாக ஒரு நன்மை கிடைக்கிறது. ஏழைகளின் அன்புக்கு அவர்கள் உரியவர்களாகிறார்கள்.

கடவுள் அவர்களைக் காப்பாற்ற முன்வந்தாலும் வரா விட்டாலும் ஏழைகள் அவர்களைக் காப்பாற்றுவார்கள்.

இந்தத் தத்துவத்தைக் காந்தி பல ஆண்டுகளுக்கு முன் கூறியபோது, சிலர் சிரித்தார்கள். "சின்ன மீனுக்குப் பெரிய மீன் காவலாயிருக்க முடியுமா? ஆட்டை ஓநாய் பாதுகாக்குமா?" என்றார்கள் அவர்கள். அவர்களுடைய அரசியல் சித்தாந்தமே வேறு. "சமூகத்தில் ஒரு மாறுதல் ஏற்படவேண்டுமானால் இரத்த வெள்ளம் கொஞ்சமாவது ஓட வேண்டும். அந்த வெள்ளத்திலே நீந்திப்போய் அமைக்கும் சமுதாயம்தான் இன்பமாய் வாழமுடியும்" என்பது அவர்கள் கருத்து. அவர்கள் என்னென்னவோ பல புதிய சொற்களையெல்லாம் கண்டு பிடித்துச் சொல்லுகிறார்கள். "பூர்ஷ்வா" என்கிறார்கள். "வர்க்கப்போராட்டம்" என்கிறார்கள். காந்தி இதை ஒரே யடியாய் அடித்துத் தள்ளுகிறார். "அது இந்திய மேதைக்கு முற்றிலும் புறம்பானது" என்கிறார். பலாத்காரப் புரட்சியின் மூலம் கிடைக்கும் நன்மை எதுவும் நீடிக்காது என்கிறார். மனிதனுடைய நல்லெண்ணத்திலே அவருக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறது. "அவனைத் திருத்தவே முடியாது" என்று அவர் கருதவில்லை.

அவருடைய நம்பிக்கை வீணாகவில்லை. இந்த உயர்ந்த தத்துவத்திற்கிணங்க ஒரு செல்வர் வாழ்ந்து காந்தி மகானின் முழு அன்புக்கு உரியவரானார். அவர் இறந்த போது, முற்றும் துறந்த முனிவராகிய காந்தியே கலங்கி விட்டார்.

அந்தச் செல்வர் பிறவியில் ஏழை. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன் நாகபுரியில் காந்திமகானைச் சந்தித்தார். அப்போது அவருக்கு வயது முப்பது இருக்கும். "தங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்றார் அவர். "கேளும், கொடுக்கச் சக்தியிருந்தால் கொடுக்கிறேன்" என்றார் காந்தி வியப்புடன். "என்னைத் தங்கள் புதல்வர் தேவதாசைப் போலக் கருத வேண்டும்" என்றார் அந்த இளைஞர். "ஒத்துக் கொண்டேன், ஆனால் இதன் மூலம் நான் எதுவும் கொடுக்கவில்லை. நீர்தான் எனக்குக் கொடுக்கிறீர்" என்றார் காந்தி. அந்த இளைஞர் தான் பிற்காலத்தில் ஜம்னுலால் பஜாஜ் என்ற புகழ் பெற்ற கோடீசுவரராக விளங்கினார். வணிக மன்னரானார். காந்தி தொடங்கிய பணிகளுக்கெல்லாம் இலட்சக் கணக்கில் செல்வத்தை வாரி வாரி வழங்கிய வள்ளல். அதுகூடப் பெரிதல்ல; தம்மையே அவர் காந்திக்கு அர்ப்பணம் செய்து கொண்டார். அவர் இறந்த மூன்றும் நாள் காந்தி கூறியதாவது: "குழந்தைப் பேறற்றவர்கள் தத்து எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் ஜம்னுலால்ஜி என்னைத் தம்முடைய தந்தையாக தத்து எடுத்துக் கொண்டார். என்னுடைய உடமைகளுக்கெல்லாம் வாரிசாக வரவேண்டிய அவர், தம்முடைய உடமைகளுக்கெல்லாம் என்னை வாரிசாக வைத்துவிட்டுப் போய்விட்டார்".

காந்தியே இப்படிக் கண்கலங்கியபோது மற்றவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? திரு பஜாஜால் ஆதரிக்கப் பட்ட பல தொண்டர்களும், நிறுவனங்களும் அவருடைய பிரிவாற்றாமல் தவித்தார்கள்.

என்றோ எப்பொழுதோ படித்த ஒரு ஹிந்தி கவிதை நினைவுக்கு வருகிறது. "நீ பிறக்கும்போது இவ்வுலகம் சிரித்தது, நீ அழுதாய்; நீ இறக்கும்போது இவ்வுலகம் அழவேண்டும், நீ சிரித்துக்கொண்டே சாகவேண்டும்" என்பதுதான் அதன் கருத்து.

திரு. பஜாஜ் அதற்கிணங்க வாழ்ந்தார். அவரைப் போன்ற செல்வக்காவலர்களையே காந்தி விரும்பினார். ஆனால் இதுவரை அவரைப்போல எத்தனை பேர் தோன்றியிருக்கிறார்கள்? இதை நினைக்கும்போது நமக்குச் சற்று திகைப்பே உண்டாகிறது. பெரும்பான்மையான செல்வர்களுடைய மனம் மாறவில்லை என்பது உண்மை. நிலைமை இப்படியே நீடிக்குமானால் அஹிம்சா முறையில் காந்தி விரும்பிய செல்வக்காவல் சமுதாயத்தை ஏற்படுத்துவது எப்படி?

பாரத நாட்டின் பண்புக்கேற்ற கருத்து

காந்தி இதைப் பற்றியும் யோசிக்காமல் விட்டுவிடவில்லை—ஒரு வழி சொல்லியிருக்கிறார்.

நல்ல முறையிலே சொல்லிச்சொல்லி செல்வர்களுடைய மனத்தை மாற்ற முயலவேண்டும். அவர்கள் வழிக்கு வராவிட்டால் ஒத்துழையாமை என்னும் இராமபாணத்தை எடுத்து விட வேண்டும்.

"சமூகத்தில் ஏழைகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் பணக்காரர்கள் செல்வம் திரட்ட முடியாது" என்று அவர் கூறுகிறார்.

"செல்வக்காவல் தத்துவம் பாரத நாட்டின் பண்புக்கேற்ற கருத்தாகும். ஆகவே இது 'இந்தியா' உலகுக்களிக்கும் கொடையாக இருக்கட்டும்" என்கிறார் காந்தி. மற்றக் கருத்துக்களெல்லாம் மறைந்த பிறகும் கூட, இது நிலைத்து நிற்கும் என்று அவர் உறுதியாக நம்புகிறார். இதற்கு அவர் கூறும் காரணம் அசைக்க முடியாததாகும். மதத்தின் அங்கீகாரம் இருக்கிறது; தத்துவத்தின் அங்கீகாரமும் இருக்கிறது.

செல்வர்கள் காந்தியின் யோசனையை ஏற்பார்களா? தாங்களாகவே மனந்திருந்தி செல்வக்காவலர்கள் ஆவார்களா? அதற்கு வேண்டிய நல்லறிவை அந்தப் பத்மநாப சுவாமிதான் அவர்களுக்கு அருளவேண்டும்.

ஐவகை ஆற்றல் – நிலம்

(பேராசிரியர் ஆர். கே. விஸ்வநாதன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

[அறிவியல் கட்டுரைத் தொடரில் 7-வது கட்டுரை இது. 'நிலமென்னும் நல்லாளின்' சிறப்பான இயல்புகளை விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் —ஆசிரியர்.]

அமைதிக்குச் சான்றாக பூமியைக் கூறுவார்கள் நம் முன்னோர்கள். விஞ்ஞானிகள் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பூமியின் மேற்பகுதி இடையறாது பல மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதை இவர்கள் கவனித்தார்கள். நமது தோட்டத்தில் வாழைக்கன்று ஒன்றைப் புதைப்பதற்கு, சிறிது நேரத்தில் ஒரு குழியை வெட்டி விடுகிறோம். ஆனால் குழியிலிருந்து தோண்டிய மண் உருவாவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இயற்கைச் சக்திகளான நீர், காற்று, பனி இவற்றின் மூலமாகவும், மனிதனது முயற்சிகளினாலும் மண் உருவாகிறது என்று கூறலாம். பூமியின் மேலோட்டில் உள்ள பாறைகள் எவ்வாறு சிதைந்து, துகளாகி நிலமாக மாறுகிறது என்பது இயற்கை விநோதங்களில் ஒன்றாகும். பாறைகளிலிருந்து சிதைந்த மண்ணையும் வண்டலையும் அடித்துக்கொண்டு வருகிறது பாய்ந்துவரும் நீரோட்டம். ஆறுகளினால் அடித்துவரப்படும் இம்மண்ணும், வண்டலும் ஆறுகள் கடலில் கலப்பதற்கு முன்னால் ஆங்காங்கே படிந்து டெல்டா பிரதேசத்தை தோற்றுவிக்கின்றன. தமிழ் நாட்டில் உள்ள தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் டெல்டா பிரதேசத்தை அனைவரும் அறிவர். ஆண்டுதோறும் இடையறாது இந்நிகழ்ச்சி நடைபெற்று வருவதினால் இப்பிரதேசத்தின் பரப்பு வரவர அதிகரித்துக் கொண்டே வரும். அமெரிக்கா நாட்டில் உள்ள மிஸிஸிபி (Missisipi) என்ற ஆற்றின் டெல்டா பிரதேசம் பனிரெண்டாயிரம் சதுரமைல் பரப்பளவு கொண்டிருப்பதாகவும், ஆப்பிரிக்கா நாட்டில் உள்ள நைல் (Nile) நதியின் டெல்டா பிரதேசம் பதினாயிரம் சதுரமைல் பரப்பளவு கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். உலகில் உள்ள மிகப் பெரிய நதிகளில் இவ்விரண்டும் முக்கியமானவை. எனவே இவற்றின் டெல்டா பிரதேசங்களின் பரப்பளவுகளே அதிகமாக இருக்கின்றன.

இரும்பு, ஈரக்காற்றில் வெகு காலம் இருப்பின் துருப்பிடித்து, கடினத்தன்மையை இழந்து, தூள் தூளாக மாறி விடுவதைக் கவனிக்கலாம். இதைப் போலவே பூமியின் மேலோட்டில் உள்ள பாறைகளும் நானா வட்டத்தில் நீரோட்டம், காற்றோட்டம், பனிமலைகள் இவற்றின் கொடுமைகளுக்குள்ளாகி சிதைந்து தூளாகி விடுகின்றன. பாறைகள் சூரியனது வெப்பத்துக்கு எப்போதும் உட்படுவதால் சில நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாறைகளுக்கு வெப்பத்தை எளிதில் கடத்திச் செல்லும் இயல்பு கிடையாது. இதன் விளைவாக பாறைகளின் சூடு அதிகரிக்கும் போது அவை அகற்சி அடைந்து ஆங்காங்கே பிளவுகள் ஏற்பட்டு விடுகின்றன. இப்வுகபிளவில் தண்ணீர் ஓடிச் சென்று விடுகின்றது. பாறைகள் குளிரும்போது இத் தண்ணீர் உறைந்து சில சமயங்களில் பனிக்கட்டிகளாக மாறிவிடும். தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாக மாறும் போது அதன் பருமன் அதிகரிக்கின்றது. இதன் பயனாக பாறைகளில் ஏற்பட்ட விரிசல்களும், பிளவுகளும் பின்னும் அதிகரித்து விடுகின்றன. மழை பெய்யும் போது நீரோட்டம் பாறைகளின் விரிசல்கள், பிளவுகள் இவற்றிலிருந்து சிதைந்த பகுதிகளை அடித்துக்கொண்டு வருகிறது. நீரோட்டத்தின் வலிமையினாலும் பாறைகள் சிதைக்கப் படுகின்றன, அது அடித்துக்கொண்டு வரும் சிறு கற்கள் ரம்பம் போல பாறைகளை அறுத்து அவற்றை மேலும் சிதையச் செய்கின்றன. காற்று அடித்து வரும் மணலும் பாறைகளின் மேற்புறத்தைச் சிதைத்துக் கொண்டே இருக்கிறது. குளிர்ந்த பிரதேசங்களில் பனிமலைகள் நீரோட்டம், காற்றோட்டம் இவை செய்யும் அழிவு வேலையைச் செய்கின்றன. பெரிய மலைகளின் உச்சியில் பனி எப்போதும் இருக்கும் அல்லவா ? பனி அதிகமாக உண்டாகும் போது அது பெரிய மலையாகி எடையின் விளைவாக நகர ஆரம்பிக்கின்றது. பனி மிகவும் மிருதுவாயிற்றே, அது பாறைகளை எவ்வாறு சிதைக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நில அரிமானத்தில் (Soil Erosion) மிகவும் கொடுமையானது பனிமலைகளினால் ஏற்படும் அரிமானம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஒரு நிலத்தின் வளம் அதில் உள்ள துகள்களைப் பொருத்து அமைவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். கோடிக் கணக்கான துகள்கள் சிறிதும், பெரிதுமாக மண்ணில் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பருமன் உள்ள மண்ணில் அதன் எடையைவிட பன்மடங்கு அதிகமான எண்ணிக்கையுள்ள துகள்களே மிகுந்து இருப்பதை விஞ்ஞானிகள் அறிந்தார்கள். இத்துகள்களை பாகுபாடு செய்ய ஒரு வழியை வகுத்து உள்ளனர். சோதிக்க வேண்டிய நிலத்திலிருந்து மண்ணை எடுத்து அதில் அடங்கி உள்ள துகள்களின் பருமனுக்குத் தக்கவாறு அம்மண்ணை பல கூறுகளாக முதலில் பிரித்துக்கொள்ளுவார்கள். பின்னர் ஒவ்வொரு கூறிலும் உள்ள துகள்களின் எண்ணிக்கைக்கும் அவற்றின் எடைக்கும் உள்ள விகிதம் கண்டு பிடிக்கப்படும். இதைச் செய்வதற்கு வாய் குறுகியதும் அதிக நீளமுள்ளதுமான ஒரு கண்ணாடிக் குழாயை நிமிர்வையாக வைத்தக் கொள்ளுவார்கள். ஒரு கூறிலிருந்து சிறிது மண்ணை எடுத்து தண்ணீரில் கரைத்துக் கொண்டு அக்கரைசலை இக் குழாயில் ஊற்றுவார்கள். இக்கரைசலை நன்றாக கலக்கி விட்டு அதில் உள்ள பலதரப்பட்ட பருமன் கொண்ட துகள்கள் குழாயின் அடிப்பக்கத்துக்கு இறங்கும். வேகத்தைப் பரிசோதனையினால் கண்டு பிடித்துக் கொள்ளுகிறார்கள். நுண்ணிய சரளைக்கற்கள், கரடு முருடுமான மணல், நுண்ணிய மணல், வண்டல், களிமண் என்ற விளக்கச் சொற்களைக் கொண்டு அத்துகள்களை வகைப்படுத்துகிறார்கள். இத்துகள்களின் பருமன்களைக் குறிப்பதற்கான வரைபடங்களையும் தயாரிக்கிறார்கள். பெரிய துகள்களின் விட்டங்கள் சாதாரணமாக இரண்டு மிலிமீட்டருக்கு மேல் இருப்பது தெரிய வந்தது. மணல் துகள்களின் விட்டம் இரண்டு மிலிமீட்டரிலிருந்து, மிலிமீட்டரில் இருபதில் ஒரு பங்கு வரை இருப்பதையும், வண்டல் துகள்களின் விட்டம் இருபதில் ஒரு பங்கு (மிலி மீட்டரில்) முதல், மிலிமீட்டரில் ஐந்நூறில் ஒரு பங்கு வரை இருப்பதையும், களிமண் துகள்கள் மிலிமீட்டரில் ஐந்நூறில் ஒரு பங்குக்குக் குறைவான விட்டம் கொண்டிருப்பதையும், சோதனைகளிலிருந்து அறிந்தார்கள். நாம் பணற்பாங்கான நிலம் என்று கூறிவரும் நிலத்தில் மணல் எழுபது சதத்துக்கு அதிகமாக இருக்கிறது. களி நிலம் என்று கூறி வரும் நிலத்தில் சுமார் முப்பத்தைந்து சதத்துக்கு மேற்பட்டு களிமண் இருக்கிறது. ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு மண்ணில்

அடங்கியுள்ள துகள்களின் விட்டத்தை அறிகிருர்கள்என்று நீங்கள் நினைக்கலாம். இதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. ஒரு நிலம் தண்ணீரையும் காற்றையும், கிரகிக்கக் கூடிய சக்தி இத்துகள்களின் விட்டத்தைப் பொருத்து இருப்பதினுலேயே இச் சோதனைகளை விஞ்ஞானிகள் செய்து வருகிருர்கள். இனி ஒரு நிலத்துக்கும் அதன் ஈரக் கசிவிற்கும் உள்ள தொடர்பை விஞ்ஞானிகள் விளக்கும் விதத்தைக் கவனிப்போம்.

மிகச் சிறிய துவாரமுள்ள ஒரு கண்ணுடிக் குழாயை தண்ணீரில் செங்குத்தாக, சிறிது மூழ்கியிருக்குமாறு பிடித்தால் அதில் தண்ணீர் வெளி மட்டத்தில் இருப்பதைவிட அதிக உயரத்துக்கு ஏறி இருப்பதைக் கவனிக்கலாம். பல்வேறு துவாரங்கள் உள்ள குழாய்களை இவ்வாறு பிடித்து நிறுத்தும்போது அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வோரு விதமாக தண்ணீர் ஏறுவதையும் பார்க்கலாம். (படம் 1) துவாரம் மிக்க குறைவாயுள்ள



படம்—1.

குழாயில் அதிக உயரத்துக்கு நீர் எழும்பி நிற்கும். தண்ணீரின் மேற்பரப்பில் தோன்றும் ஒரு சக்தியினுல் இந்நிகழ்ச்சி ஏற்படுதுகிறது. இச்சக்தியைப் "பரப்புவிகு" (Surface Tenrion) என்று கூறுவார்கள். மிகச்சிறிய துவாரங்கள், பொருள்களிடையே ஏற்படும் இடங்களில் எல்லாம் இப்பரப்பு விகுவின் தன்மை எளிதில் புலனுவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். நம் ஆடையில் சிறிது மசி பட்டவுடன் அது வெகு விரைவில் அகன்று பரவி விடுவதைப்பார்க்கிறேம் அல்லவா? நூலிழைகளிடையே உள்ள சிறு சிறு துவாரங்களின் விளைவாக மசி இவ்வாறு பரவி விடுகிறது. மண்ணெண்ணெய் விளக்குகளில் உள்ள திரியில் எண்ணெய் இப்பரப்பு விகுவின் பயனுகவே திரியின் நுனிவரை தொடர்ந்து பரவி இருப்பதையும், திரி நின்று எரிவதும் சாத்தியமாகிறது. நீர்ப் பரப்புக்கு மற்ருெரு இயல்பு இருப்பதையும் ஒரு சிறு பரிசோதனையினுல் அறியலாம். மெல்லிய கம்பி ஒன்றை வளையமாக வளைத்துக்கொண்டு அதன் குறுக்கே நூல் இழை ஒன்று (படம் 2) படத்தில்



படம்—2.

காணப்படுவது போல தளர்ந்து இருக்குமாறு கட்டவும். பின்னர் இவ்வளையத்தை நூலுடன் சோப்பு கரைத்த நீரில் முழுக்கி எடுக்கவும். படத்தில் காணப்படுவது போல வளையம் முழுவதும் சோப்புப் படலம் மெல்லியதாக பரவி நிற்பதை கவனிக்கலாம். இப்போது நூலுக்கு இடம்புறமுள்ள சோப்புப் படலத்தை இலேசாக தொடவும். உடனே அது மறைந்து துவண்டு நின்ற நூல் விகுவாக வலது புறத்திலுள்ள படலத்தினுல் இழுக்கப்படுவதைப் பார்க்கலாம். மூன்ருவது படத்தில் காணப்படுவதுபோல நூலிழை அமைந்திருக்கும். ஒவ்வொரு திரவப்பரப்பும்



படம்—3.

மிகச் சுருங்கிய நிலையில் இருக்க விரும்புவதினுலேயே நூல் இவ்வாறு விகுவாக இழுக்கப்படுகின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். சிறுவர்கள் காட்டு ஆமணக்குப் பாலிலிருந்து கோள வடிவமுள்ள குமிழ்களை ஊதி விளையாடுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். இதுவும் திரவப்பரப்பின் தன்மையினுலேயே சாத்தியமாகிறது.

மழை பெய்வதற்கு முன்னுல் நிலத்தின் மண்ணுனது பொருக்குகளாக அமைந்திருக்கும். ஒவ்வொரு பொருக்கிலும் அனேக நுண்ணிய துவாரங்கள் இருக்கும். மழை பெய்ய ஆரம்பித்தவுடன் மழை நீர் பொருக்குகளின் மேற்புறத்திலுள்ள துவாரங்களில் நுழைகிறது. சீக்கிரத்தில் பரப்பு விகுவின் விளைவாக எல்லா இடங்களுக்கும் பரவ ஆரம்பிக்கிறது. நிலத்தின் கீழே உள்ள

ஒவ்வொரு அடுக்கும் அதற்கு வேண்டிய தண்ணீரை இழுத்துக்கொள்ளுகிறது. இவ்வாறு இத்துவாரங்கள் வழியாக தண்ணீர் படிவு மட்டம் வரை சென்றுவிடுகின்றது. மண்ணில் முன்னதாகவே ஈரக் கசிவு அதிகமிருக்குமானால் மழைத் தண்ணீர் மேலடுக்குகளிலேயே முழுவதும் தங்கி வழிந்தோட ஆரம்பிக்கும். மண்ணின் பொருக்குகள் ஒவ்வொன்றும், ஒரு நுண்ணிய நீர் தேக்கி என்று கருதலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். தாவரங்களின் வேர்ப்பகுதிகளில் அமைந்துள்ள வேர்த் துவிகள் இந் நீர்த் தேக்கிகளை நோக்கியே நாடிச் செல்லுகின்றன. மண்ணிலுள்ள நுண்ணிய துவாரங்கள் மற்றொரு விதத்திலும் நிலத்தின் வளத்தைப் பெருக்குவதில் பங்கெடுத்துக்கொள்ளுவதை விஞ்ஞானிகள் உணர்ந்தனர். வெளிக் காற்றுக்கும், நிலத்துக்கும் தொடர்பு ஏற்படுவதற்கு இத்துவாரங்களே காரணமாக இருக்கின்றன. இதன் விளைவாக நிலத்தினடியில் பல்வேறு இரசாயன மாற்றங்களுக்கு இடமளிக்கின்றன. காற்றிலுள்ள கரியமில வாயு இந்த இரசாயன மாற்றங்களுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. காற்றிலுள்ள பிராணவாயு முதலில் மண்ணிலுள்ள கனிப் பொருள்களுடன் சேர்ந்து அவற்றை மிருதுவாக்கித் தண்ணிரில் கரையும்படி செய்கின்றது. கரியமில வாயு, கரைந்த பொருள்களுடன் சேர்ந்து, இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு புதுப்பொருள்கள் உண்டாகின்றன. பாக்டீரியா (Bacteria) எனப்படும் கண்ணுக்குத் தெரியாத உயிரினங்கள் மண்ணில் உற்பத்தியாகி இந்த இரசாயன மாற்றங்களில் பங்கு கொள்ளுகின்றன. இவ்வாறாக மண்ணிலுள்ள துவாரங்களின் மூலமாக பாக்டீரியா, பிராண வாயு, தண்ணீர், கரியமிலவாயு, முதலியன மண்ணின் வளத்தைப் பெருக்கிவருவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். மேலும் ஒரு நிலத்தின் வளத்தை நிர்ணயிப்பதற்கு வெப்ப நிலை மாறுபாடுகளினால் மண்ணின் துவாரங்களில் உள்ள காற்று எவ்வாறு அகன்று சுருங்குகின்றது என்றும், மண்ணிலுள்ள ஈரக் கசிவு எவ்வாறு ஆவியாகிறது என்றும், இது போன்ற விஷயங்களையே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அதாவது மண்ணினுள் அடைபட்டிருக்கும் காற்றோட்டத்தின் இயல்புத் தன்மையை ஒட்டியே ஒரு நிலத்தின் வளம் அமைகிறது என்று திட்டமாகக் கூறுகிறார்கள்.

நிலத்தின் சாரத்தைத் தாவரங்கள் எவ்வாறு கிரகிக்கின்றன என்பதற்கு விஞ்ஞானிகள் கூறும் விளக்கத்தை இப்போது கவனிப்போம். மண்ணின் துகள்கள் பலவற்றுடன் தொடர்பு ஏற்படக்கூடியவாறு தாவரங்கள் ஒவ்வொன்றுக்கும் வேர்கள் அமைந்திருக்கின்றன. முளைக்க ஆரம்பித்திருக்கும் செடி ஒன்றைப் பிடுங்கி அதன் வேர்களை மண் போகுமாறு நன்றாகக் கழுவி, சுத்தம் செய்து பின்னர் பார்த்தால் அதில் இருக்கும் பல்வேறு கிளைகள் கொண்டுள்ள நுண்ணிய பகுதிகளைக் கண்டு அனைவரும் வியப்பு அடைவது திண்ணம். ஜெர்மானிய நாட்டு விஞ்ஞானி ஒருவர் வெகு சிரமப்பட்டு ஒரு கோதுமைச் செடியின் வேர்களின் மொத்த நீளத்தை அளந்துவிட்டார். இது ஐந்நூறு மீட்டர்கள் இருந்தன! வேர்கள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறிய மயிர்கள் போன்று அமைந்துள்ள வேர்த் துவிகளே நிலத்தின் சத்தைக் கிரகிக்கின்றன. இம் மயிர் இழைகளின் எண்ணிக்கையும், நம்மைப் பிரமிக்கச் செய்யும். முற்சொன்ன விஞ்ஞானி, முளைக்க ஆரம்பித்திருக்கும் கோதுமைச் செடியின் வேர்களில் ஒரு கோடிக்கு மேற்பட்ட வேர்த் துவிகள் இருப்பதை எடுத்துக் காட்டினார். இதை அவர் எடுத்துக் காட்டும்போது நாம் இயற்கை அன்னையின் ஆற்றலை வியக்காமல் எவ்வாறு இருக்க முடியும்? வேர்த் துவிகள் இவ்வளவு சன்னமாகவும், ஏராளமாகவும் இருப்பதன் காரணம் யாதாயிருக்கும் என்று எண்ணுகிறீர்கள். மண்ணின் துகள்கள் பல வற்றுடன் வேர்கள் நேரடித் தொடர்பு வைத்துக்கொண்டு மண்ணின் சாரத்தை கிரகிப்பதற்கு இது இயற்கை செய்திருக்கும் விசித்திரம் என்று நீங்கள் இப்போது அறிகிறீர்கள் அல்லவா?

கடைசியாக நிலத்திலுள்ள தாதுப் பொருள்கள் தாவரங்களின் வளர்ச்சியில் பங்கு கொள்ளும் விதத்தைப் பற்றி விஞ்ஞானிகள் கூறும் விளக்கத்தைக் கவனிப்போம். தாவரங்களுக்கு வேண்டிய, பத்துக்கு மேற்பட்ட தாதுப் பொருள்களில் ஏழு தாதுப் பொருள்கள் வரை நிலம் தருகின்றது. அவை, பாஸ்பரஸ், கந்தகம், குளோரின், பொடாஷியம், கால்சியம், மங்கனீசியம், இரும்பு ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தாவரங்களின் வளர்ச்சியில் பங்கு எடுத்துக் கொள்ளுகிறது. உதாரணமாக தாவரங்களிலுள்ள மாவுப் பொருளை விருத்தி செய்ய பொடாஷியம், உதவுகிறது. தாவரங்களின் வேர்களைப் பலப்படுத்த பாஸ்பரஸ் உதவுகிறது. நிலம் காடி இயல்புடன் (acid) அல்லது உவர்ப்பு இயல்புடன் (Alkaline) அமைந்துவிடுகிறது. காடி இயல்பு அதிகமிருப்பின் தாவரங்கள் அவற்றுக்கு வேண்டிய பாஸ்பரஸ் தாதுப் பொருளைக் கிரகிக்க சிரமப்படுகின்றது. அவ்வாறு இருப்பின் சுண்ணாம்பைத் தூவி நிலத்தின் காடி இயல்பைக் குறைத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். நிலத்துக்கு உவர்ப்பு இயல்பு அதிகரிப்பின் தாவரங்கள் இரும்பு, மாங்கனீஸ், துத்தநாகம் முதலிய தாதுப் பொருள்களைக் கிரகிப்பதற்குச் சிரமப்படுகிறது என்று விஞ்ஞானிகள் உணர்ந்து அதற்கு, வேண்டிய பரிகாரங்களையும் கண்டுபிடித்துள்ளார்கள். நைட்ரஜன் (Nitrogen) என்னும் தாதுப் பொருளே தாவரங்களின் வளர்ச்சிக்கு அதிகமாக வேண்டப்படுகிறது. இதை பெரும்பாலும் தாவரங்கள் நிலத்திலிருந்துதான் பெறுகின்றன. ஓரளவுக்கு காற்றிலுள்ள நைட்ரஜனை, சில தாவரங்கள் நேராகவே கிரகித்துக்கொள்ளுகின்றன. உதாரணமாக வேர்கடலைச் செடிகளின் வேர்களில் சில முடிச்சுகள் இருப்பதை கவனித்திருக்கலாம். இவற்றில் சில நுண்ணிய கிருமிகள் இருக்கின்றன. இக் கிருமிகள் காற்றிலுள்ள நைட்ரஜனை எளிதில் கிரகிக்க உதவுகின்றன. நிலத்தின் சாரத்தை அதிகரிக்க கொட்டில் எருக்களைப் பயன்படுத்தும் வழக்கம் நம் நாட்டில் நீண்ட காலமாக இருந்துவருகிறது. ஆடு, மாடு, இவற்றின் மலமும், சிறுநீரும் உரேயமுள்ள நைட்ரஜன் எருக்கள் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சில இடங்களில் பிராணிகளின் எலும்புகளை நொருக்கிப் பொடி செய்து கொண்டு அப்பொடியை நிலத்தில் தூவுவது வழக்கம். பிராணிகளின் எலும்புகளில் கால்சியம் பாஸ்பேட் என்ற பொருள் இருக்கிறது. இது எளிதில் நீரில் கரைந்துவிடாது. எனவே பயிர்கள் இதை நேராக கிரகித்துக்கொள்ளுவது கடினம். இதற்காக இப் பொடியை ஸல்பூரிக் ஆஸிட் (Sulfuric acid) என்ற காடியில் கரைத்துக் கொண்டு அதையே செயற்கை உரங்களில் (Artificial manures) பயன் படுத்திவருகிறார்கள். இவ்வாறாக விஞ்ஞானம் பல வழிகளில் நிலத்தின் வளத்தைப் பெருக்குவதற்கு பயன் அளித்து வருகின்றது.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமான வேலையும் இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

14. வாய்க்கால்களை நவீனமாகச் சீரமைப்பதன் மூலம் சமவெளிப் பிரதேசங்களில் தண்ணீரை மிச்சப்படுத்தும் உபாயங்களையும் கண்டறிந்து வருகிறோம். இத்துறையில், தஞ்சைப் பகுதியிலும், வைகைப் பகுதியிலும் உள்ள வாய்க்கால்கள் ஆராயப்பட்டு வருகின்றன. புதிய ஏற்பாடுகளின்படி வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு அதனால் மிச்சமாகும் தண்ணீர் பாசன வசதியை ஸ்திரப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

15. இப்படிப்பட்ட சாதனைகளோடு நம் கடமைகள் முடிந்து விட்டன என்று நினைக்கக்கூடாது. நமது ஜனத்தொகை ஏறிக் கொண்டே போகிறது. அதற்கு ஏற்றபடி நீர்ப்பாசன வசதிகளும் அதிகரிக்கவில்லையானால், உணவுப் பற்றுக்குறை ஏற்படும். எனவே நீர்ப்பாசன அபிவிருத்தி, இடையறாது தொடர்ந்து செய்ய வேண்டிய முதற் கடமையாகும். ஆயினும், துரதிர்ஷ்டவசமாக இன்னும் புதிய பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்ள நமக்கு உபரி நீர் இல்லை. நம்மிடம் உள்ள தண்ணீரை எல்லாம் நாம் ஏற்கனவே கட்டுப்படுத்தி விட்டோம். இனி, நம் தண்ணீர்த் தேவைக்கு அபரிமிதமாக நீர் வளம் உள்ள பக்கத்து ராஜ்யங்களையே நாம் நாட வேண்டியிருக்கிறது. இவ்வகையில் ஏற்கனவே நமக்குப் பரம்பிக்குளம் திட்டத்திற்காகக் கொஞ்சம் உதவி பக்கத்து ராஜ்யங்களிலிருந்து கிடைத்திருக்கிறது. இதற்காக நாம் நன்றி செலுத்த வேண்டும். ராஜ்யங்களுக்குள்ளே நல்லெண்ணமும் பரோபகார உள்ளமும் வளர்ந்தால், இது போன்ற பரஸ்பர உதவிகள் இன்னும் எவ்வளவோ கிடைக்கக்கூடும். ஆனால் மற்றவர்களின் உதவியை நாடுவதற்கு முன்னால் நாம் நமக்குக் கிடைத்துள்ள நீர்வளத்தைக் கொஞ்சமும் சேதமில்லாமல் பூரணமாய் பயன்படுத்த வேண்டும். நமது பொதுமக்கள்—குறிப்பாக விவசாயிகள்—இவ்விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கிடைக்கும் தண்ணீரைக் கூடுமான அளவு சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். நல்ல உரங்களையும், நல்ல விதைகளையும் பயன்படுத்திப் புதிய உத்திகளுடன் பயிரிட்டு நல்ல பலன் காண்பதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும்.

16. பாசன வசதியையும் வருமானத்தையும் பெருக்குவதோடு நீர்ப்பாசனத் திட்டங்களின் முடிவடைந்துவிட்டதாகக் கருதுவது சரியல்ல; அந்தந்த வட்டாரங்களின் வாழ்க்கைத்தரம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் திட்டங்களின் முழுப் பயனைக் கணக்கிட வேண்டும். நீர்ப்பாசன வசதி வளர்ந்துள்ள இடங்களில் வாழ்க்கைத்தரமும் தவறாமல் உயர்ந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. இப்போது கிராமங்கள் பற்பல வகைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நமது திட்டங்களில் கண்ட செழிப்பை மக்கள் நன்றாக உணர்ந்து அனுபவித்து மகிழ்கிறார்கள். மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் வளமாக்கும் திட்டங்கள் பலவற்றை நாம் மேலும் நிறைவேற்றி வெற்றி பெறுவோமாக.

(சென்னை வானொலியில் நிகழ்த்தப்பட்ட பேச்சின் தமிழாக்கம்).

குழந்தைகள் க்ஷேமநலத் திட்டங்களுக்கு

20 கோடி ரூபாய்

குழந்தைகளின் க்ஷேமநலத் திட்டங்களுக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 20 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று, திட்டக் கமிஷன் அங்கத்தினர், ஸ்ரீ ஸ்ரீமந் நாராயண் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ந் தேதி, புது டில்லியில் கூறினார்.

மாதர்-குழந்தைகள் க்ஷேமநலனுக்காக பாரத் சேவக் சமாஜத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்திந்தியப் பயிற்சி வகுப்பில் பயிற்சியாளர்களுக்கு அவர் உரை நிகழ்த்தினார்.

பாலர் விடுதிகளுக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஆறு நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதோடு, குழந்தைகள் க்ஷேமநலனுக்காகப் பல முன்னோடித் திட்டங்களும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். வருங்காலச் சந்ததிகள் எதிர்கால இந்தியாவின் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வதற்கேற்ற வாய்ப்புக்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கக்கூடியபடி, மத்திய சமூக க்ஷேமநல போர்டும், சமுதாய நல அபிவிருத்தித் தொகுதிகளும் மேற்கொள்ளும் எல்லா க்ஷேமநலத் திட்டங்களும் அமைந்திருக்கும்.

குழந்தைகளின் ஜாதகங்களையும், நட்சத்திரங்களையும் பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பதற்குப் பதிலாக, நமது சிறுவர், சிறுமியர்களுக்குத் தக்க கல்விப் பயிற்சி அளிப்பதில் நாம் கவனம் செலுத்தினால் எவ்வளவோ நன்றாக இருக்கும் என்றும், திறமை வாய்ந்த பிரஜைகளாக அவர்கள் வளர்வதற்கு இது பேருதவியாக இருக்கும் என்றும் ஸ்ரீ ஸ்ரீமந் நாராயண் கூறினார். நமது யுவர், யுவதிகளின் தரத்தையும், கடுமையாக உழைப்பதற்கும், திறமையாகப் பணியாற்றுவதற்கும் அவர்களுக்குள்ள சக்தியையும் பொறுத்தே இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கும் என்றும், அது ஜோதிடப் பலன்களைப் பொறுத்தது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராம நலம்-
பகுதி-உ. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II
PANCHAYAT GAZETTE

சொத்து மாற்றத்தின் மேல் வரி விதிப்பு—'நிலவரி' (Land Revenue) என்ற சொல்லுக்கு விளக்கம்

[Act–The Madras Panchayats Act, 1958–Duty on transfers of Property–Definition of the term "Land Revenue"–Instructions issued].

(R. D. and L. A. Memorandum No. 245331, dated 21st December 1961.)

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 124 (3)-வது பிரிவின்படி, பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்துக் கிராமங்களில், சொத்துமாற்றத்தின் மேல் விதிக்கப்படும் வரியின் மேல் வசூலிக்கப்படும் சர்சார்ஜ், வட்டார முழுதுக்கும் ஒன்று சேர்த்து, வட்டாரத்தின் நிலவரி வீதத்தில் வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்து கிராமங்களுக்கும் வினியோகிக்கப்பட வேண்டும்.

2. மேற்படி சட்டம் 124 (3)-வது பிரிவில் 'நிலவரி' (Land Revenue) என்று வரும் சொல், 115-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ள அதே பொருளுடையதா என்ற பிரச்சினை எழுதப்பட்டுள்ளது. 115-வது பிரிவில் 'நிலவரிக்கு' (Land Revenue) கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தையே 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 124 (3) பிரிவில் கூறப்படும் இடத்திற்கும் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல தல-நிர்வாகத் துறையின் 21-12-61 தேதியிட்ட அறிக்கை எண் 245331)

கதர் அபிவிருத்தித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்தல்

[Khadi–Programme for development of Khadi–Entrustment to Panchayat Unions–Orders Issued—R. D. and L. A., G. O. Ms. No. 3387, dated 26th December 1961.]

பஞ்சாயத்து நிர்வாகத்தின் மூலம், கிராமப் புறங்களின் மேலும் கதர் அபிவிருத்தி செய்ய ஒரு திட்டத்தை வகுக்கலாமா என்ற யோசனை அரசாங்கத்தின் ஆராய்ச்சியில் இருந்து வந்தது. கிராம நல- தல நிர்வாகத் துறையின் 1-4-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 964–ல், கிராமியக் கலை, கைத்தொழில், தொழில் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுகின்ற பொறுப்பை—மாநில, கதர், கிராமத் தொழில்கள் போர்டினிடம் சமுதாய நலத் திட்டத்தில் சேர்த்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் மாநில கதர், கிராமத்தொழில்கள் போர்டுடன் கலந்தாலோசித்து கதர் அபிவிருத்தி ஒரு திட்டத்தை உருவாக்கி அதை பஞ்சாயத்துக்களிடமும் பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. அந்தத் திட்டத்தின் விவரம் இந்த ஆணையின் பினபகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள கோயம்புத்தூர்*, நீலகிரி† தவிர ஏனைய மாவட்டங்களில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம்.

† நீலகிரி மாவட்டத்திற்கு உதன தனிப்பட்ட நிலைமைகளைக் கருதி இந்தத் திட்டம் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது

* கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏறகெனவே கதர் அபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளதால் மேற்கொண்டு பரப்புதல் நிறுத்தப் பட்டது.

திட்டத்தின் விவரம்

இந்தத் திட்டத்தை நிறைவேற்றத் திறனுள்ள பஞ்சாயத்துக்களே, அதன் எல்லையிலுள்ள பஞ்சாயத்துக்களிலிருந்து பஞ்சாயத்து யூனியன்னே தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வோராண்டுக்கும் 20 இ. சான் சர்க்காக்கள் வினியோகிக்கபடும். சர்க்காக்கள் அறை விலக்கு, அதாவது சர்க்கார் ரூ. 3·50 ந.பை-க்கு கொடுக்கப்படும். சர்க்காவின் மீதிப் பணத்தை மாநில கதர் கிராமத் தொழில்கள் போர்டு உதவிப் பணமாகக் கொடுக்க அதாவது சர்க்காவைப் பெறுபவர் ரூ. 3.50 கொடுக்கவேண்டும். சர்க்காவை முன்னதாகக்கொடுத்துவிட்டு, பின்னல் பணமாகவாவது நூலாகவாவது பெற்றுக்கொண்டு, அந்தப் பணத்தைக் கழித்துக்கொள்ளலாம். பஞ்சாயத்தோ, அன்றிப் பஞ்சாயத்து யூனியனே, இந்தச் செலவில் பாதியையோ, அல்லது முழுத் தொகையையோ எற்றுகொள்ளுவதில் அரசாங்கத்திற்கு எந்த ஒரு தடையும் இல்லே. அத்துடன், மாநில, கதர், கிராமத் தொழிகள் போர்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வினியோகிக்கப்பட்டுள்ள சர்க்கா ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாய் மதிப்புள்ள பஞ்சை இனமாக வழங்கும். மேலும் கதர் கிராமத் தொழில்கள் போர்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஒரு பஞ்சாயத்துக்கு ரூ. 350 வீதம் புழங்கும் முதலீடாக (Working Capital) அளித்து வசதி செய்யும். இதற்கும் மேலாக, மாநில கதர் கிரா தொழில்கள்போர்டு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், ஒரு துணை நிலேயம் (Sub-Centre) நடத்துவதற்கென்று ஒரு (Grade II) இரண்டாந்தா பணியாளரை ரூ. 90—140 சம்பள வீதத்தில் அமர்த்தி கொள்ள எற்படும் செலவு முழுதையும் மானியமாக அளிக்கும்.

மாநில, கதர் கிராமத் தொழில் போர்டு எற்கனவே பல வட்டாரங்களில் பவரலான கதர் திட்டத்தை பரப்பியுள்ளது. எந்தப் பஞ்சாயத்து யூனியனுவது புதிய கதர் அபிவிருத்தித் திட்டத்தை எடுத்து நடத்தினல் அந்தப் பரவலான கதர் திட்டம் வாபஸ் பெறப்படும்.

இது விஷயத்தில் தேவைப்படும் சர்க்காக்கள், பருத்தி பருத்தியைப் பட்டை போடும் கட்டைகள் ஆகியவற்றைச் சேமித்து வைக்கும் துணை நிலேயமாக (Sub Centre) வட்டாரம் செயல்படும். துணை நிலேயத்துக்குத் தேவையான இட வசதிகளேப் பஞ்சாயத்து யூனியன், தன் சொந்தச் செலவில் செய்து கொடுக்க வேண்டும். சர்க்காக்களே, கதர்த் துறையின் அங்கீகாரம் பெற்ற விற்பனேயாளரிடம் பஞ்சாயத்து யூனியன் வாங்கிக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கதர்த் துறைகூட பருத்தியும், பருத்தி பட்டைபோடும் கட்டைகளும் வழங்கும். அவ்வப்போது தேவைப்படும் சர்க்காக்கள், பருத்தி பட்டை போடும் கட்டைகள் முதலியனவைகளேத் கணக்கெடுத்து முன்னதாகவே சேமித்து வைத்துக்கொள்ளும்.

வட்டாரத்தில், இந்தத் திட்டம் தொழில் வளர்ச்சி அலுவலரால் (Extension Officer - Industrie முக்கிய சேவிகை, கிராம சேவகர், கிராம சேவிகைகள், இருசமூக நலப் பணியாளர்கள் ஆகியோரின் துணையுடன் நிறைவேற்றப்படும். துணை நிலேயத்தைக் கவனித்துக் கொள்ள, மேலும் ஒரு இரண்டாந்தரப் பணியாளரை (Grade II Assistant) பஞ்சாயத்து யூனியன் அமர்த்திக் கொள்ளலாம். ஆரம்ப நிலேயில் கதர் உற்பத்தி நுட்பத்தை உணர்ந்த ஒரு தகுதி வாய்ந்த வரை மேற்படி பணிக்கு பஞ்சாயத்து யூனியன் அமர்த்த முடியுமா என்பது ஐயத்திற்கு உரியதாகும். ஆகவே, கதர்த் துறை, பயிற்சி பெற்றவர்களின் பணியைப் பஞ்சாயத்து யூனியனுக்குப் பயன்படுமாறு அளிக்கும் முன்னரே பிறப்பித்த ஆணையின்படி தொழில் வளர்ச்சி அதிகாரி பஞ்சாயத்து யூனியனுக்கு, அதனிடமிருந்து ஊதியத்தை எதிர்பாராமல் பணியாற்றுவார். கதர் வளர்ச்சி அதிகாரியும் (Extension Officer, Khadi) நூற்பு அமைப்பாளர்களும் (Spinning Organisers) இப்பொழுது பணியாற்றுகின்ற வட்டாரங்களிலிருந்து திரும்பப் பெறப்பெற்று அதுக்கெல்லாம் மாற்றுப் பணியாளர்கள் அமர்த்தப்படுவர்.

நூல் நூற்போரிடமிருந்து நூலே, துணை நிலேயம் வாங்கும். இந்த வேலையை கிராம சேவிகைகள், சமூக நல பணியாளர்கள், கிராம சைவகர்கள் ஆகியோர் செய்ய அனுமதிப்பது பஞ்சாயத்து யூனியனின் விருப்பத்திற்குட்பட்டதாகும். வாங்கப்படுகின்ற நூலின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பாகும் என்று அரசாங்கம் வலியுறுத்த விரும்புகிறது. துணை நிலேயத்தில் நூல் வாங்கப்படுவதற்கு முன்னர், அவற்றின் தரத்தை சோதனே செய்வதற்கு வேண்டிய எற்பாட்டுக்கு, நூல் வாங்கும் விஷயத்தில், வட்டாரப் பணியாளர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி அளிக்கக் கதர்த் துறை எற்பாடு செய்யும். இது சம்பந்தமாக விவரமான ஆணை, மாநில கதர் கிராமத் தொழில்கள் போர்டு தனியாகப் பிறப்பிக்கும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்யும் பஞ்சாயத்து யூனியனில், ஒவ்வோரு பஞ்சாயத்துக்கும், ஒரு ஆண்டுக்குக் கிடைக்கக்கூடிய உதவியைக் குறிக்கின்றது :—

மானியம்.	ரூபாய்.
1. 20 சர்க்கார்களின் விலேக்கு ரூ. 3.50 வீதத்தில் உதவிப் பணம்.	70
2. நூற்பாளர் ஒருவருக்கு ஒரு ரூபாய் மதிப்புள்ள பருத்தி வீதம், புதிய நூற்பாளர்களின் பயிற்சிக்கு பருத்தி வழங்கும் வகையில்.	20
3. பஞ்சாயத்து யூனியனுக்கு, ஒரு இரண்டாம் தரப் பணியாளர் (Grade II—Assistant) அமர்த்த ஆகும் செலவுக்கு முழு மானியம்.	1,550

கடன்.	ரூபாய்.
கதர் வாங்க, நூல் வாங்க, பருத்தியும் பருத்தி பட்டை போடும் கட்டைகளும் வாங்கும் சேமித்து வைக்க—ஆகிய வேலைகளுக்கு புழங்கும் முதலீட்டுக் கடன் (Working Capital Loan)	350

பஞ்சாயத்து யூனியன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்று வதன் மூலமாக, இந்தத் திட்டங்களை எடுத்து நடத்த முறையாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் பஞ்சாயத்து யூனியன், நிதி வசதிகளுக்காக மாவட்டக் கதர் அலுவலரின் மூலம் (District Khadi Officer) மாநில, கதர் கிராமத் தொழில்கள் போர்டுக்கு மனு செய்ய வேண்டும். மாநில கதர் கிராமத் தொழில்கள் போர்டு பஞ்சாயத்து யூனியனுக்கு நேரடியாக உதவி மானியம் (Grant-in-aid) என்ற முறையில் நிதி வழங்கும். மேலே குறிப்பிடப்பட்ட புழங்கும் முதலீட்டுக் கடன்—பஞ்சாயத்து யூனியனுக்கு அளிக்கப்பட்ட கடன் தொகை யாகக் கருதப்பட்டு, அதைத் திருப்பிச் செலுத்தும் விஷ யம், மாநில, கதர் கிராமத் தொழில்கள் போர்டினுல் முடிவு செய்யப்பட்டு பஞ்சாயத்து யூனியனுக்கு அறிவிக் கப்படும்.

பஞ்சாயத்து யூனியனின் கதர் நிலையம் (Khadi Centre) நிலைய கதர் அலுவலருடன் இணைக்கப் படும். வட்டாரக் கதர் நிலையம் அத்துடன் இணைக்கப் பட்ட கதர் நிலையத்திடமிருந்து தேவையான அளவு பருத்தியையும், பருத்தி பட்டை போடும் கட்டைகளையும் பெற்றுக்கொண்டு அதற்குப் பதில் நூலை அந்த நிலையத் திற்கு அனுப்பிவிடும். பல்வேறு யூனியன்களின் கதர் நிலையங்களுடன் இந்த வட்டார நிலையங்களை இணைத்து கதர்த் துறை இயக்குநர் (Director of Khadi) தனியாக ஆணைகள் பிறப்பிப்பார்.

கதர் உற்பத்தியில் அபிவிருத்தி காண்பதுடன், வட்டா ரத்தில் உற்பத்தி செய்யப்படும் கதரின் பெரும் பகுதி அந்த வட்டாரத்திற்குள்ளேயே உபயோகத்திற்கு வரும் படியும் பார்த்துக்கொள்ள வேண்டியது பஞ்சாயத்து யூனி யன்களின் பொறுப்பாகும் என்று அரசாங்கம் வலி யுறுத்துகிறது. இது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் ஒரு "நூற்பாளர் முன் செலுத்தும் முறை"யை (Spinner's Deposit System) அறிமுகப்படுத்தி, அதன் மூலம் ஓரளவு நூலை, அதாவது 1/3 பகுதியை முன்ன தாகப் பெற்றுக்கொண்டு, நூற்பாளர்களின் வேலையின் மேல் கதர் வழங்க வேண்டும்.

எல்லா வகையான முன் எச்சரிக்கைகளுக்கு பின்னும் ஓரளவு தரக்குறைவான நூல் உற்பத்தி செய்யப்படலாம். அத்தகைய தரம் குறைந்த நூலை முழுதும் நிராகரித்து விடுவதற்குப் பதிலாகக் குறைந்த விலைக்கு வாங்கலாமா என்பது பற்றி கதர்த் துறை ஆராய்ந்து வருகிறது. இது பற்றிய ஆணைகள் தனியே மாநில கதர் கிராமத் தொழில்கள் போர்டிடமிருந்து பிறப்பிக்கப்படும். பணி யாளர்களின் நிர்வாக மேற்பார்வையும், திட்ட நிறை வேற்ற நிர்வாகப் பொறுப்பும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைச் சார்ந்ததாகும். மாவட்ட நிலையில் தொழில் நுட்ப மேற் பார்வையை, மாவட்ட கதர் அலுவலர் (District Khadi Officer) கவனித்துக்கொள்வார். இந்த ஆணையில் கூறப்பட்டுள்ள விளக்கங்களும், அவ்வப்போது கதர்த் துறைப் பணியாளர்களால் அளிக்கப்படும். இவை போன்ற விளக்கங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன என் பதற்கு இத் திட்டப் பொறுபேற்றுள்ள வளர்ச்சி அலுவ லர் கண்டிப்பான உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டிடம் பெறு கின்ற மானியத்திற்கும், கடனுக்கும் பஞ்சாயத்து யூனி யன் மன்றம் ஒரு தனிக்கணக்கு வைத்திருக்க வேண்டும். கணக்கு வைப்பு முறை பற்றி கதர்த் துறை இயக்குந ருடன் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்கத்தால் மேலும் விளக்கங்கள் வெளியிடப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 26-12-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3387)

1958-ம் வருடத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின்கீழ் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம் – மூன்ருவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்தல்

[Panchayat Union Councils-Entrustment of National Extension Service Scheme of Community Development under Section 66 of the Madras Panchayats Act, 19.8---Entrustment to Third batch of Panchayat Unions---Orders issued---R.D. and L.A. Go. Ms. No. 3434, dated 30-12-61]

கிராம நல, தல நிர்வாகத் துறையின் 2-3-1961-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 588-ல், வரையறுக்கப்பட் டுள்ள கால அட்டவணைப்படி, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தை நிறைவேற் வேற்றுகின்ற பொறுப்பு, 1-1-1962 முதல், மூன்ருவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்

பட்டுள்ளது. மேற்படி ஆணையின் 3-வது பாராவில், தேவையான வருவாய்களை ஈட்டு நன்கொடைகள் (Matching Contributions) வசூலிப்பதன் மூலம் தம்முடைய பொறுப்பை ஒப்புக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். அவ்வாறு வசூலிக்கப்படும் ஈட்டு நன் கொடைகள் கிராம நலத் துறையின் 16-8-1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 664-லும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 25-1-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 211-லும் கூறப்பட்டுள்ள பொருளாதார ஏற்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப்பணித் திட்டத்தை, 1-1-1962 முதல் இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள மூன்றுவது குதி பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மேலும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 21-3-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 838-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொருந்தும் என்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இணைப்பு

வடார்க்காடு மாவட்டம்

1. கந்திலி.
2. வாணியம்பாடி.
3. ஆலங்காயம்.
4. காட்பாடி.
5. குடியாத்தம்.
6. பேர்ணம்பட்டு.
7. மாதனூர்.
8. அணைக்கட்டு.
9. வேலூர்.
10. திமிரி.
11. அரக்கோணம்.
12. புதுப்பாளையம்.
13. தண்ட்ராம்பேட்டை.
14. திருவண்ணமலை.
15. கீழ்ப்பென்னத்தூர்.
16. கஸ்தாம்பாடி.
17. வந்தவாசி.
18. தெள்ளார்.
19. அனக்காவூர்.
20. செங்காவூர்.

தென்னர்க்காடு மாவட்டம்

21. வல்லம்.
22. திருவெண்ணெய் நல்லூர்.
23. முகையூர்.
24. திருக்கோயிலூர்.
25. வானூர்.
26. மயிலம்.
27. ஒலக்கூர்.
28. கந்தமங்கலம்.
29. விக்கிரவாண்டி.
30. கடலூர்.
31. நெல்லிக்குப்பம்.
32. கொமராட்சி.
33. காட்டுமன்னார் கோயில்.
34. விருத்தாசலம்.
35. கம்மாபுரம்.
36. ரிஷிவந்தியம்.
37. சங்கராபுரம்.

செங்கற்பட்டு மாவட்டம்

38. திருவொற்றியூர்.
39. வாலாஜாபாத்.
40. திருப்போரூர்.
41. சித்தாமூர்.
42. லத்தூர்.
43. அச்சரப்பாக்கம்.
44. சோழவரம்.
45. திருத்தணிகை.
46. திருவாலங்காடு.
47. பள்ளிப்பட்டு.
48. இராமகிருஷ்ண ராஜு பேட்டை

கோயம்புத்தூர் மாவட்டம்

49. பெருந்துறை II.
50. ஊத்துக் குளி.
51. நம்பியூர்.
52. தாளவாடி.
53. அந்தியூர்.
54. அன்னூர்.
55. காரமடை.
56. பேரூர்.
57. சிங்காநல்லூர்.
58. சர்க்கார் சாமக்குளம்.
59. மதுக்கரை.
60. குடிமங்கலம்.
61. மாடத்துக்குளம்.
62. பொள்ளாச்சி.
63. ஆனைமலை.

மதுரை மாவட்டம்

64. தென்கரை.
65. தேனி.
66. சின்னமனூர்.
67. உத்தமபாளையம்.

68. கம்பம்.
69. சாணார்பட்டி.
70. வடமதுரை.
71. பாளையம்.
72. தொப்பம்பட்டி.
73. ஒட்டன் சத்திரம்.
74. மேலூர் II
75. நத்தம்.

இராமநாதபுரம் மாவட்டம்

76. அருப்புக்கோட்டை.
77. திருச்சுழி.
78. நரிக்குடி.
79. இளையான்குடி.
80. திருப்புவனம்.
81. சிவகெங்கை.
82. திருப்பத்தூர்.
83. சாக்கோட்டை.
84. திருப்புல்லணி.

சேலம் மாவட்டம்

85. சூளகிரி.
86. கெலமங்கலம்.
87. தளி.
88. பாலக்கோடு.
89. நல்லம்பள்ளி.
90. அரூர்.
91. நங்க வள்ளி.
92. ஓமலூர்.
93. தாரமங்கலம்.
94. கடையம்பட்டி.
95. காரிப்பட்டி.
96. வீரபாண்டி.
97. சேலம்.
98. ஏர்க்காடு.
99. பனைமரத்துப்பட்டி.
100. இராசி புரம்.
101. வெண்ணந்தூர்.
102. புதுச்சத்திரம்.
103. எருமைப்பட்டி.
104. நாமக்கல்.
105. மோகனூர்.
106. கபிலமலை.
107. கொல்லிமலை.
108. பள்ளிப்பாளையம்.
109. மல்ல சமுத்திரம்.
110. எலச்சிபாளையம்.
111. மகுடஞ்சாவடி
112. சங்கரி.
113. கொங்கணபுரம்.

தஞ்சாவூர் மாவட்டம்

114. தஞ்சாவூர்.
115. திருவையாறு.
116. திருவோணம்.
117. மதுக்கூர்.
118. பேராவூரணி.
119. அறந்தாங்கி.
120. திருமருகல்.
121. நன்னிலம்.
122. கொரடாச்சேரி.
123. திருவாரூர்.
124. மன்னார்குடி.
125. நீடாமங்கலம்.
126. தலைஞாயிறு.
127. வலங்கிமான்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

128. கரூர்.
129. கிருஷ்ணராயபுரம்.
130. மணப்பாறை.
131. வையம்பட்டி.
132. மருங்காபுரி.
133. கடவூர்.
134. அரிமளம்.
135. திருமயம்.
136. பொன்னமராவதி.
137. அன்னவாசல்.
138. விராலி மலை.
139. புள்ளம்பாடி.
140. மணச்சநல்லூர்.
141. ஆலத்தூர்.
142. வரகூர்.
143. ஜெயங்கொண்டம்.
144. செந்துறை.
145. தா. பழுவூர்.
146. திருவரம்பூர்.
147. ஸ்ரீரங்கம்.

திருநெல்வேலி மாவட்டம்

148. திருச்செந்தூர்.
149. ஆழ்வார் திருநகரி.
150. கயத்தாறு.
151. ஸ்ரீ வைகுண்டம்.
152. விளாத்திக்குளம்.
153. நாங்குனேரி.
154. களக்காடு.
155. அம்பா சமுத்திரம்.
156. கடயம்.
157. பாளையங்கோட்டை.
158. கடைய நல்லூர்.
159. கீழப்பாவூர்.

(இராம நல, தல நிர்வாகத் துறையின் 30-12-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3434)

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கிராமக் கூட்டங்கள்

[Panchayat Unions—Village meetings—Instructions Issued—R.D. & L.A. Memorandum No. 2,000 dated 16-1-62]

சில பஞ்சாயத்து யூனியன்களில், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், கமிஷனர், வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் அவ்வப்போது பல்வேறு கிராமங்களில் கூட்டம் கூடிப் பேசுவது பழக்கத்தில் இருந்து வருவதாக, 1961-ம் ஆண்டு நவம்பர்–டிசம்பரில் நடந்த முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் மாநாட்டின் போது தெரியவந்தது. இப்படிப்பட்ட கூட்டங்கள் நடத்தப்படும்போது சம்பந்தப்பட்ட கிராமத்திலும், சுற்றுப்புர கிராமங்களிலும் வாழ்கின்றவர்கள் தங்களுடைய குறைகளை பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவருக்கும், பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களுக்கும் எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. இத்தகைய கூட்டங்களை நடத்துவதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களில் கிராமத்தின் ஆழ்ந்த ஈடுபாட்டை உண்டாக்குவதில் முன்னேற்றத்தையும், பிரதேசத்திலுள்ள குறைகளை நீக்குகின்ற வேலையில் ஒரு வேகத்தையும் காணமுடியும். ஆகவே கிராமக் கூட்டங்கள் நடத்தும் இந்த முறையை எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் சிபாரிசு செய்கிறது.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 16-1-62 தேதியிட்ட அறிக்கை எண் 2000)

திரு கோ. வேங்கடாசலபதி,
இணைச் செயலாளர், தமிழ்நாடு அரசாங்கம்.

கடித எண் : 3411. தேதி : 28–12–61.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டு செயலாளருக்கு,

ஐயா,

தொழில்வளர்ச்சி அலுவலர் (Extension Officer –Industries) இல்லாத வட்டாரங்களில், அவருக்கு உரிய கடமைகளைக் கதர் வளர்ச்சி அலுவலரிடம் ஒப்படைக்க, கதர் போர்டு கூறிய யோசனை ஒப்புக் கொள்ளப்பட்டது.

தொழில் வளர்ச்சி அலுவலர் (Extension Officer -Industries) இல்லாத வட்டாரங்களில், பயிற்சி பெற்ற தொழில் வளர்ச்சி அலுவலர் அமர்த்தப்படும் வரையில், வட்டாரங்களின் தொழிற் திட்டங்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பைக் கதர் வளர்ச்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என்ற தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் போர்டினுடைய யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது என்பதை அறிவிக்க ஆணையிடப்பட்டுள்ளேன். தொழில் வளர்ச்சி அலுவலர்களின் இடம் காலியாக உள்ள வட்டாரங்களில், கதர் வளர்ச்சி அலுவலர்கள் அமர்த்தப்பட்டிருந்தால் தொழில் வளர்ச்சி அலுவலர்கள் அமர்த்தப்பட்டதும், அத்தகைய வட்டாரங்களிலிருந்து கதர் வளர்ச்சி அலுவலர்கள் திரும்பப் பெறப்படுவார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டிய வகை இருக்கிறேன். கதர் வளர்ச்சி அலுவலர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதினால் ஆகின்ற மொத்த செலவும் கதர், கிராமத் தொழில்கள் போர்டு ஒப்புக்கொண்டபடி, அதுவே ஏற்றுக்கொள்ளும்.

உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்—பி. விஜயராகவன்)
—இணைச்செயலாளருக்காக.

ஸ்தல ஸ்தாபனங்களின் கடை நிலை ஊழியர்களும் வேலை ஏற்பாட்டு அலுவலகங்களின் மூலமே தேர்ந்தெடுக்கப்படுதல்

[Establishment—Last grade Servants paid from Contingencies under Local bodies—Recruitment through the Employment offices—1nstructions issued-R.D. & L.A., G.O., Ms. No. 3388, dated 26-12-61].

அரசாங்கத்தின் கொள்கைப்படி, காலியான எல்லா இடங்களுக்கும் தமிழ்நாடு பொதுப்பணிக் குழுவின் (Madras Public Service Commission) யோசனையின் பேரிலோ அன்றி தேர்வுப் போர்டின் முடிவுகளைக் கொண்டோ ஆட்களை அமர்த்துவதன்றி வேலை ஏற்பாட்டு அலுவலகங்களின் மூலமே அந்த இடங்களை நிரப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட வேலை ஏற்பாட்டு அலுவலகம் அங்கே பதிவுசெய்துகொண்ட பொறுத்தமான, தகுதி உடைய ஆட்களின் பட்டியலை சமர்ப்பிக்க முடியாதபோதுமட்டிலுமே வெளியார் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட வேண்டும். மேற் கூறப்பட்ட முறை, சில்லறைச் செலவு நிதியிலிருந்து (Contingencies) ஊதியமளிக்கப்படும் வேலைகளுக்கும், தமிழ்நாடு கடைநிலைப்பணி தனிவிதிகளில் 6-வது விதியில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு உட்பட்டு, தமிழ்நாடு கடைநிலைப்பணியில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகளுக்கும்கூட பின்பற்றப்படும்.

மேற்கூறப்பட்ட முறை ஸ்தல-ஸ்தாபனங்களில் சில்லறைச் செலவுகள் நிதியிலிருந்து ஊதியமளிக்கப்படும் வேலைகளுக்கு அமர்த்தப்படுவோர் விஷயத்திலும் பின் மேற்கூறப்பட்ட முறை ஸ்தலஸ்தாபனங்களில் சில்ல பற்றப்படலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. கூடியமட்டிலும் இந்த முறை முதல் பாராவில் விளக்கியுள்ளபடி, சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியமளிக்கப்படும் வேலைகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களின் கீழ் அதாவது நகர மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் கீழ் கடை நிலைப்பணியில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகளுக்கும் ஏதாவது சிறப்பு விதிகள் இருந்தாலொழிய, பின்பற்றப்படவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

எல்லா நகர மன்றக் கமிஷனர்களும், பஞ்சாயத்து யூனியன் மன்றக் கமிஷனர்களும், எல்லாப் பஞ்சாயத்துக்களின் நிர்வாக அலுவலர்களும், சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியமளிக்கப்படும் வேலைகளுக்கு ஆட்களை அமர்த்தும்போதும் சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்தின்கீழ் கடை நிலைப்பணியில் வேலை செய்ய ஆட்களை அமர்த்தும் போதும்—மேலே விளக்கிய முறையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம, நல தல நிர்வாகத் துறையின் 26-12-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3388)

நீர்ப்பாசன வேலைகளை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு மாற்றப்படுவதற்கான விதிகளில் திருத்தம்—உறுதிப்படுத்துதல்

[Rules—Madras Panchayats Act, 1958—Transfer of Irrigation functions to Panchayat Union Councils-Amendments Confirmed-R.D. and L.A. G.O. Ms. No. 3374, dated 26.12·61.]

நீர்ப்பாசன வேலைகளை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு மாற்றுவது சம்பந்தமான விதியில் செய்யப்பட்ட சில திருத்தங்களின் நகல் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதியிட்ட அரசிதழ் V-வது பகுதியில், பொதுவான செய்தி அறிவிப்பாகவும், ஆராய்ச்சிக்காகவும், வெளியிடப்பட்டது. எந்த ஒரு தடை அல்லது யோசனை கூறப்படாததால் அத் திருத்தங்கள் இதனால் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இணைப்பு

விளம்பரம்

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் (1958-வருடத்திய சென்னை சட்டம் XXXV) 85-வது பிரிவு (1) துணைப்பிரிவின்படியும், 178-வது பிரிவு (1) துணைப்பிரிவின்படியும் அளிக்கப்படுகின்ற அதிகாரங்களைக் கொண்டு, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் தேதியிட்ட (தல நிர்வாகம்) 1960-வது வருடத்திய விளம்பரம் எஸ். ஆ. ஓ. எண் எ. 385 (விளம்பரம் 24) மேற்படி சட்டத்தின் 179-வது பிரிவு, துணைப்பிரிவு (2)-ன் படி ஏற்கனவே திருத்தப்பட்டு 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசிதழ் பகுதி V-ன் அனுபந்தம் 26, 27-வது பக்கங்களில் வெளியிடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு பாசன வேலைகளை மாற்றுவது சம்பந்தப்பட்ட விதியில் தமிழ்நாடு கவர்னர் அடியிற்கண்ட திருத்தங்களை இதன்மூலம் செய்கிறார் :—

திருத்தங்கள்

மேற்படி சட்டத்தில்—

(i) (3)-விதிமுறையின் முடிவில் கீழ்க்கண்ட பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதாவது:

"பஞ்சாயத்து யூனியன் மன்றம், பாசன முறை போடுதல் பற்றிய விதிகள் சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் முடிவு செய்கின்ற ஒரு பொறுப்புள்ள அமைப்பாக விளங்கும். " மதகுப் பலகைகளை மூடித் திறக்கின்ற நேரடி வேலை, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பொது மேல் விசாரணைக்கு உட்பட்டு கிராம மணியக்காரரிடம் ஒப்படைக்கப்படும்.

(ii) விதிகள் (4), (5), (6), (7), (8), (9) ஆகியவற்றின் எண்கள் முறையே (5), (6), (7), (8), (9), (10) என்று திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட (5) விதியின் முன்னால் கீழ்க்கண்ட விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதாவது:

" (4) 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 53 (3) பிரிவின்கீழ் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தால் அமர்த்தப்பட்ட எந்த ஒரு குழுவுக்கும் நீர்ப்பாசயன முறை போடும் வேலைகளை ஒழுங்குபடுத்த மேற்படி சட்டத்தின் 8 (1) பிரிவின்படி அதன் கடமைகளையும், வேலைகளையும் நிறைவேற்ற பஞ்சாயத்து யூனியன் மன்றம், அதிகாரத்தை அளிக்கக்கூடாது."

கிராம அதிகாரிகளுக்கு வரையறுக்கப்பட்ட கடமைகள் - அபிவிருத்திப்படி வழங்குவது பற்றிய விளக்கம்

Panchayat Development—Village Officers Specification of duties—Payment of Development Allowance—Further Clarifications Issued-Memorandum No. 139119, dated 5th January 1962].

கிராம நலத்துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644-ல் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் சார்பில் கிராம அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை வரையறுத்து அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணைகள் சம்பந்தமாக கலெக்டர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2895-ல் விளக்கங்கள் பிறப்பிக்கப்பட்டன. இப்பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர், கிராம அதிகாரிகள் சங்கச் செயலாளர் சில கோரிக்கைகளை செய்துகொண்டுள்ளார். அவற்றை அரசாங்கம் நன்கு ஆராய்ந்த பின்னர் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

(2) **ஆலோசனை 1 :** ஒரு பஞ்சாயத்துக்கு மேற்பட்டு இருக்கின்ற ஒரு ரெவினியூ கிராமத்தில் கிராம அதிகாரிகள் ஒரே ஒரு பஞ்சாயத்தில் மட்டுமே செய்யும்படி வேலை கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

முடிவு : சாதாரணமாக கிராமக் கர்ணமும்., மணியக்காரரும், அவர்களுடைய ரெவினியூ எல்லைக்குட்பட்ட முழுப்பகுதியில் அபிவிருத்தி வேலைகளைக் கவனித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். என்று அரசாங்கம் கருதுகிறது. எங்கெங்கு அபிவிருத்தி வேலைகள் மிகுதியாக இருந்து, கிராம அதிகாரிகளால் நன்ருகக் கவனித்துக்கொள்வது கடினம் என்று தெரிகின்ற இடங்களில், அந்த நிலைமை முழு விவரத்துடன் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டால், தனியாகக் குறிப்பிட்டு ஆணைகள்பிறப்பிக்கப்படும்.

(3) **ஆலோசனை 2 :** அரையாண்டுத் தொடக்கத்தில், அதாவது ஏப்ரலிலும்-அக்டோபரிலும் வரிப் பதிவேடுகளை (Tax Registers) ஒப்படைத்து விடவேண்டும். அவ்வாறு ஒப்படைப்பதற்கு முன்னுல், வரிகளின் கேட்பு (Demand of Taxes) மற்ற வருவாய் பாக்கிகள் சரி செய்யப்பட வேண்டும். மேலும் அவ்வாறு ஒப்படைப்பதற்கு முன்னதாக அவை சரியான கணக்கு என்று தலைவர் சான்று அளிக்க வேண்டும்.

முடிவு : வரிப் பதிவேடுகள் காரணத்தால் எழுதப்படவேண்டும். கேட்புகள் (Demands) கிராம மணியக்காரரிடம் ஒப்படைக்கவேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் பதிவேடுகளை எழுதி அவற்றைக் கிராம அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் என்கின்ற பிரச்சினையே எழவில்லை.

(4) **ஆலோசனை 3 :** கிராம அதிகாரிகளால் பஞ்சாயத்தில் வசூல் செய்யப்படும் தொகைகளை பஞ்சாயத்து யூனியன் கஜானுவில் கட்டுவதற்கு முன்னதாக ஒரு தேதியைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் குறிக்க வேண்டும்.

முடிவு : கிராம நலத் துறையின், 23—10—1961 தேதியிட்ட அறிக்கை, 206144-ல் வசூல் செய்யப்படும் தொகை அவ்வப்போது பஞ்சாயத்து யூனியன் பணப் பேழைக்கு அனுப்பப்பட்ட விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வசூல் தொகைகள் வாரத்துக்கு ஒரு முறை அல்லது வசூல் தொகை 250 ரூபாய்க்கு மேற்படும் பொழுது—இவையிரண்டில் எது முன்னதாக நேருகிறதோ அப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கஜானுவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஒரு ஒழுங்கு விதியாக—கிராம அதிகாரிகள் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 5-1-62 தேதியிட்ட அறிக்கை எண் 139119)

கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றும் வேலைகளுக்கு ஆகும் செலவைத் திருப்பிக் கொடுத்தல்

[Village works programme—Reimbursement of Expenditure incurred by Panchayat Unions Further instrnctions isssued—Memorandum No. 232000, R.D. and L.A. dated 3·1·62].

கிராம நல தல நிர்வாகத் துறையின் 5–9–1961 தேதியிட்ட அறிக்கை 154036-ன் படி, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் வேலைகளுக்காக பஞ்சாயத்து யூனியன் செய்யும்செலவை, வேலை வாரியாக செலவின் விரவங்களைக் காட்டும் மாதாந்திர அறிக்கைகளைப் பெற்ற பின்னர் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள் திருப்பிக்கொடுத்து அங்கீகாரம் செய்வார்கள். மேற்கூறிய படி மாதாந்திரச் செலவுகளை திருப்பித் தரும் முறையைப் பின்பற்றினுல் தல செஸ் சர்சார்ஜ், தல செஸ் சர்சார்ஜ் ஈட்டுமானியம் ஆகியவற்றின்மேல் அங்கீகரிக்கப்படும் முன்பணம் மட்டுமே ஆரம்பச் செலவுகளுக்கென்ப பஞ்சாயத்து யூனியன்களிடம் இருப்பு

தாலும் அந்தத் தொகை மிக்க குறைந்த அளவாக இருப்பதாலும் பஞ்சாயத்து யூனியன்கள் மாதம் முழுவதற்கும் தேவையான நிதி வசதிகளைப் பெற்றிருக்காமல் போய்விடலாம் என்று இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் தம்முடைய கடிதத்தில் குறித்துள்ளார். மேலும் அவர் தம்முடைய கடிதத்தில் பல்வேறு காரணங்களினால் ஒவ்வொரு மாதமும் ஒரே அளவான செலவை எதிர்பார்ப்பது முடியாத காரியமென்றும், சில மாதங்களில் மிகுதியான செலவு விலக்கமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு தேவையானபோதெல்லாம், பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து முன் னதாகவே செலுத்தப்பட்ட பணத்திற்கான பட்டியல்களின் மேல் உதவி மானியம் அளிப்பதன் மூலம் இந்தத் தொல்லையைப் போக்கலாம் என்று அவர் கருத்து தெரிவிக்கிறார்.

இது விஷயத்தில் இராமநாதபுரம் கெலக்டரின் கருத்தை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவைப்படும்போது, கிராம வேலைகள் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வேலைகளுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும் செலவின்மேல், உதவி மானியங்களை வழங்க ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளை அனுமதிக்கிறது.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 3-1-62 தேதியிட்ட அறிக்கை எண் 232000)

உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட நிதி வசதிகளைச் செய்தல் பற்றிய விளக்கம்

[Village works grant—Construction of buildings for High Schools—Utilisation of Provisions Instructions issued—Memorandum No. 117392, R.D. and L.A. dated 30th December 1961.]

தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டர் தம்முடைய 19–1–61 தேதிய கடிதத்தில், கீழ்க்கண்ட விஷயங்களில் விளக்கம் கோரி எழுதியிருக்கிறார் :—

(i) கிராம வேலைகள் மானியத்தின்கீழ், உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டும் வேலையை எடுத்துச் செய்யலாமா என்பது ;

(ii) அவ்வாறு செய்யக்கூடாது என்றால், இந்த வேலையை எடுத்துச் செய்ய, அரசாங்கம் தனியாக வகை செய்யுமா என்பது ;

(ii) 1961–62 ஆண்டுக் காலத்தில் தல அபிவிருத்தி வேலைகள் திட்டம் நிறைவேற்றுவது சம்பந்தமான நகல் உத்தரவு பெறுவதற்கு முன்னும், 1–4–1961 தேதிக்குப்பின்னால் அனுமதிக்கப்பட்டதுமான அத்தகையவேலைகள் சம்பந்தமாக என்ன முறையைக் கையாள வேண்டும் என்பது.

2. மேற்குறித்த முதலிரண்டு விஷயங்கள் சம்பந்தமாக, கிராம வேலைகள் திட்ட நிறைவேற்றம் சம்பந்தப்பட்ட எல்லா மாவட்டக் கலெக்டர்களும், மற்ற எல்லா அதிகாரிகளும் கிராம வேலைகள் மாண்யத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களின் வேலை நடைபெற உதவி செய்யக்கூடாது என்று அறிவிக்கப்படுகிறார்கள். இது விஷயத்தில், கிராம நல, தல நிர்வாகத்துறையின் 25–7–61 தேதியிட்ட அரசாங்க ஆணை 2103-ன் பாரா 2 (iv)-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைக் காண்க. தல அபிவிருத்தி வேலைகள், சமுதாய அபிவிருத்தி, கிராமப்புறத்தில் பருகு நீர் வழங்கு திட்டம் முதலான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்டு வந்த நிதி வசதிகள் அனைத்தையும் ஒன்றுகச் சேர்த்து "கிராம வேலைகள் மானியம்" என்று அமைக்கப்பட்டிருப்பதால் இனிமேல் மேலே குறிப்பிட்டபடி தனித்தனியாக அங்கீகரித்து நிறைவேற்றப்படமாட்டா.

3. மூன்றுவது விஷயத்தைப் பொறுத்தமட்டில், 1–4–1961-க்குப் பின்னரும் கிராம நல தல நிர்வாகத் துறையின் 25–7–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2103க்கு முன்னரும் அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டட வேலைகள் விஷயத்தில் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவாகி, 25–7–1961க்கு முன்னரே வேலை தொடங்கப்பட்டவையெல்லாம், கிராம நல தல நிர்வாகத் துறையின் 25–7–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2103, பாராக்கள் 6 (ii) 7 (iv)-ல் கூறப்பட்டுள்ள முறைப்படி பணம் செலுத்தப்பட்டு முடிக்கப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 30-12-61 தேதியிட்ட அறிக்கை எண் 117392)

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் விவசாய வளர்ச்சி அதிகாரியின் கடமைகளும் பொறுப்புகளும்

(Community development Programme-Establishment-Extension officers Agriculture--Duties and Responsibilities-Orders issued.)

(G. O. Ms. No. 3555, R.D. and L.A. dated 21-12-61.)

விவசாய உற்பத்தியின் முக்கியத்துவம் இப்பொழுது வலியுறுத்தப்படுவதால் விவசாய வளர்ச்சி அதிகாரியின் கடமைகளேயும் பொறுப்புக்களேயும் வரையறுத்துக் கூற வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. இந்திய அரசாங்கம், பொறுத்தமான திருத்தங்களைச் செய்து கொண்டு பின்பற்ற, ஒரு மாதிரி வேலை முறை அட்டவணை ஒன்றை அனுப்பியுள்ளது. இந்திய அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட மாதிரி வேலை முறை அட்டவணை சென்னை விவசாயத்துறை இயக்குநரின் ஆலோசனையுடன் ஆராயப்பட்டு, இந்த மாநிலத்தில் பின்பற்றப்படுவதற்காக பிரதேச நிலைமைகளுக்கு ஏற்ப பொருத்தமாக திருத்தப்பட்டது.

2. அதன்படி, கீழ்க்கண்டவை விவசாய வளர்ச்சி அதிகாரியின் கடமைகள் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது :

I. நிலையும் மேல்விசாரணையும் (Status & Control)

1. விவசாய வளர்ச்சி அதிகாரி, வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் முழு நிர்வாக மேல் விசாரணையின் கீழ் இருப்பார். எல்லா நிர்வாக விஷயங்களிலும் விவசாய வளர்ச்சி அதிகாரி வட்டார அபிவிருத்தி அதிகாரியின் யோசனையைக் கேட்டு, அவருடைய ஆணைக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும்.

2. விவசாய வளர்ச்சி அதிகாரி, மாவட்ட விவசாய அதிகாரியின் தொழில் நுட்ப மேல் விசாரணையின் கீழ் (Technical Control) இருப்பார். விவசாய வளர்ச்சி அதிகாரி, தொழில் நுட்ப விஷயங்களில் எல்லாம், வட்டார அபிவிருத்தி அதிகாரியின் மூலம் மாவட்ட விவசாய அதிகாரியின் ஆலோசனையைக் கேட்டு அவர் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

3. விவசாய வளர்ச்சி அதிகாரி, அலுவலக ஒழுங்கு முறை கூட்டங்களுக்கு வந்திருத்தல், சுற்றுப்பயண ஏற்பாடுகள், நாட் குறிப்புகளைத் தயாரித்துச் சமர்ப் பித்தல் இவை உள்பட, மற்ற வளர்ச்சி அதிகாரி களுக்கும் பொருந்துகின்ற மற்ற எல்லா பொது விதிகளுக்கும் உட்பட்டுப் பணியாற்றுவார்.

4. கடிதத் தொடர்புகளைப் பொறுத்த மட்டில் விவசாய வளர்ச்சி அதிகாரி, ஏற்கெனவே கிராம நல, தல நிர் வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதியிட்ட அறிக்கை எண் 164207-ல் குறிப்பிடப்பட்ட விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வார்.

5. விவசாய வளர்ச்சி அதிகாரிக்கு, மாநில நிலையில் துறைத் தலைவராக விவசாயத் துறை இயக்குநரும், மாவட்ட அதிகாரியாக, மாவட்ட விவசாய அதிகாரியும் விளங்குவார்கள்.

II. கடமைகள்

1. விவசாய வளர்ச்சி அதிகாரி, வட்டாரத்தில் விவசாய வளர்ச்சி வேலைகளுக்குப் பொறுப்பாக இருப்பார். அவர் தன்னுடைய வேலையை, கிராம சேவக்குகள் விவசாயத் துறைப் பணியாட்கள் (Agricultural field), செய்முறை காட்டும் மேஸ்திரிகள் ஆகியோரின் துணையுடன் செய்து முடிப்பார்.

2. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க போடப்படும் விவசாய வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப் படும் நிதிகளை முழு அளவுக்கும், தீவிரமாகவும் பயன் படுத்துகின்ற பொறுப்பு விவசாய வளர்ச்சி அதிகாரியைச் சார்ந்ததாகும்.

3. 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3792-ன்படி பஞ்சாயத்துக்கள் வகுக்கின்ற கிராம உணவு உற்பத்தித் திட்டங்கள் வெற்றி கரமாக நிறைவேற்றப்படுகின்றனவா என்று விவசாய வளர்ச்சி அதிகாரி பார்த்துக் கொள்ளவேண்டும். இதுசம்பந்தமாக, வேலை ஒழுங்காக நடைபெற, கிராம சேவக்குகளின் வேலையை ஒவ்வொரு மாதமும் அவர் பரிசீலனை செய்து குறிக்க வேண்டும்.

4. விவசாய வளர்ச்சி அதிகாரி தன்னுடைய தணிக்கை யின் போது வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்தை யும் பார்வையிட வேண்டும். மூன்று மாதத்திற்கு மேற் படாத கால அளவுக்குள் வட்டாரம் முழுவதும் இத்தகைய தணிக்கை ஒருமுறை செய்து முடித்திருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமமும் தணிக்கையின் ஒரு தனி அமைப் பாக (Unit) விளங்கவேண்டும். வளர்ச்சி அதிகாரி ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராம நிலை ஊழியரின் வேலையைத் தணிக்கை செய்யும் பொழுது அவர் தம் முடன், அந்தந்தக் கிராம நிலை ஊழியர் அவ்வப்போது தமக்கு அனுப்பியுள்ள வேலைகளைப் பற்றிய அறிக்கையை எடுத்துச் செல்ல வேண்டும். அவர் அந்த அறிக்கை களில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வேலையையும் நேரடி யாக மேற்பார்வையிட வேண்டும். பிறகு அவர் நடந் திருக்கிற வேலையை மதிப்பிடுவதோடு, வகுத்துக்கொண்ட வேலை முறையின்படி மட்டுமன்றி ஒவ்வொரு கிராமத்தின் விவசாய அபிவிருத்தி ஆதாரங்களை ஒட்டியும், மேலும் என்னென்ன வேலைகள் செய்ய இருக்கின்றன என்றும் மதிப்பிடவேண்டும்.

5. விவசாய வளர்ச்சி அதிகாரி, (அ) படிப்படியாக கிராமத்தின் மொத்த உற்பத்தி பெருக வேண்டும், (ஆ) இந்த லட்சியத்தை அடைய ஒவ்வொரு விவசாயியும் அதற்குரிய ஒவ்வொரு முறையையும் கையாளுமாறு செய்ய வேண்டும். என்ற இரண்டு உண்மைகளைத் தன்னுடைய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு விவசாய அபிவிருத்தி மிகவும் விரிவாகவும், முழுதும் ஆழ்ந்து தீவிரமாகவும் அமைய வேண்டும். குறுகியக் காலத்தில் உற்பத்தியை மிகுதியாகப் பெருக்குவதற்கு விவசாய வளர்ச்சி அதிகாரி சில வழிகளை சிபாரிசு செய்ய வேண்டும். மேலும் அவர் மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்ற கிராம நிலை ஊழியர் தம்முடைய முழு முயற்சியை எடுத்துக் கொள்கிறாரா என்றும் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர் தம்முடைய தணிக்கை அறிக்கையை எழுதி, நகலெடுத்து வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கும், மாவட்ட விவசாய அதிகாரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

6. ஒவ்வொரு வட்டாரத்திலும், விதைகள், கருவிகள், பூச்சி மருந்துகள் முதலியவற்றை சேமித்து வைக்க விவசாயக் கிடங்கு ஒன்றிருக்க வேண்டும். அது விவசாய வளர்ச்சி அதிகாரியின் பொறுப்பிலிருக்கும். அவர் கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளவைகளின் ஒழுங்கான பராமரிப்பையும் பணத்தையும் கிடங்குக் குமஸ்தாவின் துணையுடன் பார்த்துக் கொள்வார். அவர் விவசாயத்துறை விதிகள் புத்தகத்தின் 60-வது பாராவிலும், சென்னை நிதிச்சட்டம் (Madras Finance Code) 1 பாகம் 143, 144 விதிகளிலும் கூறியுள்ளபடி குறித்த காலத்திலும் திடீரென்றும் கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டிருப்பவற்றை தணிக்கை செய்ய வேண்டும்.

அவர் கணக்குப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளவற்றை சம்பந்தப்பட்ட பட்டியல்கள், சீட்டுகள், ரசீதுகள் (Bills, Vouchers, Chalans etc.) முதலானவற்றுடன் ஒப்பு நோக்கிப் பரிசோதித்து ஒப்புதல் கையெழுத்திட வேண்டும்.

அதே போன்று பல்வேறு சேமிப்புப் பதிவேடுகளில் (Stock Registers) பதிந்துள்ளவற்றை சம்பந்தப்பட்ட பட்டியல்கள், சீட்டுகள் முதலானவற்றோடு ஒப்புநோக்கி தணிக்கை செய்து சுருக்கக் கையெழுத்து (Initial) இட வேண்டும். ஒவ்வொரு நாளும் கணக்குப் புத்தகம் முடிக்கப்படவேண்டும். வளர்ச்சி அதிகாரி தலைமை அலுவலகத்தில் இருக்கும் போதெல்லாம் டி. ஆர். 11 துணைவிதி 2-ன் கீழ் வரவேற்கப்பட்ட பரிசோதனைக் குறிப்பு கையெழுத்திடப்பட வேண்டும். விவசாய வளர்ச்சி அதிகாரி தலைமை நிலையத்தில் இல்லாத போதெல்லாம் அந்த முடிவுப் பகுதிகள் கிடங்கு குமாஸ்தாவால் எழுதப்பட வேண்டும். வளர்ச்சி அதிகாரி தலைமை நிலையத்திற்குத் திரும்பியதும் அவற்றைப் பரிசோதித்துக் கையெழுத்திது இடவேண்டும்.

தலைமை நிலையத்திலுள்ள கிடங்குகளின் ரொக்க நிலுவைகள் எல்லாம் நாள்தோறும் பிரதான கணக்குப் புத்தகத்தில் குறிக்க வேண்டும். வட்டாரத் தலைநகரில் இல்லாத விவசாயக் கிடங்கின் ரொக்க நிலுவை நாள்தோறும் விவசாய வளர்ச்சி அதிகாரியால் பரிசோதிக்கப்படுவதுடன் மாதத்திற்கொரு முறையாகிலும் எந்த விஷயத்திலும் வட்டார அபிவிருத்தி அதிகாரி தம்முடைய விஜயத்தின்போது பரிசோதிக்க வேண்டும். கிடங்குகளின் ரொக்க நிலுவை கிடங்குக் குமாஸ்தா கட்டியுள்ள காப்புத் தொகை (Security Amount) யைக் காட்டிலும் மிகாமலிருந்தால் ஒரு வாரத்திற்கு ஒரு முறையாகிலும் அல்லது அந்தக் காப்புத் தொகையைக் காட்டிலும் மிகுதியானால் அதைக் காட்டிலும் குறுகியகாலத்திலும், கஜானாவில் கட்டுவதற்காக வட்டாரத் தலைநகருக்கு மாற்றப்பட வேண்டும். விவசாயக் கிடங்குப் பணத்தை வட்டார அபிவிருத்தி அதிகாரியின் அலுவலகம் கட்டுகின்ற விஷயத்தில் பொதுத் துறையின் (கிராம அபிவிருத்தித் திட்டம்) 17–10–1958 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 41246-ல் கூறியுள்ள முறையைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

7. முன் மூன்று மாதத்திற்குத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன், கிராம உற்பத்தித் திட்டங்கள் சம்பந்தமாக, தேவையான விதைகளுக்கு, விவசாய வளர்ச்சி அதிகாரி மனுச் செய்துகொள்ள வேண்டும். அவை வரும்பொழுதெல்லாம் அவற்றைக் கெடாமல் சேமித்து வைக்க வேண்டும். அவர் அவ்வப்போது, அநேகமாக, விதைகளை விதைக்க வழங்கும்போது—அவை நன்றாக முளைக்கக் கூடியவை, நல்ல விதைகள் என்பதற்கான சோதனைகளை நடத்த வேண்டும்.

8. விவசாய வளர்ச்சி அதிகாரி, அவ்வப்பொழுது நடக்கும் பணியாளர் கூட்டங்களில், ஒவ்வொரு கிராம சேவகருக்கும், அப்போழுது இருக்கின்ற விதைகளையும், அவற்றின் விலையையும் அறிவிக்க வேண்டும்.

9. எல்லாக் கிராம உற்பத்தித் திட்டங்களையும் கருத்தில் கொண்டு, முதல் நிலை அல்லது மாநில விதைப் பண்ணைகளில் (Primary and State Seed Farms) இருந்து எந்தெந்த வகை விதைகள், எவ்வளவு தேவைப்படுகிறது என்று விவசாய வளர்ச்சி அதிகாரி கணக்குக் கெடுக்க வேண்டும். அவ்வாறு கணக் கெடுத்த பின்னர், பருவத்துக்கு முன்னதாகவே மாவட்ட விவசாய அதிகாரியின் மூலம் தருவித்துக் கிடங்கில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். அவர் கிராம சேவக்குகளின் மூலம், கிராம சகாயக்குகளுக்கு, வேண்டிய முன்னறிவிப்பு செய்துவிட வேண்டும். அவர் விதை வகைகளின் கலப்பற்ற தன்மைக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் கிராம சகாயகர்களின் விதைப் பண்ணையில் பயிரை, முறையாக மேற்பார்வையிட வேண்டும். அவர், கிராம சேவக்குகள், அறுவடை, விதையைச் சுத்தம் செய்தல், உலர்த்துதல் ஆகியவற்றை மேற்பார்வை இடுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். விதைகள் தயாரானதும், மாதிரி விதை சேகரிக்கவும், அவற்றை நாற்றுவிட்டு நன்றாக முளைக்கின்றவா என்று சோதனைகளை நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவை திருப்திகரமாக

முளைக்கின்றன என்றால், விதைகளைப் பைகளில் நிரப்பி முத்திரை (Sealed) இட்டு வினியோகிப்பதற்குத் தயாராகச் சேமித்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

10. விவசாய வளர்ச்சி அதிகாரி வழங்கப்படும் விதைகளில் எதிர்பார்க்கக்கூடிய குறைவுகளை, மாவட்ட விவசாய அதிகாரியின் மூலம் விவசாய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து (Agricultural Research Station) மூலம் விதைகளைத் தருவித்துமுதல் நிலை விதைப் பண்ணைகளை (Primary Seed Farms) நடத்துவத்ன் மூலம் ஈடு செய்துகொள்ளலாம். மேலும் எவ்வளவு தேவையாக உள்ளது என்று உடனே மாவட்ட விவசாய அதிகாரிக்கு விவசாய வளர்ச்சி அதிகாரி தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் பருவம் மாறுவதற்குள் வேறிடத்திலிருந்து மாற்றம் செய்து பயன்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும்.

11. விவசாய வளர்ச்சி அதிகாரி, அந்தப் பகுதிக்குத் தகுந்த செய்முறை காட்டும் கருவிகளை எல்லாம் நன்றாக வேலை செய்யும் நிலையில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

12. விவசாய வளர்ச்சி அதிகாரி, பிரதேச நிலைமைகளைக் நன்கு கவனித்து, பூச்சி—நோய் தடுப்பு நாட்குறிப்பைத் தயாரித்து வைத்துக்கொண்டு தேவையான பூச்சி மருந்துகளை முன்னதாகத் தருவித்து, சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர் பயிர்களின் பூச்சி—நோய் தடுப்புக்கு மருந்து வகைகளை, கிராம நல—தல நிர்வாகத் துறையின் 8–9–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2460–ல் குறிப்பிட்டுள்ளபடி, சலுகை விலைக்கு (Concession Rates) விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு வினியோகிக்கப்படும் பூச்சி—நோய் மருந்துகளை பஞ்சாயத்துத் தலைவர்கள் அளிக்கின்ற சான்றிதழின் மேல் வழங்கலாம். பூச்சி மருந்துகள், விஷத்தன்மை வாய்ந்தவையாகையால், அவற்றைச் சேமிப்பதிலும், கையாள்வதிலும் வினியோகிப்பதிலும், விவசாயிகள் உபயோகிப்பதிலும் தேவையான முன் எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

13. விவசாய வளர்ச்சி அதிகாரி மருந்து தெளிக்கும்—தூவும் கருவிகளை நன்றாக வேலை செய்யும் நிலையில் தயாராய் வைத்திருக்க வேண்டும்.

14. விவசாய வளர்ச்சி அதிகாரி, தம்முடைய வட்டாரத்தில் பிரதேசத்திற்குத் தகுந்த எல்லா உழைப்பைக் குறைக்கும் கருவிகளைப் பயன்படுத்தும் முறையையும், செடிப் பாதுகாப்பு கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளையும் அடிக்கடி செய்து காட்டி கூடுமான அளவு அதிகமான கருவிகள் வினியோகிக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். வெளியிடப்பட்டுள்ள விளக்கங்களின்படி கீழ்க்கண்ட விஷயங்களில் தேவையான செய்முறைக் காட்சிகளை நடத்த வேண்டும்.

(1) எல்லாக் கழிவுப் பொருள்களைக் கொண்டும் கம்போஸ்டு தயாரித்தல்.

(2) ஜப்பானிய முறைச் சாகுபடி.

(3) செயற்கை உரக் காட்சி.

(4) மண்வளப் பாதுகாப்பு.

(5) குறிப்பிட்ட பகுதி அல்லது கிராமத்தில் பரவாத உழவு, எரு முன்னேற்ற முறைகளை எல்லாம் ஒரு பட்டியல் தயாரித்து—செய்முறைக் காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கு முன்னர் கிராம சேவக்குகளுக்கும், மற்ற பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சி அளித்து—அதன் பின் காட்சிகள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராம சேவக்குக்கும் இந்தப் பகுதியின் கீழ் பிரித்துக் கொடுக்கப்படும் காட்சிகளின் எண்ணிக்கையும் இதை ஒட்டியே அமைய வேண்டும்.

15. விவசாய வளர்ச்சி அதிகாரி, தேவையானபோதெல்லாம் பரிசோதனைகளையும்—கண்காணிப்பையும், (Trials and Observation Plots) சம்பந்தப்பட்ட நிபுணரிடமிருந்து ஏதாவது புதிய விதை முதலானவை பற்றி விளக்கங்கள் வந்தால் நடத்திக் காட்ட ஏற்பாடு செய்வதுடன் அதற்கென வரும் தனி பணியாளர்களுக்கு வேண்டிய உதவியும் செய்ய வேண்டும்.

16. இந்தப் பகுதிக்கென இருக்கும் மண் பரிசோதனை சாலைக்கு, ஆராய்வதற்கென்றும், உரத்தை சிபார்சு செய்வதற்கென்று மண் வகைகளின் மாதிரிகளை விவசாயிகள் அனுப்பும்படி விவசாய வளர்ச்சி அதிகாரி தூண்ட வேண்டும்.

17. எருவிடும் காலங்களில், தேவையான செயற்கை உரங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னதாகத் தருவித்து சேமித்து வைத்துக்கொள்ளும்படி அவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

18. செயற்கை உரத் தணிக்கையாளர் (Inspector of fertilizers) என்ற முறையில் விவசாய வளர்ச்சி அதிகாரி எரு விவசாயிகள், எருக் கலவைப் பண்ணைகள் ஆகியவற்றை செயற்கை உரக் கட்டுப்பாடு ஆணையில் உள்ளபடி, தணிக்கை செய்து, அவ்வப்போது எருக் கலவை மாதிரி களை எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். முன் ஆண்டின் செயற்கை உரச் செய் முறையின் முடிவுகளை விளம்பரப்படுத்தி, எங்கெங்கு நல்ல பலன் காணமுடியவில்லையோ அங்கெல்லாம் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுடன் நைட்ரோஜினஸ் உரத்தையும் கலந்து மிகுதியாக உபயோகிக்கும்படிச் செய்ய வேண்டும். பல்வேறு பருவங்களுக்கு எற்ப விவசாய வளர்ச்சி அதிகாரி, வழங்கப்பட்ட எருக்களை இலாபகரமான முறையில் பயன்படுத்தும் வகையில், பிரதிநிதித்துவ கிராமங்களில் (Representative Villages) இலவச எருக்காட்சிகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

19. கிராம உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற, விவசாய வளர்ச்சி அதிகாரி எல்லா வகையிலும் பஞ்சாயத்துக்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் முன்னேற்ற அறிக்கைகளை (Progress Reports) கிராம சேவக்குகளிடமிருந்து தருவித்து விவசாய வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் தடைகளையும், தொல்லைகளையும் த்துக்கொள்ள உதவ வேண்டும். தீர்

20. இந்தத் திட்டத்தில், கம்போஸ்டு அபிவிருத்தி இன்ஸ்பெக்டர், பிரதேச எரு ஆதாரங்களை அபிவிருத்தி செய்யும் வேலையில் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றத்தைப் பற்றிய மாதாந்திர—அரை மாத அறிக்கைகளை விவசாய வளர்ச்சி அதிகாரி தயாரித்து அனுப்ப வேண்டும்.

21. கிராமக் கம்போஸ்டுத் தயாரிப்பைத் தனி நபர் களும், கழிவுப் பொருள் கம்போஸ்டு தயாரிப்பைப் பஞ்சா யத்துக்களும் இலாபகரமான முறையில் நடத்துமாறு விவசாய வளர்ச்சி அதிகாரி பார்த்துக்கொள்ள வேண்டும்.

22. பிரதேசத்திற்குத் தகுந்த பசுந்தாள் உர உற்பத் தியை விவசாய வளர்ச்சி அதிகாரி ஆதரித்துப் பெருக்க வேண்டும்.

23. பிரதேசத்திற்குத் தகுந்த பசுந்தழைப் பெருக்கு மரங்களையும், புதர்களையும், நடுவதை விவசாய வளர்ச்சி அதிகாரி உற்சாகப்படுத்த வேண்டும்.

24. மாதிரி விளைச்சல் பரிசோதனைகளில் விவசாய வளர்ச்சி அதிகாரி கலந்துகொள்வதுடன் அத்தகைய பரிசோதனை எதுவும் வீணுகாமலும் பார்த்க்கொள்ள வேண்டும்.

25. ஆணையிடப்பட்டுள்ள விளைச்சல் போட்டிகளில் எல் லாம் மிகுதியானவர்கள் கலந்துகொள்ளுமாறு, விவசாய வளர்ச்சி அதிகாரி கவனம் செலுத்தவேண்டும். அறு வடைகளும், எந்த ஒரு புகார்களுக்கும் இடமின்றி நடத்த படவேண்டும்.

26. எத்தனை முடியுமோ அத்தனை கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்கவும், பதிவுசெய்யவும், வெற்றிகர மாக செயல்படவும்—கூட்டுறவு வளர்ச்சி அதிகாரிக்கு (Extension Officer—Co-operation) எல்லா உதவியும் விவசாய வளர்ச்சி அதிகாரி செய்ய வேண்டும். மேலும் அவர், விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட எல்லா பல நோக்கு வேலைகளுக்கும் ஆதாரமாக விவசாய பாங்கு களையும், பலநோக்குச் சங்கங்களையும் ஏற்படுத்த தூண்ட வேண்டும்.

27. கீழ்க்கண்ட வேலைகளுக்காக கடன் வழங்கப்படும் என்கின்ற செய்தியை விவசாய வளர்ச்சி அதிகாரி பரப்ப வேண்டும் :

(1) விதைகள், எரு வாங்குதல்,

(2) ஆழ்ந்த (தீவிர) எருத் திட்டம்,

(3) தவணை விலைகளில் எண்ணெயில் ஓடும் என்ஜின்கள் பம்பு செட்டுகள் வாங்குதல்,

(4) பில்டர் பாய்ன்ட் திட்டம்,

(5) மாதிரி கால்நடைத் தொழுவம்—கம்போஸ்ட் திட்டம்.

(6) புதிய வளைவுகள் ஏற்படுத்தவும், பழையன வற்றைப் புதுப்பிக்கவும்—தோட்டக்கலை அபிவிருத்தி,

(7) முந்திரி அபிவிருத்தி,

(8) அவ்வப்போது, கடன் பெறத்தகுதியுடையதாக, அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகின்ற மற்ற விஷயங்கள்.

28. முக்கியமான திருவிழாக்கள், கிராமத் தலைவர்கள் முகாம்கள் நடைபெறுகின்றபோது விவசாய வளர்ச்சி அதி காரி, பொருட்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண் டும்.

29. வட்டார அபிவிருத்தி அலுவலகத்துடன் இணைக்கப் பட்டுள்ள செய்தி நிலையங்கள் (Information Centres) விவசாயக் கிடங்குகள் பொருட் காட்சிகள், கிராமத்தலைவர் களின் பயிற்சி முகாம்கள் முதலான இடங்களில் வைப்ப தற்கென்று, சுவரொட்டிகள், அட்டவணைகள், விளக்கப் படங்கள், ஆதாரப் படங்கள் முதலிய காட்சிப்பொருள் தயாரிக்க விவசாய வளர்ச்சி அதிகாரி உதவி செய்ய வேண்டும்.

எரு, பூச்சி மருந்துகளின் அளவு வீதம், விதைகளின் விலை வீதம் முதலானவற்றை சம்பந்தப்பட்ட பயிர், நோய், பூச்சிகள், உபயோகிக்க வேண்டிய காலம் ஆகிய வற்றுடன் குறிக்கும் பொருத்தமான அட்டவணைகளைத் தமிழில் தயாரித்து—விவசாயிகளுக்கும், கிடங்குக் குமஸ் தாவுக்கும் பயன்படும் வகையில் கிடங்கில் வைத்திருக்க வேண்டும்.

30. அவ்வப்பொழுது கிராம சேவக்குகளுக்கு விவசாய வளர்ச்சி அதிகாரி, தேவையான பணிப் பயிற்சி அளிக்க வேண்டும்.

31. விவசாய வளர்ச்சி அதிகாரி, விவசாயத்தைப் பற்றிய விஷயங்களில், செயல்படும் கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சி முகாம்களை அமைத்து நடத்துவதுடன், அவ்வாறு பயிற்சி பெற்ற தலைவர்களுக்குத் தனிப்படவும், கிராமம் முழுதுக்குமாகவும் பயன்தரத் தக்க தொடர்ந்த திட்டங் களை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய முகாம்களை அமைத்து நடத்த வென்று வகுக்கப்பட்ட முறைகளையும் அவ்வப்போதைக்கு வெளியிடப்படும் விளக்கங்களையும் பின்பற்றி நடக்கவேண்டும்.

32. கிராம நிலை ஊழியர்கள் வைத்திருக்கும், கிராம நிலை ஊழியர் தஸ்தாவேஜுகள் புத்தகத்தில் வரையறுக்க பட்டுள்ள எல்லா பதிவேடுகளையும் விவசாய வளர்ச்சி அதிகாரி அவ்வப்போது தணிக்கை செய்வது மூலம், விவ சாயம் சம்பந்தமாக அவற்றில் கூறப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சரியானவையாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

33. விவசாய வளர்ச்சி அதிகாரி, ஒரு சிறிய நாட் குறிப்புப் புத்தகத்தை (Pocket Diary) வைத்துக் கொண்டு, அதில் வட்டாரத்தில் பயிர் ஏறியுள்ள பகுதி களின் நடைமுறை வேலைகளைப் பற்றியும் பிற முக்கிய விஷயங்களைப் பற்றியும், பஞ்சாயத்துப் பகுதியில் அன்றாடம் செய்யப்படுகின்ற வேலைகளைப் பற்றியும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். உடனடியாக செய்தியறிய அது பயன்படும்.

34. எல்லாப் பஞ்சாயத்து யூனியன் வட்டாரங்களிலும் ஒருகூட்டு அலுவலகம் அமைக்கப்பட இருப்பதால், விவசாய

வளர்ச்சி அதிகாரி தனியாக ஒரு தனிப்பதிவேட்டை (Personal Register) வைத்திருக்க வேண்டிய தேவை யில்லை.

35. விவசாய வளர்ச்சி அதிகாரி, வரையறுக்கப்பட்டுள்ள நமூனவில் ஒரு நாட்குறிப்பை எழுதி பார்வைக்குத்தயா ராய் வைத்திருக்க வேண்டும். இது விஷயத்தில் மற்ற வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்குப் பொருந்தும் விதிகள் எல்லாம் விவசாய வளர்ச்சி அதிகாரிக்கும் பொருந்து வனவாகும்.

36. அவருடைய இலாகா சம்பந்தப்பட்ட, அவ்வப்பொ ழுது அனுப்பப்படும் அறிக்கைகளை காலாகாலத்தில், சரி யாக குறிப்பிடப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கின்ற பொறுப்பு விவசாய வளர்ச்சி அதிகாரியைச் சார்ந்ததாகும்.

[கிராம நல, தல நிர்வாகத்துறையின் 21—12—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 3355].

ஆரம்பக் கல்வி—ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்குப் பள்ளி உணவு வழங்கும் திட்டம்—பஞ்சாயத்துக்கள் யூனியன்களிடமிருந்து நன்கொடைகள்

[Elementary Education—School meals to poor pupils in Elementary Schools—Contribution from Panchayat Unions and Panchayats—orders issued.]

[G. O. Ms. No. 126, Edn., E. & P. H., dated 18-1-62.]

1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ந் தேதியிட்ட கல்வித்துறையினரின் அரசாங்க ஆணை எண் 2075-ன் இணைப்பு I-ல் பாரா 7-ல் கீழ்க்கண்டவாறு உத்திரவிடப் பட்டுள்ளது:— "மதிய உணவுத் திட்டத்தை நடத்தி வைக்க எல்லா நன்கொடையாளர்கள் கொண்ட பிரதேசக் கமிட்டிகளையும், சிறிய அளவில் நிர்வாகக் கமிட்டிகளையும் அமைக்கின்ற தற்போதைய நடைமுறையானது தொடர்ந்து நடத்தப்படும். நான்கு நயா பைசா என்ற பிரதேசத்தின் பங்குக்காக, உள்ளாட்சி சபையோ, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனே தன்னுடைய பொது நிதியி லிருந்து நன்கொடையாக வழங்க விரும்பினால், அப்படி நன்கொடை அளிக்க ஒன்றும் தடையில்லை. அதே சமயத்தில், நன்கொடையாளர்கள் அடங்கிய நிர்வாகக் கமிட்டியில் அவைகளுக்கு, அளிக்கின்றன நன்கொடை விகிதாச்சார அளவுக்கு ஒப்ப, போதிய பிரதி நிதித்துவம் இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்."

2. இந்த உத்தரவுகளை சற்று திருத்தி அரசாங்கம் இப் பொழுது ஒரு முடிவுக்கு வந்துள்ளது. அந்த முடி வானது :—பிரதேசப் பங்கில் நன்கொடை அளிக்க பஞ் சாயத்துக்களுக்கு மட்டும் அனுமதி அளித்தால் போது மானது. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, பஞ்சாயத் துக்கள் பிரதேச பங்குக்கு நன்கொடைகள் அளிக்க அது மதிக்கப்படும் :—

(i) தங்களுடைய சொந்த ஆதாரங்களிலிருந்து, பஞ்சாயத்துக்கள் ஒரு குழந்தைக்கு ஒரு வேளை சாப் பாட்டுக்கு 2 நயா பைசா என்ற வீதத்தில் நன் கொடை வழங்கலாம். இந்த இனங்களில், மிச்சமிருக் கிற பொது நன்கொடை தொகையானது, இது வரையில் செய்து வந்த மாதிரி, தன்னிச்சையாக தனிப்பட்டவர்கள் அளிக்கும் நன்கொடைகள் மூலம் எழுப்பப்படும்.

(ii) ஒரு குழந்தைக்கு ஒரு வேளைச்சாப்பாட்டிற்கு இரண்டு நயா பைசா என்ற அளவுக்கு மேல் நன் கொடை வழங்க விரும்புகின்ற பஞ்சாயத்துக்கள் அதற் கான அதிகப்படியாக வேண்டிய நிதியை, வீட்டு வரி, அரசாங்கம் அளிக்கின்ற வீட்டு வரி ஈட்டு மானியம் முத லியவற்றிலிருந்து வெளி வகையில் கிடைக்கிற வருமானங் களிலிருந்து சமாளித்துக்கொள்ளவேண்டும்.

3. பிரதேச நன்கொடைகள் நிலையாக கிடைக்கவும், மத்திய உணவு சீரிய முறையில் தயாரிக்கப்பட்டும் விநி யோகம் செய்யப்படவும் வேண்டும் என்பதற்காகவேண்டி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் தலைவரே பொதுக் குழுவின் தலைவராகவும், பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள எல்லா மத்திய உணவு நிலையங் களின் நிர்வாகக்கமிட்டியின் தலைவராகவும் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. பஞ் சாயத்தில் உள்ள எல்லா மத்திய உணவு நிலையங்களின் பொதுக்கமிட்டியில் பஞ்சாயத்தின் பெண் உறுப்பினர் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவிடுகிறது.

4. 1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ந் தேதி யிட்ட அரசாங்க ஆணை எண் 2075-யை தொடர்ந்து வெளியிடப்படுகிற இந்த உத்தரவுகளும் கிராமப்பஞ்சாயத் துக்களின் என்ற ஏஜென்சி மூலமாக, பிரதேசத்தில் உள்ள மக்கள் பள்ளி உணவுத் திட்டத்தில் முழுப் பங் கெடுத்துக்கொள்கின்ற ஒரு நிலையினை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

(கல்வித்துறையின் 18—1—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 126)

மாதர்நலம் : பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாதர் - குழந்தைகள் நல மாதிரித் திட்டம்

[Women's Welfare Implementation of Programme for Women and Children in rural areas–Model Programme for Panchayat Unions–issued.]

(R. D. & L. A., G. O. Ms. No. 150, dated 17-1-61)

இந்த மாநிலத்தில் கிராம அபிவிருத்தித் திட்டத்தில், கிராமப் புறங்களில், மாதர்-குழந்தைகள் நலத்துடன் தொடர்பு கொண்ட நடவடிக்கைகளைப் பெருக்குவது ஒரு முக்கியமான அம்சமாகும். 1958-ம் தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் மாநிலத்தின் கிராமப் புறங்களில் எல்லாம் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டு இந்த அமைப்புக்கள் கிராமப் பகுதிகளின் அபிவிருத்தியில் தொடர்புள்ள பல்வேறு வேலைகளையும் நடத்தும் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

2. 1958-ம் தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 65(c) பிரிவின் கீழ், தாய்-சேய் நலப் பணிகளை நடத்தும் பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டத்தின் 66-வது பிரிவின்படி, மாநில அரசாங்கம், சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்ட நிறைவேற்றத்தை, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

3. மாதர்-குழந்தைகள் நலத் திட்டத்திலேயே மிகவும் முக்கியமான அம்சமாகக் கருதப்படுவதும், பரந்த அளவில் ஆழ்ந்து உணரப்படும் குறையாக இருப்பதும்-மகப் பேறு பணிகளுக்கு வகை செய்வது சம்பந்தமான வேலையாகும். இந்த வேலை, தாய் மார்களை பேறு காலத்துக்கு முன்னும் பேறு காலத்தின் போதும், அதற்குப் பின்னும் கவனித்து கொள்ளத் தகுதியுடைய ஆளை நியமிப்பது முதலானவும் அடங்கும்.

4. பழைய, மாவட்டக்கழகங்களை சில மகப்பேறு நிலையங்களை (Maternity Centres) நடத்தி வந்தன. இப்பொழுது அவை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்த நிலையங்கள் சம்பந்தமாக மாவட்டக் கழகங்கள் அரசாங்கத்திடமிருந்து, ஆகின்ற செலவில் 25 சத வீதத் தொகையை உதவியாகப் பெற்று வந்தன. ஆனால், அத்தகைய நிலையங்களின் எண்ணிக்கை மாநிலம் முழுதுக்கும், 300-க்கு மேற்படா. ஆகவே சராசரி ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று வீதம் ஆகிறது.

5. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், பல மகப்பேறு நிலையங்கள் தொடங்கப் பெற்றன. மாநிலம் முழுதுக்கும் இத்தகைய நிலையங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 1,200 ஆகும். இந்த நிலையங்களைப் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றி, ஏற்கெனவே அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. இந்த நிலையங்கள் சம்பந்தமாக ஆகும் செலவுகள் முழுதும் இனி மேல் மாநில அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

6. பஞ்சாயத்து யூனியன்களில் மருத்துவ, சுகாதார அமைப்புக்களைப் பற்றி அரசாங்கம் தனியே பரிசிலனை செய்து வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொன்று என்ற முறையில், அமைக்கப்பட இருக்கும் முதல் நிலை சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் இந்தப் பிரச்சினை இணைக்கப்பட்டுள்ளது. இந்த சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றுடனும் மூன்று துணை நிலையங்கள் இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மகப்பேறு துணைவர் (மருத்துவச்சி) இருப்பார். இந்த நிலையங்களுக்கு ஆகும் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மேலே குறிப்பிட்ட மூன்று மகப்பேறு துணைவர்களுடன், அவர்களுடைய வேலையை மேற்பார்வையிட ஒரு சுகாதார மேற்பார்வையாளரும் (Health visitor) சுகாதார நிலையப்பணியாளர் அமைப்பில் இடம் பெறுவார்கள்.

7. பஞ்சாயத்து நிர்வாகப் புனரமைப்புக்குறிக்கோள்களில், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது ஒன்றாகும். குடும்பக்கட்டுப்பாடு பழக்கத்தைத் தீவிரமாகப் பிரசாரம் செய்கின்ற ஒரு கடமை, பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசார வேலை ஆண், பெண் இரு பாலாரிடையேயும் செய்யப்படவேண்டும். ஆண்களிடையே பஞ்சாயத்து யூனியனின் சுகாதாரப் பணியாளர்கள் பிரசாரம் செய்வார்கள். இந்த வேலை, எந்த முறையில் செய்யப்படவேண்டும் என்பதை அரசாங்கம் முடிவு செய்து, தனியே ஆணைகள் பிறப்பிக்கும், பிரசாரம், தாய்மார்களுக்கு ஆலோசனை கூறுதல் ஆகியவற்றுடன் தொடர்புள்ள திட்டத்தை மகப்பேறு நிலையங்களின் மூலம் தீவிரமாக நிறைவேற்றலாம். ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டப் பிரசாரத்தை கூடுமான வரை அதிக அளவில், மகப்பேறு நிலையங்களின் மூலம் செய்யவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

8. இப்போது சராசரி ஒரு வட்டாரத்துக்குச் சுமார் 5 மகப்பேறு துணைவர்கள் (மருத்துவச்சிகள்) வீதம், அதாவது, 16,000 பேருக்கு ஒருவர் வீதம் இருப்பது போதாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு 5,000 பேருக்கும் ஒரு மகப்பேறு துணைவர் என்ற விகிதாசாரத்தில் இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இது, பல்வேறு காரணங்களினால், உடனே எய்த முடியாத ஒரு குறிக்கோளாகும். ஆகவே, இப்போதைக்கு உடனடியாக நிறைவேற்றக்கூடிய இலட்சியமாக, 10,000 பேருக்கு ஒரு மகப்பேறு நிலையம் உயர்வரையறை ஒரு

வட்டாரத்தில் 10 நிலையங்கள் என்ற விதத்தில் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. இந்த இலட்சியத்தை எய்த, மாவட்டக்கழகங்களிடமிருந்தும், பொது சுகாதாரத் துறையிடமிருந்தும் மாற்றப்பட்ட மகப்பேறு நிலையங்களையும், முதல் நிலை சுகாதார நிலையத்தின் (Primary Health Centre) மூன்று துணை நிலையங்களையும் கணக்கில் கொண்டு, ஒவ்வொரு வட்டாரத்திலும் மேலும் எத்தனை நிலையங்களைத் துவங்கவேண்டுமோ அத்தனை துவங்கவேண்டும்.

9. பெருமளவு மருத்துவ நிலையங்களைத் திறப்பதால் பஞ்சாயத்து யூனியனுக்கு ஏற்படும் அதிகச் செலவை ஈடு செய்ய, பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படும் (8-வது பாராவில் கூறப்பட்ட அளவு வரை) எல்லா நிலையங்களின் மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பாகத்தை அரசாங்கம், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வருடாந்தர மானியம் அளிக்க ஆணை பிறப்பிக்கிறது.

10. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், "சமூகக் கல்வி" என்ற தலைப்பின் கீழ், மாதர் சங்கங்கள், பாலர் சங்கங்கள் முதலியன உள்பட மாதர்-குழந்தைகள் நலனை சம்பந்தப்பட்ட வேலைகளைப் பெருக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராமப் பகுதிகளுக்குச் சமூகப் பணிகளை விரிவுபடுத்தவும், சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றவும் மாநில சமூக நல போர்டு நலவளர்ச்சித் திட்டங்களை அதிகாரப் பற்றற்ற பெண் தொண்டர்களின் துணையுடன் நடத்தி வருகிறது". இந்தத் திட்டங்களை நடத்த ஆகும் செலவுகளை மாநில அரசாங்கம், மாநில சமூக நல போர்டு, மத்திய சமூக நல போர்டு ஆகிய மூன்றும் கூட்டாக ஏற்றுக்கொள்ளும்.

11. கிராம நல, தல நிர்வாகத்துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 664-ல் கூறியுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி, மாநிலம் முழுதுக்கும், ஐந்தாண்டுகளுக்கு. மாதர்-குழந்தைகள் நல மானியமாக ஒரு கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை. மாதர்-குழந்தைகள் நலத் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொன்றுக்கு எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் 33⅓ நயா பைசா என்ற விதத்தில். ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்படும். இந்தத் தொகை (i) வளர்ச்சிப் பணியாளர் செலவு (ii) குடும்பக் கட்டுப்பாடு, மாதர் தொடர்புள்ள திட்டங்களுக்கு உதவி நிதி அளிக்கின்ற எந்தத் தொகைகளுக்கும்—ஆகிய இரண்டு வகைச் செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

12 மாநில சமூக நல போர்டு, மாநிலத்தின் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் போடப்பட்டுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள மாதர்-குழந்தைகள் நல மானியத்தைப் பயன்படுத்த ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது. அரசாங்கம் அதனைப் பரிசீலனை செய்து அங்கீகரித்துள்ளது. அதன்படி, இந்த ஆணையின் இணைப்பில் கூறியுள்ளபடி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் மாநில முழுதும் முன்னர் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் இத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மாதிரித் திட்டத்தில் அடங்கிய திட்ட நிறைவேற்ற முறைகளையும் அமைப்பையும் பற்றி விளக்கங்கள் வெளியிடுமாறு மாதர் நலத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

13. இணைப்பில் கூறப்பட்டுள்ள மாதர்-குழந்தைகள் நலத் திட்டம் ஒரு மாதிரித் திட்டமே (Model Programme); அதில் பல்வேறு வேலைகளுக்குக் குறிக்கப்பட்டுள்ள தொகைகளும் மாதிரித் தொகைகளேயாகும். இந்தத் திட்டம் வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடலாம். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் பிரதேச நிலைமைகளை மனதில் கொண்டு விளக்கமான திட்டத்தைத் தீட்டிக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இணைப்பில் கூறியுள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, பிரதேசத் தேவைகளை ஒட்டி அதற்கென ஒரு மாதர்-குழந்தைகள் நலத்திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். கீழ்க்குறிப்பிட்டபடும் விஷயங்களில் பொருந்தி வருமானால் இணைப்பில் கூறப்பட்டுள்ள திட்டத்தில் தனி வகைகளில் தேவையான மாற்றங்களைப் பஞ்சாயத்து யூனியன் செய்து கொள்ளலாம் :—

(1) ஐந்தாண்டுக்காலத்துக்கும், அரசாங்க மானியத் தொகையின் மொத்தம் பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிட்ட வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்துள்ள (ஒவ்வொன்றுக்கும், 33⅓ நயா பைசா விதம் என்ற) தொகைக்கு மேலே போகக்கூடாது.

(2) பிரதேசத்தில் உள்ள மாதர் சங்கங்களின் நன்கொடைகளின் மொத்தத் தொகை செய்யப்படும் மொத்த செலவுகளில் 50 சத விதத்துக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(3) பஞ்சாயத்து யூனியனால் அளிக்கப்படும் எல்லாச் சிறப்பு மானியங்களும், பஞ்சாயத்து யூனியன் மன்றம் அங்கீகரிப்பதற்கு முன்னர், பஞ்சாயத்து யூனியனின் மாதர் நலக் குழுக்கு முன்னர் வைக்கப்படவேண்டும்.

14. கிராமப் புறங்களில் மாதர் சங்கங்களைத் தொடங்குவது மாதிரித்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்று அரசாங்கம் கருதுகிறது. ஏனெனில் இந்தச் சங்கங்கள் மாதர்-குழந்தைகள் நலத்துடன் தொடர்புள்ள வேலைகளின் அடிப்படை அம்சமாக அமையும். ஆகவே மூன்றாவது திட்டக்காலத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 30 மாதர் சங்கங்களுக்குக் குறையாமல் தொடங்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது.

15. மேலே கூறப்பட்ட விதிகளுக்கும் இணைப்பில் கூற பட்டுள்ள, பல்வேறு வேலைகளின் செலவுகளுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாக அங்கீகாரம் அளிக்கவும், அதற்கான காலவரையறை வகுக்கவும் அதிகாரம் பெற்றுள்ள ஸ்தாபனங்களாகும். பஞ்சாயத்து யூனியன்கள் திட்டத்தை நிறை வேற்றுகின்றபொழுது, ஐந்தாண்டுகளுக்கு அளிக்கப்பட இருக்கும் மொத்த மானியத்தில் ஐந்தில் ஒரு பாகம் இருக்கும்படி வருடாந்திர மானியத்திறகே வரவு செலவுத் திட்டம் தயாரித்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வருவாய் அனுமதிக்குமானல், அவர்கள் அதற்கு மேலும் செலவு செய்து கொள்ளலாம்.

16. ஆரம்ப நிலையில் திட்ட நிறைவேற்றத்துக்கான செலவுகளை, பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து செய்யவேண்டும். மாதாந்திரச் செலவு அறிக்கையை, சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு அனுப்பி, பின்னர் அந்த செலவுகள் ஈடு செய்யப்படும். ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், இந்தச் செலவுகளை "47-எ. சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சிப்பணி—பி. அபிவிருத்தித்திட்டம்—மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள வேலைகள்—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்— vı சமூகக் கல்வி—உதவி மானியங்கள்" என்ற தலைப்பில் பற்றுவைத்து ஈடு மானியங்களை அங்கீகாரம் செய்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதத்தில், அந்த மாதத்தின் 20 தேதி வரை ஆன செலவுகளை ஈடு செய்ய மானியங்களைக் கேட்கவேண்டும். மீதியிருக்கும் செலவுத் தொகை எப்ரல் கேட்டுப் பெற வேண்டும். கணக்குத் தணிக்கையின்போது, மானியத்தைப் பெறவும், செலவு ஈடுத் தொகைப் பெறவும் உள்ள தகுதி பரிசீலனை செய்யப்படும்.

இணைப்பு

மாதர்-குழந்தைகள் நல மாதிரித்திட்டம்

வரிசை எண்.	வகைகள்	ஓராண்டுக்கு எந்த இடம் அல்லது எந்த வகை வேலை என்பது: தொடர்ந்து ஏற்படும் வகைச் செலவு	ஓராண்டுக்கு எந்த இடம் அல்லது எந்த வகை வேலை என்பது: தொடராத வகைச்செலவு	மொத்த இடங்கள் அல்லது மொத்த வகை வேலைகள்	ஆண்டுகள்	மொத்தம்: தொடர்ந்து ஏற்படும் வகை	மொத்தம்: தொடர்ந்த வகைச் செலவு
		ரூபாய்	ரூபாய்	—	—	—	ரூபாய்
1	முதல் உதவியும்-பொது உபகரணங்களும் (கருவிகள்).	..	50	30	..	..	1,500
2	பொது வேலைகளுக்குச் சில்லரைச் செலவுகள்.	60	..	30	5	9,000	..
3	ஒவ்வொரு மூன்று மாதத்துக்கும்-அமைப்பாளருக்கு ரூ. 15 வீதத்தில்.	60	..	30	5	9,000	..
4	கைத்தொழில் கருவிகள்.	..	200	30	..	..	6,000
5	பயிற்சி முகாம்கள் ..	200	..	4 முகாம்களுக்கு முதல் 2 ஆண்டுகளுக்கு (2 × 2).	2	400	..
6	குழந்தைக் காட்சிகள் ..	20	..	5	5	500	..
7	கல்விப் பயணங்கள் (40 பேர்).	100	..	..	5	500	..
8	சமூகக் கல்வி	..	10	30	..	300	..
9	கிராம சேவிகைகளுக்குக் காட்சிக் கருவிகள்.	..	100	..	..	..	100
						19,700	7,600

ஐந்தாண்டுக்காலத்துக்கான தொடர்ந்து ஏற்படும் செலவுகள்—தொடர்ந்து ஏற்படா செலவுகளின் மொத்தம்—ரூ. 27,300. (ரூபாய் இருபத்தியேழாயிரத்தி முன்னூறு மட்டும்).

(கிராம நல) தல, நிர்வாகத்துறையின 17—1—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 150.)

குழந்தைகள் நலம்—பள்ளி செல்லும் பருவத்துக்கு முன் நிலையில் உள்ள குழந்தைகளின் நலம் முன்னோடிக் கேந்திர நிலையங்களை ஆரம்பித்தல்

[Children's Welfare-Care of Pre-School Children Starting of Pilot Centres-orders issued]

[G.O.Ms.NO., 180, R.D, & L.A. Dt., 20th January 62]

பதினன்கு வயதுக்கு முடியாத எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வி அளிக்க மாநில அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அரசியல் சட்டத்தில் கண்டுள்ளதும், மாநில அரசின் நெறிமுறை கோட்பாகும். இந்த கொள்கையின்படி, மாநில அரசாங்கம், ஆறு வயதிலிருந்து பதினொரு வயது வரையில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக ஆரம்பக் கல்வியை அளிக்கும்படியான ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. அதற்கான நிர்வாகம் ஏற்பாடுகளையும், போதிய நிதி வசதியினையும் செய்துள்ளது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்கால முடிவுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான முறையில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ், முனிசிபாலிட்டிகள், கன்டோன் மெண்டுகள், டவுன் ஷிப்புகள் தவிர மாநிலத்தில் உள்ள மற்ற எல்லாப் பிரதேசங்களிலும் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி செய்தல் என்ற ஐந்தாண்டு வேலைத் திட்டத்தினை உருவாக்கி நடத்தி வைக்கிற சட்ட பூர்வமான பொறுப்பானது முன்பே அமைக்கப்பட்டுள்ள மற்றும் அமைக்கப்பட்டு வருகின்ற பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. வருங்காலத்தில் மாறுப்படும் பல்வேறு வகையாகவும் காணப்படுகின்ற தொழில் முறைகளுக்கு தகுந்த மாதிரி, தங்களை ஆக்கிக் கொள்ளவும், திறமை வாய்ந்த பயனுள்ள பிரஜைகளாக அவர்கள் எதிர்காலத்தில் விளங்குவதற்கும் வேண்டிய ஆதார அடிப்படையில் கல்வியை எல்லாக் குழந்தைகளும் பெறுவது என்பதுதான் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வியினை அளிப்பதின் நோக்கமாகும். அதே சமயத்தில் ஆரம்ப நிலையில் அளிக்கப்படும் கல்விக்கு நல்ல அடித்தளமாக விளங்கும். உடல், மனம் இருவகைப்பண்புகளிலும் பள்ளிக்கு செல்லும் முன்னல் உள்ள காலத்திலேயே நல்ல பழக்க வழக்கங்களை அளிக்கப்படுகின்றன. தேவையானது ஆரம்பக்கல்வியை அளிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு இதுவும் அவசியமாகும். மாநிலத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பள்ளிக்குச் செல்லு முன்னல் அளிக்கப்படுகின்ற கல்வியானது எப்படி அளிக்கப்படவேண்டும் என்பது மாநில அரச்ர்ங்கம் பரிசிலனை செய்து கொண்டு வந்தது. இதற்காக வகுக்கப்படுகிற வேலைத் திட்டமானது பள்ளிப் படிப்புக்கு முற்பட்ட நிலையில் உள்ள குழந்தைகளின் நலமானது கிராமங்களில் மகப்பேறு குழந்தை நல நிலயங்கள் குடும்பக் கட்டுப்பாடு பணிகளுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. கிராமங்களில், இந்த வசதிகளை திருப்திகரமான முறையில் அளிக்க வேண்டி, ஒழுங்கான, பயிற்சி பெற்ற கிராமப் பெண் பணியாளர்கள் தேவைப்படுகிறது. இந்தப் பெண் பணியாளர்கள் கிராமத்தில் தாய் - சேய் நலத்திற்கான வேலை முறைகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆகவே, இந்தப் பெண் பணியாட்கள் ஒழுங்கான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேவையான பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்களுக்கு முழு நேர வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டியது, இந்த வேலைத் திட்டத்தின் முக்கியமான பகுதியாகும். இந்த வேலைத் திட்டமானது பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் மூலமாக நடைபெற வேண்டும் என்பதையும் அந்த நிறுவனங்கள் அளிக்கின்ற கல்வி, நலப்பணிகளுடன் இணைந்த ஓர் அம்சமாகவே இந்த வேலைத் திட்டம் இருக்க வேண்டும் என்பதையும் அரசாங்கம் உணருகிறது. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பிரிவு 65 (சி)-ன்படி, "மகப்பேறு, குழந்தை நல நிலயங்களை அமைத்து, பராமிரிப்பதும், குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக தாய்மார்களுக்கு ஆலோசனையும், உதவியும் புரிவதும், தாயிகள் (மருத்துவச்சிகள்) பணிக்களைப் பராமரிப்பதும்" ஆகிய இந்த வேலைகளுக்காக வேண்டிய தேவைகளுக்கு தங்களுடைய சொந்த நிதியின் வரம்புக்குட்பட்டு, நியாயமான நிதிவசதியினை செய்ய வேண்டும் என்ற பொறுப்பானது பஞ்சாயத்து யூனியன்களிடம் விடப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட அம்சங்களை யெல்லாம் கவனத்திலிறுத்தி, அரசாங்கம் பள்ளிப்படிப்புக்கு செல்வதற்கு முன்னல் உள்ள பருவத்தில் உள்ள குழந்தைகள் நலனுக்கு ஒரு விவரமான வேலைத் திட்டத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அந்த வேலைத் திட்டம் இந்த ஆணையின் இணைப்பில் சொல்லப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டமானது. ஒரு முன்னேடி வேலை முறையாக, 1962-63-முதல் மாநிலத்தில் உள்ள எல்லா அபிவிருத்தி மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற 500 பஞ்சாயத்துக்களில் தொடங்கப்படுகிற 500 பள்ளிப் படிப்புக்கு முற்பட்ட பருவத்தில் உள்ள குழந்தைகள் பள்ளி நிலயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்த 500 பஞ்சாயத்துக்களில் பொறுக்கி எடுப்பதில் மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிடுகிறது. அந்த தேர்ந்தெடுத்தல் வேலை கீழ்க்கண்ட நிலையில் இருக்கவேண்டும்.—

(அ) ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலும் இந்த வேலைத் திட்டம் தொடங்கப்படுவதில் குறைந்த பட்சம் ஒரு அபிவிருத்தி வட்டாரமாவது சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) அந்த வட்டாரத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இந்தத் திட்டம் நடத்தப்பட வேண்டும்.

(4) இந்த உத்தரவின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விவரமான குறிப்புகளிலிருந்து இந்த வேலைத் திட்டத்தின் விசேஷமான அம்சம என்ன என்பது தெரிகிறது. அதாவது போதிய எண்ணிக்கையுள்ள முக்கிய சேவிகைகளுக்கு வேண்டிய ஆரம்பப் பயிற்சியினை அவர்களுக்கு அளித்தல், அவர்கள் அதன் பிறகு புகு முகப் பள்ளி நிலையங்களை நடத்தும் பொறுப்பில் உள்ள தாய்களை, மற்ற பெண் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். முப்பத்துக்கு மேற்படாத முக்கிய சேவிகைகள் பொறுக்கி எடுக்கும்படி அரசாங்கம் மாதர் நலத்துறை இயக்குநருக்கு உத்தரவிடுகிறது. சென்னை நகரத்திலோ அல்லது மாவட்டங்களிலோ தகுதி வாய்ந்தது என்று அனுமதிக்கப்பட்டுள்ளதானே ஒத்துழைக்க முன் வருகிற நிறுவனங்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் இந்த முக்கிய சேவிகைகளுக்கு போதிய பயிற்சியினை ஆறுமாதத்திற்குக் குறையாத அளவுக் காலத்திற்கு அளிப்பதற்கான ஏற்பாடுகளை [illegible]ர் செய்ய வேண்டுமென அரசாங்கம் உத்தரவி[illegible] பயிற்சிக் கால சமயத்தில் முக்கிய சேவை[illegible] பணியில் இருப்பதாகவே கருதப்பட்டு அவர்களுடைய வழக்கமான சம்பளத்தையும் படிப்புகளையும் அவர்கள் பெறுவார்கள். தாங்கள் பணி புரிகின்ற இடத்திலிருந்து பயிற்சி பெறுகின்ற இடத்திற்கு போகவும் அங்கிருந்து பணி புரிகின்ற இடத்திற்குத திரும்பி வருவதற்கும் அவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வழக்கமானப் பிரயாணப் படி, தினப்படிகளை பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில், பயிற்சிப் படி என்று மாதம் 75 ரூபாய் என்ற வீதத்தில் படிகள் பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில் அவர்கள் அவர்கள் தினப்படி பெறமுடியாது.

5. இந்த வேலைத் திட்டம் நடத்தப்பட வேண்டிய ஒவ்வொரு வட்டாரத்திலும், இந்த ஆணையின் இணைப்பில் கண்டுள்ள உத்திரவுகளின்படி புது முக பள்ளி நிலயங்களை நடத்துவதற்காக பயிற்சி பெற்ற போதிய தாயிகளையும் மற்ற தகுதி வாய்ந்த நபர்களையும் பொறுக்கி எடுக்கின்ற வேலையை மாவட்ட மாதர் நல அதிகாரியின் ஒத்துழைப்புடன், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் மாதர் நலக்குழு செய்ய வேண்டும். அப்படி பொறுக்கி எடுக்கப்பட்டவர்களுக்கு வட்டாரத் தலைமை அலுவலகம் உள்ள இடத்தில், மூன்று மாதத்திற்கு, இதற்கான விசேஷ பயிற்சி பெற்றுள்ள முக்கிய சேவிகைகளினால் பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சி முகாம்களை வெற்றிகரமாக நடத்துவதற்குப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் சம்பந்தப்பட்ட மாவட்ட மாதர் நல அதிகாரியும் கூட்டுப் பொறுப்பு உரியவர்களாவார்கள். பயிற்சி முகாம்களில் கையாளப்பட வேண்டிய பாடத்திட்டங்கள், வேலை முறைகள் பற்றிய விவராமன அறிக்கைகளை மாதர் நலத்துறை இயக்குநர் பிறப்பிக்குமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

6. இந்த வேலைத் திட்டத்தை செயல் படுத்தி நடத்துவதில், பல்வேறு கட்டங்களில் கால அட்டவணை பற்றிய விவரங்கள் இந்த ஆணையின் இணைப்பின் 8-வது பாராவில் சொல்லப்பட்டுள்ளது. 14—11—62 தேதி அளவில் இந்த 500 புகு முக பள்ளி நிலயங்கள் ஆரம்பித்து நடைபெறுவதற்காக வேணடி, இந்த கால அட்டவணையானது தவருமல் கண்டிப்பாக அனுசரிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

7. கீழ்க்கண்ட இனங்களுக்கு செலவினத்திற்காக அனுமதி அளிக்கப்படுகிறது.—

(அ) பயிற்சி பெற வேண்டிய முக்கிய சேவிகைகளுக்கு ஆறு மாத காலத்திற்கு மாதம் 75 ரூபாய் என்ற வீதத்தில் பயிற்சிப் படி அளிப்பதற்கானசெலவு.

(ஆ) வட்டாரத் தலைமை அலுவலகம் உள்ள இடத்தில் பயிற்சிக் காலத்தில் இந்த புது முக பள்ளி நிலையங்களை நடத்துவதற்கு என்று பொறுக்கி எடுக்கப்பட்டுள்ள 500 பேர்களுக்கு இலவச சாப்பாடு வசதி அளிப்பதற்கான செலவு இந்தச் செலவினமானது மூன்று மாதத் காலத்திற்கு, மாத மொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 25 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது. பயிற்சி நடைபெறுகிறது.

(இ) 21 வட்டாரங்களில் வட்டாரத் தலைமை அலுவலகம் உள்ள இடங்களில் பயிற்சியாளர்களுக்கு இட வசதி செய்து தருவதற்கான செலவு இந்த செலவுத் தொகையானது ஒரு வட்டாரத்திற்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் போகக்கூடாது.

(ஈ) மாதமொன்றுக்கு, பயிற்சியாளர் ஒருவருக்கு 15 ரூபாய் என்ற வீதத்தில் 500 பயிற்சியாளர்களுக்கு, மூன்று மாத காலத்திற்கு அளிக்கின்ற பண உதவித் தொகைக்கான செலவு.

(2) ஒவ்வொரு புகு முகப் பள்ளி நிலையத்திற்கும் வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கான செலவு இந்தத் தொகை ஒரு நிலையத்திற்கு 300 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது. இது ஒரு தொடர்ந்து ஏற்படாத செலவினமாகும்.

(ஊ) புகு முகப் பள்ளி நடத்தப் பெறுகிற ஒவ்வொரு பஞ்சாயத்தின் மாதர் நலக் கமிட்டிக்கு மாதமொன்றுக்கு 5 ரூபாய் என்ற வீதத்தில் நிர்வாக மானியம் அளிக்க ஆகும் செலவுத் தொகை

(எ) ஒவ்வொரு, புகு முகப் பள்ளி ஆசிரியருக்கும் மாதமொன்றுக்கு 20 ரூபாய் என்ற வீதத்தில் அளிக்கப்படும் கௌரவப் பணம் என்ற அளவில் ஆகும் செலவினம்.

(எ) ஒவ்வொரு புகு முகப் பள்ளி நிலையத்திற்கும் மாதமொன்றுக்கு 7 ரூபாய் என்ற வீதத்தில் அவசர செலவுக்கான செலவுத் தொகை.

இந்த செலவானது “ 47-ல் பல்வகைத் துறைகள்—ஜே. பல் வகைகள் ஏ— மாதர் நல இலாகா—ii அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்—மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலை திட்டங்கள் என்ற தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 20-1-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 180)

இணைப்பு

பள்ளி செல்லும் பருவத்துக்கு முன் நிலையில் உள்ள குழந்தைகள் பராமரிப்புத் திட்ட நிறைவேற்றம் பற்றிய விளக்கம்

முன்னுரை

1. (1) பள்ளி செல்லும் பருவத்துக்கு முன் நிலையில் உள்ள குழந்தை என்பது, 2 முதல் 5 வயது வரையில் உள்ள குழந்தைகளைக் குறிக்கும். இந்த அடிப்படையில் பள்ளி செல்லும் பருவத்திற்கு முற்பட்ட நிலையில் உள்ள குழந்தை மொத்தத் தொகை நம் மாநிலத்தில், மொத்த மக்கள் தொகையான 336 இலட்சத்தில் (1961 கணக்கெடுப்பு) 8 லிருந்து 9 சத வீதம் என்று அல்லது 27 இலட்சம் என்று உத்தேசக் கணக்கிடப் பட்டுள்ளது. இதன்படி, ஒரு ஆரம்பப் பள்ளியுள்ள பிரதேசத்தில் சராசரி 100-ம் ஒரு ரெவினியூ கிராமத் தில் 150-ம் ஒரு கிராமப் பஞ்சாயத்துப் பிரதேசத்தில் சுமார் 200 மாக பள்ளிப்பருவத்திற்கு முன் நிலையில் உள்ள குழந்தைகள் உள்ளனர்.

1. (2) இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு கிராமப் பஞ்சாயத்துப் பகுதியில் சுமார் 50 குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில், ஒரு பள்ளிப் பருவ முன் நிலை–நிலையத்தை (Pre School Centre) அமைக்க வேண்டும் 1962–63-ல் எல்லா அபிவிருத்தி மாவட்டங் களிலும் இத்தகைய நிலையங்கள் 500 அமைக்கப்படும். ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலும் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த வட்டாரம் ஒன்றுவது இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத் திலும், ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு நிலையம் வீதம், பள் ளிப் பருவ முன் நிலை-நிலையங்கள் தொடங்கப்படவேண்டும். வட்டாரங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் அரசாங்கம், (சென்னை தவிர ஏனைய) எல்லா மாவட்டங்களின் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தையும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத் தையும் கலந்தாலோசிக்கும். விஷயம் உடனே எடுக்கப் பட்டு, 500 பஞ்சாயத்துக்களைத் தேர்ந்து எடுக்கும் வேலை, 1962 பிப்ரவரி முடிவுக்குள் முடிந்து விடும்.

கைக்கொள்ள வேண்டிய வேலைமுறை

2. (1) பள்ளிப் பருவ முன் நிலை-நிலையங்களில் பின் பற்ற வேண்டிய வேலை முறை, பாலர் நிலையங்களில் (Balwadis) பின் பற்றப்படும் வேலை முறை யைத் தழுவியும், அதை எளிமைப்படுத்தியுமே அமை க்கப்படும். அவை, எளிய வீட்டு வெளி வேலைகள் (சொல்லி யும், தன்னிச்சையாகவும் செய்தல்), சுகாதாரப் பழக்கங் களைப் பயில்தல், எளிய தோட்ட வேலை, கைகளுக்குச் சம நிலைப் பயிற்சி. சரியான உடல் அமைப்புப் பயிற்சி, கைவேலை, (காகித வேலை, பாய் முடைதல், களிமண் பொம்மை செய்தல், முதலியன), கலைப்பயிற்சி (நாட்டியம், சேர்ந்து பாடுதல், நாடகம், படம் வரைதல், ஓவியம் தீட்டுதல்), வேடிக்கை பார்த்தல், திருத்தமாக உச்சரித்தல் (தெளிவாகப் பேசுதல், கதை சொல்லுதல், உரை யாடல்) எழுத்து, எண், சமூகப் பண்பாட்டின் எளிய விதிகள், ஒழுங்கு முறைகள் முதலியன கற்றல்—முதலி யனவாகும். மாதர் நலத்துறை இயக்குநர், மாநில சமூக நல போர்டுடன் கலந்தாலோசித்து, பள்ளிப் பருவ முன்நிலை–நிலையங்களில் பின் பற்ற என விளக்கமான ஒரு வேலை முறையை வகுத்து, அதைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் அறிவித்து அவற்றின் மூலம் பள்ளிப்பருவ முன்நிலை-நிலையங் களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

2. (2) இதற்கு மேலும், பள்ளிப் பருவ முன் நிலை நிலையங்களின் பொறுப்பாளர், இத்திட்டத்திற்கு உத வியாக வரும் கோதுமை முதலான பொருள்களைத் தயாரித்து வினியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள் வார். மாதிரி திட்டமாக கோதுமை தயாரிப்புக்களை பள்ளிப் பருவ முன்நிலை குழந்தைகளுக்கு வழங்குவது சம்பந்தமான சில முறைகள் செய்து பார்க்கப்படுகின்றன.

இந்த முறையினால், கோயம்புத்தூரில் நாளொன்றுக்கு 5 டன் வீதம் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பல நோக்கு உணவுடன் செய்யப்படும் கோதுமைத் தயாரிப்புக்களைப் பெருக்கவும் முடியும் மேலும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் (UNICEF) துணையுடன் 10 டன் உற்பத்தி செய்யும் தொழிலகமும் அமைக்க உத்தேசம் இருக் கிறது. இது சம்பந்தமாக ஒரு அனுபவ பூர்வமான பல மிக்க ஒரு திட்டத்தை, மாதர் நலத் துறை இயக்குநர், ஆரம்ப நிலையில் மாதிரித் திட்டமாகச் செய்யப்பட்டதன் முடிவுகளின் அடிப்படையில், தயாரித்து, அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். திட்டம் அங்கீகரிக்கப்பட்ட வுடன், நிறைவேற்றப்படுவதற்காக எல்லா பள்ளிப் பருவ முன் நிலை-நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

அதிகாரமும் மேற்பார்வையும்

3. (1) அரசாங்க நிலையில், இந்தத் திட்டம் கிராம நல, தல நிர்வாகத்துறையினரால் நிர்வகிக்கப்படும். தமிழ் நாடு சமூக நல போர்டு, மதர் நலத்துறை இயக்குநர் ஆகியோரால் செயல்படுத்தப்படும்.

3. (2) வட்டார நிலையில், மாதர் நலத் திட்டத்தின் திருத்தி அமைக்கப்பட்ட இணைப்புடன் தொடர்புகொண்ட ஆணைகளின் கீழ், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு தேர்வுக்குழு (ad-hoc-committee) அமைக்கப் படும். "மாதர் நலக்குழு" என்று அழைக்கப்படும் இந்தக் குழு :—

(i) பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் (உறுப் பினராக),

(ii) பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெண் உறுப்பினர்கள்,

(iii) வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களின் பெண் உறுப்பினர்களுக்கிடையில் இருந்து ஐந்து உறுப்பினர்கள்,

(iv) மாநில போர்டின் சிபாரிசின்படி, நியமனத்தால் சேர்த்துக்கொள்ளப்படும் இரு பிரதேச தன்னிச்சை ஊழியர்கள்,

(v) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்—ஆகியோர் அடங்கியதாக இருக்கும். இவ்வாறு அமைக்கப்பட்ட மாதர் நலக்குழு வட்டார நிலையின் திட்டத்தை நிறைவற்றி மேற் பார்வையிடும் பொறுப்பேற்கும்.

(3) பஞ்சாயத்தின் பெண் உறுப்பினரைத் தலைவராகக் கொண்ட மாதர் நலக் குழு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அமைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்தக் குழு கிராம நிலையில், இந்தத் திட்டத்தை மேற்பார்வையிடுவது, நிறைவேற்றுவது ஆகிய பொறுப்பில் இருக்கும். ஒவ்வொரு கிராமக் குழுவுக்கும் பஞ்சாயத்தில், குழுவுக்குச் செயலாளராக இருந்து, கணக்கு முதலான வற்றைக் கவனித்துக்கொள்ளும் தகுதியுடையவருக்கு உதவித்தொகையாக மாதம் 5 ரூபாய் வீதம் ஒரு அமைப்பு மானியம் அளிக்கப்படும்.

கிராமத்தில திட்டத்தை நடத்த நேரடிப் பொறுப்பேற்றிருப்பவரின் கடமைகள்

4. (1) பஞ்சாயத்து நிலையில் இந்தத் திட்டத்தை ஒரு தேர்ந்த, பயிற்சி பெற்ற தாயி (Thayi) (மருத்துவச்சி) அல்லது வேறு பொருத்தமுடைய நபர் கவனித்துக் கொள்வார். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் தமிழ்நாடு சுமார் 8,000 பயிற்சி பெற்ற தாயிக்களை (மருத்துவச்சிகளை) பெற்று இருக்கும். தாயி, தாய்-சேய் நலம், குடும்பக்கட்டுப்பாடு ஆகிய இரண்டு பணிகளையும் கவனித்துக் கொள்வார். குறிப்பாக அவர் கீழ்கண்ட வேலைகளுக்குப் பொறுப்பாவார் :—

(i) பள்ளிப் பருவ முன் நிலையிலுள்ள குழந்தைகளை அவர்களின் வீட்டிலிருந்து பள்ளிக்கு அழைத்து வந்து, அங்கு அவர்களைக் கவனித்துக் கொள்வதுடன் திருப்பி அவரவர்களுடைய வீடுகளில் சேர்ப்பிக்கும் பொறுப்பு,

(ii) கோதுமைத் தயாரிப்பு முதலியவற்றைத் தயாரித்து, கைக்குழந்தைகள், பள்ளிப் பருவ முன்நிலைக் குழந்தைகள், தாய்மார்கள், கர்ப்பவதிகள் ஆகியோருக்கு வினியோகிக்கும் பொறுப்பு,

(iii) மகப்பேறு துணைவர்கள் கிராமங்களுக்கு வரும் பொழுது ஊர்ப் பெண்களை ஒன்று சேர்த்தல், குடும்பக் கட்டுப்பாடு புத்தகங்கள் முதலானவைகளை வினியோகித்தல் ஆகிய வேலையில் உதவி செய்யும் பொறுப்பு.

தாயிக்கு ஊதியம்

5. மேற்படி வேலைகளைச் செய்ய பயிற்சி பெற்ற தாயி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமுள்ள நபர் நிலையான உதவித்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 20 அளிக்கப்படுவார்.

பள்ளிப்பருவ முன் நிலைப் பராமரிப்பில் தாயியைத் தேர்ந்தெடுத்தலும் பயிற்சியளித்தலும்

6. (1) பயிற்சிபெற்ற தாயியை, பஞ்சாயத்து யூனியன் மாதர் நலக் குழு, மாவட்ட மாதர் நல அதிகாரியின் துணையுடன் தேர்ந்தெடுக்கும். பொருத்தமுள்ள, பயிற்சி பெற்ற தாயி கிராமத்தில் கிடைக்கவில்லை என்றால் அல்லது சில காரணங்களுக்காகத் தகுதியில்லை என்றால், குழு வேறு தகுதியுடையவரைத் தேர்ந்தெடுக்கலாம். அப்படிப் பட்ட விஷயத்தில் எழாவது வகுப்பு (இணைப்பு) முடித்திருத்தல் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக வலியுறுத்தப் படுகிறது.

(2) பயிற்சி பெற்ற தாயி, அல்லது தகுதியுள்ள வேறு நபர், பள்ளிப்பருவ முன் நிலை குழந்தைப் (Pre-school child) பராமரிப்பில் ஒரு மூன்றுமாதப் பயிற்சி அளிக்கப்படுவார். இந்தப் பயிற்சி திட்டம் செயல் படும் ஒவ்வொரு வட்டாரத் தலைநகரிலும் அளிக்கப்படும். பயிற்சி முகாம் (Camp) வெற்றிகரமாக நடத்துவதில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும், மாவட்ட மாதர் நல அதிகாரியும் கூட்டுப் பொறுப்பு உள்ளவர்கள் ஆவார்கள். பயிற்சியளிக்கப்படும் முக்கிய சேவிகை பயிற்சி முகாமின் உடனடி மேற்ப்பார்வையைக் கவனித்துக்கொள்வார். அவர் வகுப்புகளை நடத்துதல், சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் முதலானவற்றைக் கவனித்துக்கொள்வார். மாவட்ட மாதர் நல அதிகாரி பயிற்சி முகாமின் விளக்காமன வேலை முறையை வகுத்து, பாடத் திட்டத்தை தயாரித்து முகாம் நடத்தும் அதிகாரிக்கு அவற்றை அனுப்பி வைப்பார்.

(3) பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் அல்லது வட்டார தலைநகரில் உள்ள பள்ளிக் கட்டிடத்தில் அல்லது பொதுக் கட்டிடத்தில் எங்கு வசதியோ அங்கு பயிற்சி முகாம் நடத்தப்படலாம். அவ்வாறு எந்த இடமும் கிடைக்கவில்லை என்றால், பயிற்சியாளர் இருக்கவும் வகுப்புகள் நடத்தவும் தற்காலிகமாக கொட்டகை போட்டு கொள்ளலாம். அவ்வாறு இதற்கெனத் தற்காலிகக் கொட்டகை போடப்படும் இடங்களில், ஒரு பயிற்சி முகாமுக்கு ரூ. 1,000 (ஆயிரம் ரூபாய்)த்துக்கு மேற்படாமல் செலவு செய்ய வகைசெய்யப்பட்டுள்ளது.

(4) பயிற்சியாளர்கள், பயிற்சிக் காலத்தில் பயிற்சி ஊதியமாக (Stipend) மாதம் ரூபாய் 15 அளிக்கப் படுவதுடன் உணவும், இருப்பிடமும் இலவசமாக கொடுக்க படுவார்கள். பயிற்சி முகாம் காலத்தில் தற்காலிகமாக ஒரு மருத்துவ மேற்பார்வையாளர் (Matron) அமர்த்தப் படலாம். ஒரு முகாமில் மூன்று மாதம் வீதம், அவருக்கு மாதம் ரூ. 90 ஊதியம் அளிக்கப்படலாம்.

(5) ஒவ்வொரு பயிற்சியாளரும் பஞ்சாயத்து யூனியனில் பள்ளிப்பருவ முன் நிலை ஆசிரியை ஆக (Pre-School Teacher) பயிற்சி முடிந்த பின்னர் குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்ற ஓர் ஒப்பந்தம் (Bond) மூலம் உறுதி பெறப்படும்.

முக்கிய சேவிகைகளின் பயிற்சி

7. (1) மாவட்ட மாதர் நல அதிகாரி, மாவட்டத்திலிருந்து இந்த வேலையில் சிறப்பாக ஆர்வமுள்ள தகுதியுள்ள முக்கிய சேவகிகளை 30 பேருக்கு மேற்படாமல் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு, பள்ளிப்பருவ முன் நிலைக் குழந்தைகள் பராமரிப்பில் தேவையான பயிற்சியை சென்னையில், அல்லது மாவட்டத் தலைநகரில் நடத்தப்படும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உதவியுடன் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்தப் பயிற்சி 6 மாத காலத்துக்கு இருக்க வேண்டும். இந்தப் பயிற்சியின் பொறுப்பை மாதர் நலத் துறை இயக்குநர் நேரடியாக ஏற்றுக்கொள்வார்.

(2) பயிற்சிக் காலத்தில் முக்கிய சேவிகைகள் அவர்களுக்கு உரிய வழக்கமான ஊதியத்தையும், படித் தொகைகளையும் பெறத் தகுதியுடையவராவார்கள். அவர்கள் வேலை செய்யும் இடத்திலிருந்து பயிற்சி பெறும் இடத்திற்கு அல்லது இடங்களுக்கு பயணம் செய்யவும், திரும்பி அவர்கள் வேலை செய்யும் இடங்களுக்குச் செல்லவும், அவர்களுக்கு விதிகள் அனுமதிக்கும் பயணப்படியையும், தினப்படியையும் பெறுவதற்கு அவர் தகுதியுடையவராவார்கள். இத்துடன் பயிற்சிக் காலத்தில், பயிற்சிப் படியாக (Training Allowance) மாதம் ஒன்றுக்கு ரூ. 75 அளிக்கப்படுவார்கள்.

(3) பயிற்சி முடிந்த பின்னர், இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் வட்டாரத்தில், மாதர் நலத் துறை இயக்குநர் அவர்களை அமர்த்துவார். உடனே முக்கிய சேவிகைகள் கிராம நிலையங்களை நடத்தத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்குப் பயிற்சி முகாம்களை நடத்த ஏற்பாடு செய்வார்கள். வாட்டார நிலைப் பயிற்சி முகாம்களுக்கு அவர்கள் உடனடிப் பொறுப்பாளர்களாய் இருப்பார்கள். அவர்கள் திட்டம் சம்பந்தமாக மாதர் நலத் துறை இயக்குநரால் வெளியிடப்பட்டுள்ள பயிற்சி முகாம்களை நடத்துதல், வேலை முறை, பாடத்திட்டம் முதலியன பற்றிய விளக்கங்களைப் பின்பற்றிச் செயல்படுவார்கள்.

திட்டநிறைவேற்ற அட்டவணை

8. திட்டத்தை நிறைவேற்ற கீழ்க் கண்ட கால அட்டவணை போடப்பட்டுள்ளது :—

1962 பிப்ரவரி 1-ம் தேதி.—மாதர் நலத் துறை இயக்குநரால் தன்னிச்சை நிறுவனங்களில் (Voluntary Institutions) பயிற்சி பெற 30 முக்கிய சேவிகைகள் அனுப்பப்படுவர்.

1962 ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதி.—முக்கிய சேவிகைகள் அவர்களின் பயிற்சியை முடித்துக்கொள்வர்.

1962 ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி.—முக்கிய சேவிகைகள் வட்டார நிலை முகாம்களைத் துவக்குவர்.

1962 நவம்பர் மாதம் 10-ம் தேதி.—500 தாயிகள் அல்லது தகுதியுடையவர்கள் அயர்கள் பயிற்சியை முடித்துக்கொள்வர்.

1962 நவம்பர் மாதம் 14-ம் தேதி.—500 பள்ளிப் பருவ முன்நிலை—நிலையங்கள் தொடங்கப்படும்.

குழந்தைகள் தினம்

குறிப்பிடப்பட்ட நாட்கள் கண்டிப்பாக பின்பற்றப்படும்.

செலவுகளின் உத்தேசம்

9. (1) தகுந்த இடவசதியே முதல் தேவை. பள்ளிப் பருவ முன் நிலைத் துவக்கப் பள்ளி (Pre-School Primary School) குழந்தைகள் நடந்து செல்ல ஏற்ற வகையில் கிராம குடியிருப்புக்கு இரண்டு முதல் நான்கு பர்லாங்குக்குள் அமைக்கப்பட வேண்டியது தேவையாகும். ஒரு கூடம், அகன்ற ஒரு தாழ்வாரம், திறந்த வெளி இடம் ஆகியவை இருக்க வேண்டியது அவசியம். பல கிராமங்களில், ஆரம்பப் பள்ளி, அல்லது மண்டபம் அல்லது பிற இடங்கள் வசதியாக இருக்கும். எவ்வாருயினும் உள்ளூர் குழுவின் துணையுடன், கிராம மக்கள் இடவசதி செய்து தரவேண்டிய பொறுப்பாளர் ஆவார்கள். இதற்கென்று எந்த நிதி வசதியும் செய்யப்படவில்லை.

(2) ஒவ்வொரு பள்ளிப் பருவ முன் நிலை—நிலையத்திற்கும் (Pre-School Centre) கருவிகள் வாங்கச் செலவு ரூ. 300 ஆகும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதில் கோதுமைத் தயாரிப்புச் சமையல் பாத்திரங்கள், தட்டுகள் இவைகள் முதலியன வாங்கும் செலவும் அடங்கும். மாநில சமூகநல போர்டு தேவையான பொருள்களை வரையறுத்து ஒரு பட்டியல் போட்டு எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுப்ப வேண்டும். மேலும் அவர்கள், தொழில் துறை இயக்குநரின் (Director of Industries) ஆலோசனையுடன் பொருள்களை மொத்தமாகவும், சிக்கனமாகவும் தயாரிக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

(3) ஒரு பள்ளிப்பருவ முன்நிலை—நிலையத்திற்கு அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய செலவுகள் வருமாறு :

மாதர் நலக் குழுவுக்கு அமைப்பு மானியம் (Organisational Grant) மாதம் ஒன்றுக்கு—5 ரூபாய்.

பள்ளிப்பருவ முன் நிலை ஆசிரியருக்கு உதவிப் பணம்—20 ரூபாய்.

சில்லறைச் செலவுகள்—7 ரூபாய்.

ஆகமொத்தம்—32 ரூபாய்.

(4) கணக்கு வைப்பு முறை பற்றிய விளக்கங்கள் கிராமநல, தல நிர்வாகத் துறை (கணக்குப் பிரிவு) யினால் வெளியிடப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருடம் ஜனவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 180).

குடியரசு தின விழா

சுற்றறிக்கை

1962-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 26-ம் தேதி குடியரசு தின விழாவைப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கொண்டாடுவதற்கான செலவின் வரம்பை நிர்ணயித்து, தக்க விளக்கங்களோடு, அரசாங்க உத்திரவு (1962-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 91 *) வெளியாகியுள்ளது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகிய எல்லோரும், மேற்சொன்ன உத்திரவைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2. தமிழ் நாடு முழுவதிலுமுள்ள கிராமாந்தரப் பிரதேசங்களான மாவட்டங்கள் எல்லாவற்றிலும் (ஒன்று தவிர) புதிய பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் செயல்படத் தொடங்கிய பிறகு, கொண்டாடப்படும் முதல் "குடியரசு தின விழா" இதுவேயாகும். எனவே, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தக்க முறையில் குடியரசு தின விழாவினைக் கொண்டாட, பொருத்தமான ஏற்பாடுகள் செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

3. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, "இந்தியக் குடியரசு" ஆரம்பமானதை இந்தத் திருநாள் குறிப்பிடுகின்றது. இந்நாட்டு மக்களின் இலட்சியங்களுக்கும், அபிலாஷைகளுக்கும் உறைவிடமாக அமைந்த, இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம், இந்த நாளில் அமுலுக்கு வந்தது. அன்றைய தினம், நாம் நிர்ணயித்துக் கொண்ட தேசியக் குறிக்கோளை, ஓரளவு பூர்த்தி செய்வதற்காகவே புதிய பஞ்சாயத்து ஆட்சி, இன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த தினத்தில், அரசியல் அமைப்புச் சட்டத்திலே காணப்படும் இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதற்கும், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஜனநாயக முறையில் திட்டமிட்ட அபிவிருத்தி ஆகிய காரியங்களிலே, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நன்முக கடமை செய்யவேண்டியது அவசியம்.

4. குடியரசு தினத்தன்று, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பொதுக்கூட்டங்கள் நடத்தலாம். அப்போது, அரசியல் அமைப்புச் சட்டத்தின் குறிக்கோளைப் பற்றியும், பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் வளர்ச்சியைக் குறித்தும், விளக்கமாகப் பொதுக்கூட்டங்களில் எடுத்துரைக்கலாம். பஞ்சாயத்துத் தலைவர் ஒவ்வொருவரும் தம் ஊரிலுள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடத்தில், காலை எட்டு மணிக்கு, தேசியக் கொடி ஏற்றிவைக்க வேண்டும். அந்தந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகள் இந்த விழாவில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். தேசிய கீதத்தை ("ஜனகன மன" என்ற பாடல்) எல்லாக் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுத்து, கொடியேற்று விழா நடைபெறும்போது, அவர்கள் நன்முகப் பாடும்படி ஏற்பாடு செய்யவேண்டும். பொதுக்கூட்டத்தை, கொடியேற்று விழாவுடன் சேர்த்துக் காலையிலேயே நடத்தலாம்; அல்லது, அன்று மாலையும் நடத்தலாம். பொதுக்கூட்டத்தை யொட்டி மாலையில் ஒரு கலை விழாவை நடத்தலாம். பள்ளிக்கூடத்தில் விழா முடிந்த பிறகு, குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கலாம். பஞ்சாயத்து யூனியன் தலைமைக் காரியாலயம் இருக்கும் ஊரில், யூனியன் அலுவலகத்தில் அன்று காலை எட்டு மணிக்கு, பஞ்சாயத்து யூனியன் தலைவரால் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்படலாம். அந்தக் கொடியேற்று விழாவில், யூனியன் அலுவலர்கள், பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

5. பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யலாம். பாரதியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, தேசிக விநாயகம் பிள்ளை முதலான கவிஞர்கள் இயற்றியுள்ள தேசியப் பாடல்களைப் பாடச்சொல்லி, பாட்டுப் போட்டி நடத்தி, பரிசுகள் வழங்கலாம். இந்த விழாக்களை ஏற்பாடு செய்யவும், அவை சிறப்புடன் நடைபெறவும், வட்டார அலுவலர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். மக்களின் இதயங்களிலே—குறிப்பாக, இளைஞர்களின் இதயங்களிலே—நமது தேசிய இலட்சியங்கள் நன்முகப் பதிகின்ற வகையில், இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் அமைய வேண்டும்.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9,
15—1—1962.

கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்,
கிராம நல, தல நிர்வாகத்துறை.

---

* உள்ளாட்சி நிறுவனங்கள் குடியரசு தினவிழாவைக் கொண்டாடுவதற்காக எவ்வளவு செலவிடலாம் என்பது பற்றி, அரசாங்கம் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ந் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 91-ல் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, சென்னை மாநகராட்சி 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும், மதுரை மாநகராட்சி 200 ரூபாய்க்கு மேற்படாமலும், பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிட்டிகள், டவுன்ஷிப்புகள் ரூ. 100-க்கு மேற்படாமலும், பஞ்சாயத்துக்கள் ரூ. 30-க்கு மேற்படாமலும் செலவிடலாம் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(VILLAGE HOUSE TAX—MATCHING GRANT)

கிராம வீட்டு வரி ஈட்டு மானியத்தைச் செலுத்துவது சம்பந்தமான சில விஷயங்களை விளக்கி அரசினர் கீழ்க் கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்கள்:

2. ஒவ்வோர் ஆண்டு கிராமப் பஞ்சாயத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய மானியத் தொகை எவ்வாறு விதிக்கப்பட்டு செலுத்தப்படுகிறது என்பது.—வசூலிக்கப்படும் வீட்டு வரித் தொகையை ஒட்டி கிராம வீட்டு வரி ஈட்டு மானியம் செலுத்தப்படத்தக்கதாகும். எனவே ஒரு கிராமப் பஞ்சாயத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய மானியத்தைத் தீர்மானிக்கையில் நிலுவைகளை வசூலிப்பது, நடைமுறை வரிகளை வசூலிப்பது ஆகியவற்றில் வேறுபாடு காட்டக் கூடாது. நிலுவைகளிலிருந்தும், நடைமுறை கேட்புகளிலிருந்தும் வசூலிக்கப்பட்ட தொகையை ஒட்டி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் செலுத்தப்படத் தக்க மானியத்தைத் தீர்மானிக்க வேண்டும்.

வீட்டுவரித் தீர்வையானது, 1948-ம் ஆண்டு சென்னைப் பொது நூலகங்கள் சட்டத்தின்படி விதிக்கப்படும் நூலக செஸ் அல்லது 1920-ம் ஆண்டு சென்னை ஸ்தல ஸ்தாபனங்கள் குறித்த முன்னுள் சட்டத்தின் "IV-வது அட்டவணையின் 19-வது விதியின்படி நீர் வழங்கலுக்காகவும், விளக்கு வசதிக்காகவும் விதிக்கப்படும். கூடுதல் வீட்டு வரி அல்லது 1939-ம் ஆண்டு சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 25-வது பிரிவின்கீழ் விதிக்கப்படும் தண்ணீர் வரி போல் கருதப்படுகிறது. எனவே இவ்வினங்கள் சம்பந்தமான கேட்பு, வசூலிப்பு, நிலுவை ஆகியவை பற்றிய விவரங்களைத் தெளிவாகவும், பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் விதித்து வசூலிக்கப்படும் பிரதான வீட்டு வரியினின்று வேறுபடுத்தியும் வைத்து வர வேண்டும். அப்படி வைத்தால்தான், இச் சட்டத்தின் படிச் செலுத்தப்பட வேண்டிய கிராம வீட்டுவரி மானியத் தொகையைச் சரியாகவும் எளிதாகவும் கணக்கிட்டுச் செலுத்த முடியும்.

3. அத் தொகை ஆண்டுதோறும் ஒரே மொத்தத் தொகையாகச் செலுத்தப்பட வேண்டுமா அல்லது தவணைகளில் செலுத்தப்பட வேண்டுமா என்பது.—1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழும், 1950-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழும், வீட்டு வரியானது ஒவ்வொரு அரை யாண்டுக்கும் விதித்து வாங்கப்பட வேண்டியதாகும். ஆண்டு என்பது, 1958-ம் ஆண்டு சட்டம் 37 (2) பிரிவின்படி, நிதி ஆண்டு என்ற பொருளைக் கொண்டதாகும். ஒவ்வோர் ஆண்டும், செப்டம்பர் மாதம் 30-ம் தேதி, மார்ச் மாதம் 31-ம் தேதியோடு முடிவடையும் அரையாண்டுகளுக்காக வீட்டுவரி விதித்து, வாங்கப்படும். வீட்டு வரி அரையாண்டுக்கு ஒரு முறை விதித்து, வாங்கப்படுவது போலவே, கிராம வீட்டு வரியும் இரு அரையாண்டுத் தவணைகளில் செலுத்தப்பட வேண்டுமென அரசினர் முடிவு கட்டியுள்ளனர். ஓர் அரையாண்டில் வசூலித்த விவரங்கள் அடுத்த அரையாண்டில் தான் கிடைக்கும். எனவே, ஓர் அரையாண்டுக்குப் பாக்கியான தொகை அடுத்த அரையாண்டு முடிவிற்குள் செலுத்தப்படலாம்.

4. இந்தக் கணக்கில் மாநில நிதிகளிலிருந்து செலவிடுவதை எந்த அதிகாரி மேல் விசாரணை செய்வார் என்பது.—மாவட்டக் கலெக்டர் தமது அதிகார வரம்பிலிருக்கும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மாநில நிதிகளிலிருந்து கிராம விட்டு வரி ஈட்டு மானியத்தைக் கொடுக்கும் செலவு சம்பந்தமான மேல் விசாரணை செய்ய வேண்டும் என அரசினர் தீர்மானித்துள்ளனர். அவர் ஒவ்வோர் ஆண்டின் 1-ம் தேதியன்றும், ஒவ்வோர் ஆண்டுக்குரிய செலவு மதிப்பீடுகளை வகுத்து அவசியமான விவரங்களை அபிவிருத்திக் கமிஷனருக்கு அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் அவற்றிற்காக மாநில வரவு-செலவுக் கணக்கில் ஒதுக்கீடு செய்ய இயலும். அபிவிருத்திக் கமிஷனர் மாவட்டக் கலெக்டர்களிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீடுகளை ஒருங்கிணைத்து அவற்றை நிதித் துறைக்கு அனுப்ப வேண்டும். கிராம நல -தல நிர்வாகத் துறைக்கும், அதன் நகல் ஒன்றை அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினுல்தான் மாநில அரசினரின் செலவினங்களின் ஆண்டு மதிப்பீடுகளில் அவை இடம் பெறும். சட்டப்பேரவையில் வரவு-செலவுக் கணக்கு வெளியிடப்பட்டவுடன், அபிவிருத்திக் கமிஷனர் ஒவ்வொரு மாவட்டம் சம்பந்தமாகவும் தேவைப்பட்ட தொகையைச் சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கு கிடைக்கும்படிச் செய்வார்.

5. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் எந்த அதிகாரி மானியம் அனுமதிக்க வேண்டுமென்பது.—ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000-க்கு மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்கள் இருப்பதினுல், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கிராம வீட்டு வரி ஈட்டு மானியத்தை ரெவினியூ டிவிஷனல் அலுவலர்கள் அனுமதிக்க வேண்டுமென அரசினர் தீர்மானித்துள்ளர்.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 132-வது பிரிவின்படிக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் செலுத்தப்படத்தக்க மானியத் தொகைகள் கருவூலத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு அதிகாரம் அளிக்கும் பொருட்டு ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு அரசினர் அனுமதி யளித்துள்ளனர். மானியத்தைச் செலுத்த அனுமதிக்கும் ஆணை இவ்வாணையுடன் இணைத்துள்ள 1-வது இணைப்பில் கண்ட நமூனுப்படி இருக்க வேண்டும்.

6. எந்த அடிப்படையில் அனுமதி ஆணை கொடுக்கப்பட வேண்டுமென்பது.—ஓர் அரையாண்டு முடிவடைந்தவுடன், பஞ்சாயத்துவளர்ச்சி அதிகாரி/துணைப் பஞ்சாயத்து

அதிகாரி இவ்வாணையின் II-வது இணைப்பில் கண்ட நமூனாவில் ஒவ்வொர் அரையாண்டுக் கால அளவுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்து சம்பந்தமாகவும் பிரத்தியேகமான ஓர் அறிக்கையை டிவிஷனல் பஞ்சாயத்து அலுவலருக்கு அனுப்ப வேண்டும். அந்த அறிக்கையுடன் III-வது இணைப்பில் கண்ட நமூனாவில் ஒரு ரசீதையும் அனுப்ப வேண்டும். அந்த ரசீது சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துத் தலைவரால் முறைப்படி கையெழுத்திடப்பட வேண்டும். பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலரின் அறிக்கை வந்தவுடன், டிவிஷனல் பஞ்சாயத்து அலுவலர் முன் சொன்ன அலுவலர் கொடுத்த தொகைகளைச் சரிபார்த்து, அவர் சிபார்சு செய்துள்ள மானியத் தொகை சரியானது எனச் சான்று அளிக்க வேண்டும்.

டிவிஷனல் பஞ்சாயத்து அலுவலரும், I-வது இணைப்பில் கண்ட நமூனாவில் அனுமதி ஆணையின் வரைவு ஒன்றைத் தயாரித்து, ரெவின்யூ டிவிஷனல் அலுவலரின் அங்கிகாரத்தைப் பெற்று அவருடைய பெயரில் அதைக் கொடுக்க வேண்டும். ஷெ ஆணையின் சுத்த நகல்கள் ரெவினியூ டிவிஷனல் அலுவலர் அல்லது அவருடைய சார்பில் டிவிஷனல் பஞ்சாயத்து அலுவலர் கையெழுத்திட வேண்டும்.

7. இந்தத் தொகை எவ்வாறு கிராமப் பஞ்சாயத்து நிதிக்கு வரவு வைக்க வேண்டுமென்பது.—ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சேர வேண்டிய தொகையானது "அரசாங்கக் கருவூலங்களில் பஞ்சாயத்து வைத்து வரும் பாங்க் கணக்கில் கணக்கெழுதுவதன் மூலம் செலுத்தப் பட்டதாகச் சரிக்கட்டப்பட வேண்டும்.

இணைப்பு I

ரெவினியூ டிவிஷனல் அலுவலர் அலுவலகம்,
தேதி.

எண்.

ரெவினியூ டிவிஷனல் அலுவலரிடமிருந்து
துணைக் கஜானா அலுவலருக்கு,

சென்னைக் கஜானா சட்டத் தொகுப்பு 1-வது காண்டம், 17-வது கஜானா விதியின் 2-வது ஆணைப்படி, (i) இவ்வாணை (ii) அதனுடன் இணைக்கப்பட்டு பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலரால் கையெழுத்துச் செய்யப்பெற்ற ரசீது ஆகியவற்றின் அத்தாட்சியின்மேல்............ பஞ்சாயத்துத் தலைவருக்கு ரூ............ .... (ரூபாய்.............மட்டும்) செலுத்தும்படி உமக்கு நான் இதனால் அதிகாரம் அளிக்கிறேன்.

2. ஷெ தொகை, உங்களுடைய கஜானா அல்லது துணைக் கஜானாவில் ஷெ பஞ்சாயத்துக் கணக்குகளுக்கு எழுதிச் சரிக்கட்டுவதன் மூலம் செலுத்தப்பட வேண்டுமே தவிர ரொக்கமாகச் செலுத்தப்படலாகாது. பஞ்சாயத்துக்கு கஜானாவில் அல்லது துணைக் கஜானாவில் கணக்குகள் இல்லையெனில், 1952-ம் வருஷம் மார்ச் மாதம் 13-ம் தேதி கல்வி-தல நிர்வாகத் துறையில் பிறந்த 7670/52-1 அரசாங்கக் குறிப்பை யொட்டி பஞ்சாயத்தின் பெயரில் புதிய கணக்கு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். கஜானாக் கணக்கை ஆரம்பிக்கும்போது அனுசரிக்க வேண்டிய சம்பிரதாயங்கள் அனைத்தும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்பில் அரசினர் நீக்கியுள்ளார்கள். ஷெ தொகை 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 132-வது பிரிவின்படி பஞ்சாயத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கிராம வீட்டுவரி ஈட்டு மானியமாகும். இதை "57. பல்வகை—f. உதவி மானியங்கள்—முதலியவை—8. பஞ்சாயத்துக்களுக்கான வீட்டுவரி ஈட்டு மானியம்" என்னும் தலைப்பின்கீழ் பற்றாக எழுத வேண்டும்.

3. தொகை சரிக்கட்டப்பட்டதைப்பற்றிய தகவலை...... ....மாவட்டக் கலெக்டருக்கு, அக்கௌன்டன்ட்-ஜெனரலுக்கும் அறிவிக்க வேண்டும். அதனுடன் தொகை செலுத்தப்பட்டதைப்பற்றிய சான்றிதழ் கஜானா அலுவலர் மூலம் அனுப்ப வேண்டும். அதைப்பற்றி இந்த அலுவலகத்திற்கும் உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும்.

ரெவினியூ டிவிஷனல் அலுவலருக்காக கீழ்க்கண்டவருக்கு நகல் அனுப்பப்படுகிறது :—

(1) தலைவர், பஞ்சாயத்து,
போஸ்டு, மாவட்டம்

(2) சென்னை அக்கவுன்டன்ட்-ஜெனரலுக்கு,

குறிப்பு.—(1) சென்னை கஜானா சட்டத் தொகுப்பு 1—வது காண்டம் 2-வது ஆணைப்படி ஷெ மானியம், இந்த அதிகாரப்பத்திரத்தின் மேல் சரிக்கப்படவேண்டும், சென்னை அக்கவுன்ட் ஜெனரலிடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற அவசியமில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

(2) சம்பந்தப்பட்ட கஜானா அலுவலர்களிடமிருந்து மேற்கொண்ட அதிகாரப்பத்திரம் எதுவும் பெறுமலே, துணைக்கஜானா அலுவலர்கள் மானியத்தைச் சரிகட்டலாம்.

(3) பஞ்சாயத்துக்களின் ரசீதுகளுக்கு முத்திரை தேவையில்லை.

(4) பஞ்சாயத்துத் தலைவர் மானியத்தைச் சரிக்கட்டுவதற்காக கஜானா அல்லது துணைக் கஜானாவுக்குக் கொடுத்த ரசீது இதனுடன் வைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு II

பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலர்.

பெறுவோர் :

ரெவினியு டிவிஷனல் அலுவலர்
(வட்டாரப் பஞ்சாயத்து அலுவலர் மூலம்).

ஐயா,

.... பஞ்சாயத்தில்
.... பஞ்சாயத்தில்
19 செப்டம்பர் 30-ம் தேதி/19 மார்ச் 31-ம் தேதி அரை ஆண்டு முடிய விதித்துள்ள வீட்டு வரி கேட்பு—வசூல்—நிலுவைக் குறிப்பை இத்துடன் சமர்ப்பிக்கையில் 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கிராம வீட்டு வரி ஈட்டு மானியமாகப் பஞ்சாயத்துக்குச் சேர வேண்டியதாகிற குறிப்பில் காட்டிய தொகைக்குச் சம தொகையை ஷெ பஞ்சாயத்துக்குக் கொடுக்கு

மீது சிபாரிசு செய்கிறேன். ஷை வீட்டு வரி வசூலில் கீழ்க்கண்ட வரிகள் எதுவும் சேரவில்லை யென்றும் உறுதி கூறுகிறேன். 1948-ம் ஆண்டு சென்னைப் பொது நூல் நிலையச் சட்டத்தின் கீழ் விதித்த நூல் நிலைய வரி அல்லது முன்பிருந்த 1920-ம் ஆண்டு சென்னை நாட்டாண்மைக் கழகச் சட்டத்தின் "IV-வது ஷெட்யூலின் 19-வது விதியின்கீழ் தண்ணீர் வழங்குதலுக்கு அல்லது விளக்கு வசதிக்கு கூடுதலாக விதிக்கும் வீட்டு வரி அல்லது 1939-ம் ஆண்டு சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 25-வது பிரிவின்படி விதிக்கும் தண்ணீர் வரி.

2. பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி கொடுத்த ரசீதுப் புத்தகம் இத்துடன் சேர்த்து அனுப்பியிருக்கிறது.

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி.

(பஞ்சாயத்துத் துணை அதிகாரி)

இணைப்பு III

தணிக்கைப் பதிவேடு வவுச்சர் எண்
பக்கம்

19 செப்டம்பர் 30-ம் தேதி/19 மார்ச் 31-ம் தேதி முடியும் அரை ஆண்டு காலத்திற்காக கிராம வீட்டு வரி ஈட்டு மானியமாக அதிகார பூர்வமாய்ப் செலுத்தப் பெறுவதற்குரிய.............................. ரூபாய்த் தொகையைப் பெற்றுக் கொண்டோம்.

கையொப்பம்

பதவிப் பெயர்

பஞ்சாயத்துத் தலைவர்.

மேற்கையெழுத்து

கையொப்பம்

பதவிப் பெயர்

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி.

ரூபாய்

கொடுக்கவும்.

கருவூல அதிகாரி

மாவட்டம்

தேதி கணக்காயர்.

(சென்னை, தலைமைக் கணக்காயர் அலுவலகப் பயனுக்காக.)

தணிக்கையாளர்.

மேலாளர்.

தல நிர்வாகத்துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதியிட்ட ஆணை எண்; 1381.

The following particulars regarding the ownership of GRAMA NALAM the monthly newspaper are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956 :

Form IV

(See Rule 8)

1. Place of publication	Fort St. George, Madras-9.
2. Periodicity of its publication :	Monthly.
3. Printers Name :	Sri C. D. Janakiraman, I.A.S., Controller of Stationery and Printing.
Nationality :	Indian
Address :	Government Press, Madras-1
4. Publishers Name :	Sri R. A. Gopalaswamy I.C.S., Secretary to the Government R.D. & L.A. Department.
Nationality :	Indian
Address :	Fort St. George, Madras-9.
5. Editors Name :	Sri S. Venkataswamy, M.A., Public Relations Officer R. D. & L. A. Dept.
Nationality :	Indian
Address :	Fort St. George, Madras-9.
6. Name and addresses of individuals who own the Newspaper and partners or Shareholders holding more than one per cent of the total capital.	Government of Madras, Fort St. George, Madras-9.

I, R.A. Gopalaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) R. A. Gopalaswamy,
Publisher.

Dated 1—3—'62

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

"உயிரும் உரமும் பெற்ற மக்களாட்சி"

[1951-ம் ஆண்டுமுதல் 1961-ம் ஆண்டுவரை அமைந்துள்ள பத்து ஆண்டுகள் நமது சுதந்திரச் சகாப்தத்தின் பொற்காலம் ஆகும். நாடு நலம்பெறவும், தமிழகம் தழைத்தோங்கவும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தற்போது மூன்றாவது திட்ட வேலை நடைபெற்று வருகின்றது. சென்ற பத்து ஆண்டுகளில் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை விளக்கிக்காட்டும் வகையில் தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறையினர் "பத்தாண்டுகளில்" என்ற ஒரு வெளியீட்டினை வெளியிட்டுள்ளனர். அந்த வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளைக் கீழே காணலாம்—ஆசிரியர்.]

"நாட்டில் பல துறைகளிலும் நடக்கும் அபிவிருத்தி வேலைகள் கிராமங்களுக்கு எட்ட வேண்டும்; கிராம மக்கள் அவ் வேலைகளில் பங்குகொள்ள வேண்டும்; அவற்றின் முழுப் பயனையும் பெறவேண்டும். இவையே சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டத்தின் லட்சியங்களாகும்.

தமிழ்நாட்டில் அரசாங்கத்தின் ஆக்கவேலைத் திட்டங்களை வெற்றியோடு செய்துமுடிக்க மக்கள் பேரார்வம் காட்டிவந்திருக்கின்றனர். இன்று நமது மாநிலமெங்கும் பஞ்சாயத்து ஆட்சி முறை அமுலுக்கு வந்துள்ளது.

மாநிலத்தில் மொத்தம் 373 பஞ்சாயத்து யூனியன்களும், 12,522 பஞ்சாயத்துக்களும் இயங்கி வருகின்றன. வேளாண்மை, கைத்தொழில், கல்வி, குடிநீர் வசதி, மாதர்—குழந்தைகள் நலம், மருத்துவம், சுகாதாரம், குடிமராமத்து முதலிய பல்வேறு பொறுப்புக்களை கிராமப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொண்டுள்ளன. முக்கியமாக, உணவுப் பெருக்கத்திற்கான திட்டங்களை உருவாக்கி நடத்தும் பொறுப்பை பஞ்சாயத்து ஆட்சி இப்போது புதிதாக ஏற்றுக்கொண்டுள்ளது. பொறுப்பும், அதிகாரமும் ஒரே இடத்தில் குவியாமல் பல்வேறு இடங்களிலும் பரவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

முன்பிருந்த மாவட்டக் கழகங்களும், இதர ஸ்தல ஸ்தாபனங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை, துப்புரவு, போக்குவரத்து, கல்வி ஆகியவைகளைக் கவனித்து வந்தன. அவற்றின் நிதி வசதியும் குறைவாக இருந்தது. அப்போது பஞ்சாயத்துக்கும், மாவட்டக் கழகத்திற்கும் இயற்கையான தொடர்பு ஒன்றும் இருக்கவில்லை.

இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள், கிராமப் பஞ்சாயத்தின் கூட்டுறவு யூனியனாக விளங்குகின்றன. வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களைக்கொண்டு பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அமைப்பிலே மட்டுமல்லாமல், பொறுப்புகள், நிதி வசதிகள் ஆகியவைகளிலும் பெரிய மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களுக்கு நிலவரி செஸ் போன்ற வருவாயுடன், அரசாங்கமும் மானியங்கள் அளிக்கிறது. திட்டமிட்ட அபிவிருத்தியில் பங்குகொண்டு, இந்த நிறுவனங்கள் பணியாற்றுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டின் முன்னேற்றத்துக்கான ஆக்கப்பணிகளைத் திட்டமிட்டுச் செயலாற்றும் பொறுப்பும், உரிமையும் இன்று மக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மையான மக்களாட்சி. உயிரும் உரமும் பெற்ற மக்களாட்சி."

மாறு சிபாரிசு செய்கிறேன். இவ் வீட்டு வரி வசூலில் கீழ்க்கண்ட வரிகள் எதுவும் சேரவில்லை யென்றும் உறுதி கூறுகிறேன். 1948-ம் ஆண்டு சென்னைப் பொது நூல் நிலையச் சட்டத்தின் கீழ் விதித்த நூல் நிலைய வரி அல்லது முன்பிருந்த 1920-ம் ஆண்டு சென்னை நாட்டாண்மைக் கழகச் சட்டத்தின் "IV-வது ஷெட்யூலின் 19-வது விதியின்கீழ் தண்ணீர் வழங்குதலுக்கு அல்லது விளக்கு வசதிக்கு கூடுதலாக விதிக்கும் வீட்டு வரி அல்லது 1939-ம் ஆண்டு சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 25-வது பிரிவின்படி விதிக்கும் தண்ணீர் வரி.

2. பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி கொடுத்த ரசீதுப் புத்தகம் இத்துடன் சேர்த்து அனுப்பியிருக்கிறது.

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி.

(பஞ்சாயத்துத் துணை அதிகாரி)

இணைப்பு III

தணிக்கைப் பதிவேடு   வவுச்சர் எண்

பக்கம்

19   செப்டம்பர் 30-ம் தேதி/19   மார்ச் 31-ம் தேதி முடியும் அரை ஆண்டு காலத்திற்காக கிராம வீட்டு வரி ஈட்டு மானியமாக அதிகார பூர்வமாய்ப் செலுத்தப் பெறுவதற்குரிய...................... ரூபாயத் தொகையைப் பெற்றுக் கொண்டோம்.

கையொப்பம்

பதவிப் பெயர்

பஞ்சாயத்துத் தலைவர்.

மேற்கையெழுத்து

கையொப்பம்

பதவிப் பெயர்

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி.

ரூபாய்

கொடுக்கவும்.

கருவூல அதிகாரி

மாவட்டம்

தேதி   கணக்காயர்.

(சென்னை, தலைமைக் கணக்காயர் அலுவலகப் பயனுக்காக.)

தணிக்கையாளர்.

மேலாளர்.

தல நிர்வாகத்துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதியிட்ட ஆணை எண்; 1381.

The following particulars regarding the ownership of GRAMA NALAM the monthly newspaper are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956 :

Form IV

(See Rule 8)

1. Place of publication	Fort St. George, Madras-9.
2. Periodicity of its publication :	Monthly.
3. Printers Name :	Sri C. D. Janakiraman, I.A.S., Controller of Stationery and Printing.
Nationality :	Indian
Address :	Government Press, Madras-1
4. Publishers Name :	Sri R. A. Gopalaswamy I.C.S., Secretary to the Government R.D. & L.A. Department.
Nationality :	Indian
Address :	Fort St. George, Madras-9.
5. Editors Name :	Sri S. Venkataswamy, M.A., Public Relations Officer R. D. & L. A. Dept.
Nationality :	Indian
Address :	Fort St. George, Madras-9.
6. Name and addresses of individuals who own the Newspaper and partners or Shareholders holding more than one per cent of the total capital.	Government of Madras, Fort St. George, Madras-9.

I, R,A. Gopalaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) R. A. Gopalaswamy,
Publisher.

Dated 1—3—'62

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

"உயிரும் உரமும் பெற்ற மக்களாட்சி"

[1951-ம் ஆண்டுமுதல் 1961-ம் ஆண்டுவரை அமைந்துள்ள பத்து ஆண்டுகள் நமது சுதந்திரச் சகாப்தத்தின் பொற்காலம் ஆகும். நாடு நலம்பெறவும், தமிழகம் தழைத்தோங்கவும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தற்போது மூன்றாவது திட்ட வேலை நடைபெற்று வருகின்றது. சென்ற பத்து ஆண்டுகளில் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை விளக்கிக்காட்டும் வகையில் தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறையினர் "பத்தாண்டுகளில்" என்ற ஒரு வெளியீட்டினை வெளியிட்டுள்ளனர். அந்த வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளைக் கீழே காணலாம்—ஆசிரியர்.]

"நாட்டில் பல துறைகளிலும் நடக்கும் அபிவிருத்தி வேலைகள் கிராமங்களுக்கு எட்ட வேண்டும்; கிராம மக்கள் அவ் வேலைகளில் பங்குகொள்ள வேண்டும்; அவற்றின் முழுப் பயனையும் பெறவேண்டும். இவையே சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டத்தின் லட்சியங்களாகும்.

தமிழ்நாட்டில் அரசாங்கத்தின் ஆக்கவேலைத் திட்டங்களை வெற்றியோடு செய்துமுடிக்க மக்கள் பேரார்வம் காட்டிவந்திருக்கின்றனர். இன்று நமது மாநிலமெங்கும் பஞ்சாயத்து ஆட்சி முறை அமுலுக்கு வந்துள்ளது.

மாநிலத்தில் மொத்தம் 373 பஞ்சாயத்து யூனியன்களும், 12,522 பஞ்சாயத்துக்களும் இயங்கி வருகின்றன. வேளாண்மை, கைத்தொழில், கல்வி, குடிநீர் வசதி, மாதர்—குழந்தைகள் நலம், மருத்துவம், சுகாதாரம், குடிமராமத்து முதலிய பல்வேறு பொறுப்புக்களை கிராமப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொண்டுள்ளன. முக்கியமாக, உணவுப் பெருக்கத்திற்கான திட்டங்களை உருவாக்கி நடத்தும் பொறுப்பை பஞ்சாயத்து ஆட்சி இப்போது புதிதாக ஏற்றுக்கொண்டுள்ளது. பொறுப்பும், அதிகாரமும் ஒரே இடத்தில் குவியாமல் பல்வேறு இடங்களிலும் பரவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

முன்பிருந்த மாவட்டக் கழகங்களும், இதர ஸ்தல ஸ்தாபனங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை, துப்புரவு, போக்குவரத்து, கல்வி ஆகியவைகளைக் கவனித்து வந்தன. அவற்றின் நிதி வசதியும் குறைவாக இருந்தது. அப்போது பஞ்சாயத்துக்கும், மாவட்டக் கழகத்திற்கும் இயற்கையான தொடர்பு ஒன்றும் இருக்கவில்லை.

இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள், கிராமப் பஞ்சாயத்தின் கூட்டுறவு யூனியனாக விளங்குகின்றன. வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களைக்கொண்டு பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அமைப்பிலே மட்டுமல்லாமல், பொறுப்புகள், நிதி வசதிகள் ஆகியவைகளிலும் பெரிய மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களுக்கு நிலவரி செஸ் போன்ற வருவாயுடன், அரசாங்கமும் மானியங்கள் அளிக்கிறது. திட்டமிட்ட அபிவிருத்தியில் பங்குகொண்டு, இந்த நிறுவனங்கள் பணியாற்றுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டின் முன்னேற்றத்துக்கான ஆக்கப்பணிகளைத் திட்டமிட்டுச் செயலாற்றும் பொறுப்பும், உரிமையும் இன்று மக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவே உண்மையான மக்களாட்சி. உயிரும் உரமும் பெற்ற மக்களாட்சி."

Regd. No. M. 7277.

©
தமிழ்நாடு அரசாங்கம் 1962.

'இராம ராஜ்யம்'

காந்தி யடிகள் காண விரும்பும்
இராம ராஜ்யம் எதுவெனக் கேளீர் !
பக்தர்தம் பாஷையில் பகருவதாயின்
இறைவ னுடைய ஏகாதி பத்தியம்
இப்புவி மீது ஏற்படு வதுவே.
அரசியல் மொழியில் அதன்பொருள் யாதெனில்,
சர்வ ஜனங்களின் சம்மதம் பெற்ற
ஆட்சி முறையே அங்கு நடைபெறும்.
சுகவாழ்க் கையிலோ சொத்துரி மையிலோ
ஏற்றத் தாழ்வு ஏதுமங் கில்லை ;
ஜாதிக் கொடுமையும், சமயப் பூசலும்
பால்வேற் றுமையும், இனவேற் றுமையும்
பண்டைக் காலப் பழங்கதை யாகி
'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'
என்றே அங்குளோர் எண்ணி யிருப்பர்.
மாநில முழுவதும் மக்களின் உடைமையாம் ;
மக்களெல் லோரும் மன்னர்க ளாவர்.
எளிதாய் விரைவாய் எவர்க்கும் ஆங்கே
நிலைதவ றுத நீதி கிடைக்கும் ;
எழுத்தில் பேச்சில் இறைவனைத் தொழுவதில்
சுதந்திரச் சோதி சுடர்விட் டொளிரும் ;
'இத்தகை ராஜ்யம் ஏற்படுதற்கு
தத்தம் பணியைத் தாமே செய்திடும்
கடனறி மக்களே காரண' மென்ற
காந்திஜி வாசகம் கருத்திடைக் கொண்டு
இன்ப உலகாம் இராம ராஜ்யம்
நிலைபெற அனைவரும் நித்தமும் உழைப்போம்.

—கோ. வே.